
பல் பொருட்குண நூல்



கழக வெளியீடு

கழக வெளியீடு : சுகூசு

பல்பொருட் சூளாமணி நூல்

ஆசிரியர்

எஸ். எஸ். தேவர்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி : : சென்னை.

முதற் பதிப்பு: ஏப்பிரல் 1948

Published by
THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.
TIRUNELVELI & MADRAS

Printed Pages 1-100 at The Central Art Press, Madras and Pages i to viii Printed at Progressive Printers, Madras.

முன்னுரை

[மருத்துவன் சக்கரவர்த்தி ஏகம்பரனூர், சென்னை]

தமிழகம்

முதன் முதலாகக் கண்ட மக்கள் வாழ்க்கைக்குத் தகுதியுள்ள நிலப்பரப்பு, உலகத்தின் நடுக்கோட்டில் அமைந்ததும், அதைச் சார்ந்ததும் ஆகிய பழந்தமிழ்நாடே. ஆராய்ச்சியாளர்களும் இதனையே வலியுறுத்துகின்றனர். இத்தமிழ்நாடு கலைவளம், ஒழுக்கம், வாணிகம் முதலிய பலதுறைகளிலும் சீரும் சிறப்பும் எய்தி விஞ்சியிருந்தது. பன்னூறு ஆண்டுகளுக்குமுன் தமிழகத்தின் பெரும்பகுதி கடல் கோளால் விழுங்கப்பட்டது. எனினும், தன் உயரிய நிலையில் மாறாது ஒளிர்ந்தது.

தமிழ்மொழி

கதிரவன் தன் ஒளிக்கதிர்களை உலகிடைப் பரப்பித் தன்னை விளக்குகின்றான்; தன்னைச் சூழ்ந்துள்ள பொருள்களையும் விளங்கச் செய்கின்றான். அதைப்போல், தமிழும் ஒப்புயர்வில்லாக் கலைத்துறை வளத்தால தனக்கொரு தனிப்புகழ் பெற்று மிளிர்ந்தது. தன்னொடு தொடர்புடைய பிறமொழிகள் செம்மையுறத் தன் இலக்கண இலக்கியங்களை வழங்கி அவற்றையும் மிளிரச் செய்தது. தொன்மையாலும், இயல்பாகவே திருந்திய செம்மையாலும், நுண்மையாலும், இனிமையாலும் சிறந்தது செந்தமிழ் மொழியே.

மருத்துவக்கலை

தமிழ்க்கலைகள் பலவற்றுள்ளும் தனிச்சிறப்பு வாய்ந்துள்ள மருத்துவக்கலை உயிர்நாடி போன்றது. விண், வளி, தீ, நீர், மண் என்னும் ஐம்பூத இயற்கையும் அவற்றின் நிலைவேறுபாடுகளால் உண்டாகும் செயற்கையும் தெரிவிப்பது. இவற்றிற்கு ஏற்பக் காலம் இடம் முதலியவற்றிற்குப் பொருந்த உண்டாகும் உணவுப் பொருள்களும் அவற்றை ஆக்கி உண்ணும் முறைகளும், காலம் இட முதலியவற்றிற்குப் பொருந்தா உணவுகளால் உண்டாகும் நோய் முதலியவும் விரித்து விளக்குவது.

நோய் நீக்கத்துக்கு வேண்டும் மருந்துகளும், நோய்வாராமல் தடுக்கும் தடை மருந்துகளும், உடலில் வலுக்குறைவு ஏற்படின்,

அவ்வலுவினை நிரப்புதற்குரிய நிரப்பு மருந்துகளும், நீண்டநாள் இனிது வாழ்வதற்கு ஏற்ற வாழ்க்கை மருந்துகளும் விரிவாய் விளக்குவது. 'உடம்பாரழியின் உயிரார் அழிவர்' ஆதலின் உடலை வளர்க்கும் முறையைச் சொல்லுவதால் உயிருக்கு உற்ற துணையாவது.

அருந்தல் பொருந்தல் வகையால் வீரியம் குறையும்; அதனால் வாத, பித்த, ஐப் பகுதி மாறுபாடெய்தும். அம் மாறுபாட்டால் நோய் உண்டாம். அந்நோய்களை மறுக்கவந்ததே மருந்துகளாகும். உலகத்துக் காணும் பச்சிலை உப்பு, நச்சுப்பொருள்கள் (Poisons) உலோகங்கள், உடற்பொருள் சத்துக்கள் பிறவுமாகிய பொருள்கள் ஒவ்வொன்றும் மருந்துகளாக்கவும் நோய்நீக்கவும் இன்றியமையாதமைந்திருக்கின்றது.

இவைகள் தனிப்பொருள்கள், பல சேர்ந்த கலவைப் பொருள்கள், இவற்றினின்று எடுத்த சத்துப்பொருள்கள் ஆகக்கொண்டு மருந்து செய்வர். அப்படிச் செய்யும்போது அம்மருந்து மூன்று வகைப்படும். மருந்து உறை என்றும் வழங்கப்பெறும். அவை, உயர்வுறை, மக்களுறை, சூருறை என வழங்கப்பெறும்.

மருந்து பயன்படுத்தும் முறை

வாதகுண நோய்க்கு வாதகுண மருந்து, பித்தகுண நோய்க்குப் பித்தகுண மருந்து, ஐயகுண நோய்க்கு ஐயகுண மருந்து கொடுத்து நீக்குதல். இவற்றிற்கு ஒப்புறை என்பது பெயர்.

வாதகுண நோய்க்குப் பித்தகுண மருந்தும், பித்தகுண நோய்க்கு வாதகுண மருந்தும் ஐயகுண மருந்தும், ஐயகுண நோய்க்குப் பித்தகுண மருந்தும் கொடுத்து நீக்குதல். இவற்றிற்கு எதிருறைகள் என்பது பெயர்.

வாத, பித்த, ஐய தொந்த நோய்களுக்குக் கலப்பு மருந்து கொடுத்து நீக்குதல். வாத பித்த குணப்பொருள்கள் வாதகுணப் பொருளோடு இணைக்கும்போது வாதகுணமும், பித்தகுணப் பொருளோடு சேர்க்கும்போது பித்தகுணமும் கலப்பால் மிகும். அதனால், குறித்த தனி நோயைப் போக்கும் ஒரு சரக்கை முதன்மையாகக் கொண்டு அடுத்த பல சரக்குகளைச் சேர்த்துக்கொடுப்பது கலப்பு மருந்தாகும். இதற்குப் பெயர் கலப்புறை என்ப. குறித்த ஒப்புறை எதிருறை, கலப்புறை என்னும் மூவகை மருந்துகளும் இன்னின்ன நோய்க்கு இன்னவாறுள்ள மருந்தே கொடுக்கவேண்டு மென்று அறுதியிட்டுக் கூறப்பட்டுள்ளது.

அறிவர்கள் (சித்தர்கள்)

மிகச்சிறந்த தமிழ் மருத்துவக்கலையைத் தமிழகத்திற்குத் தந்தவர்கள் நம்முன்னோர்களாகிய அறிவர்களே. அவர்களே சித்தர்கள் என்று அழைக்கப்படுவார்கள். அவர்கள் செய்வகாட்டமும், அந்நாட்டத்தால் மனவலிமையும், பேரறிவும், பேராற்றலும் வாய்க்கப்பெற்றவர்கள். இஞ்ஞான்றை அறிவியல் துறைவல்லார் பொறிகளாகிய (இயந்திரம்) கருவிகளின் துணைக்கொண்டு பொருள் நுட்பங்களையும், அப்பொருள்களின் பண்புகளையும், அப்பொருள்கள் எவ்வெம்முறையில் கலந்திருக்கின்றன என்பதையும் பிரித்துப் பார்த்தலும், பிரித்தவற்றை முன்போல் சேர்த்தமைத்தலும் செய்கின்றனர். பொருள்களின் பண்பு, அவற்றால் நேரும் நலம் பொலம் முதலியவற்றையும் முறையாகக் கூறுகின்றார்கள். சிலவற்றின் பண்புகள் கருவிகளுக்கும் அப்பால் பட்டவாகவும் கூறுகின்றார்கள். இவர்கள் பொருட்பண்புகளை எவ்வாறு கூறுகிறார்களோ அதில் ஒரு சிறிதும் வழுவாமல் நம் பழந்தமிழ் அறிவர்களும் கூறியுள்ளார்கள். அக்கூற்றுக்களை இன்றும் அவர்கள் செய்த நூற்களில் காணலாம். அப்பொருள்களை நாம் பயன்படுத்துவதிலும் அவ்வுண்மை நமக்குப் புலனாகும்.

இவ்வகையான பேராற்றலுள்ள அறிவர்களாகிய நம் முன்னோர்களுக்கு யோகப் பழக்கத்தால் மனவலியும், மனவலியால் காலம் இடம் வரையறுக்கப்படாமல் எல்லா இடத்தும் முக்காலத்து நிகழ்ச்சியோடு உணரும். ஒரு தனிமாண்பும் அமைந்திருந்தன. மேலும், இப்பொழுது வான ஊர்தியிற் கருதிய இடம செல்லுமாறுபோல, அவர்கள் யோகப்பழக்கத்தால் நினைத்த இடம் சென்றுமீளும் சிறப்புப் பெற்றிருந்தனர். இவ் உண்மைகளை நம்முடைய சிற்றறிவால் அளவிடுதல் முடியாது. அப்போாற்றல் வாய்ந்த அறிவோரை அன்பாலன்றி அறிவாராய்ச்சியாற் காண்டலும் முடியாது.

இத்துணைச் சிறந்த அறிவர்களால் - சித்தர்களால் ஆக்கப்பட்டு நெடுநாள் கையாளப்பட்டுப் பயன் தந்த தமிழ் மருத்துவம் இப்பொழுது என்ன நிலையில் இருக்கின்றது ? அந்தோ ! நினைத்தால் உள்ளம் தாங்கொணாக் கலக்கம் உறுகின்றது. சொல்ல முயன்றால், நாக் குழறுகின்றது. எழுத முயன்றால் கை நடுங்குகின்றது. ஏன் இவ்வளவு தாழ்நிலை? உலகிலே சிறந்த நம் தமிழகம் கடல் கோட்பட்டது, வேற்றுநாட்டு நிலைபேறில்லாப் புலம் பெயர் மாக்கள் (நாடோடிகள்) அண்டிப் பிழைக்க வந்து களையாய் மண்டியது, வந்தோர் நம் மன்னரை மயக்கித் தம் கொள்கைகளையும் கருத்துக்களையும்

மெல்ல மெல்ல நம் நூலகத்துப் புகுத்தி நம் நூற்களைப் பாழ்படுத்தியது, தங்கள் நூலுக்கும் தங்களுக்குமே ஆக்கந்தேடி அடிமைப் படுத்தியது, பிறநாட்டு மன்னர் படை எடுத்துப் பெயர்ந்தது, பிற நாட்டார் வென்று நிலையாக நின்று அரசு நடத்தியது, முதலிய பல காரணங்கள் கூறலாம்.

எனினும், நம்மவர்களுக்கு நாட்டுப்பற்று, மொழிப்பற்று, நாளும், பிறமொழி மயக்கால் குறைந்து, அதனால் ஒற்றுமையும் முன்னேற்றமும் சிதைந்து தம் உணர்ச்சியற்றுச் சார்ந்தார் வழிப்பட்டு ஒழுகும் அடிமை யுணர்ச்சி வேரூன்றிவிட்டதே மறுக்கமுடியாத பெருங்காரணமாகும்.

இனிய தமிழ்மொழியிற் காணப்பெறும் எல்லாக் கலைத் துறைகளையும் வளரச்செய்து தமிழுக்குப் பேராக்கந் தேடுவதே தம் பெருங் கடனாகக்கொண்டு உழைக்கும் "தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தார்" உயரிய தமிழ் மருத்துவக்கலைக்கும் தொண்டு செய்ய முன்வந்துள்ளார்கள்.

அடிப்படையாகப் "பொருட்குண நூல்" என்னும் உரை நடை நூலொன்று, அகவை முதிர்ச்சியும் தகவும் நிறைந்த அறிவு சான்ற சேலை. திரு. சகதேவ முதலியாரவர்களைக்கொண்டு வெளியிட்டுள்ளார்கள். இந்நூலில் சில திருத்தங்கள் எம்மால் செய்யப் பட்டுள்ளன.

இந்நூல் பெருமக்களுக்கும், மருத்துவர்களுக்கும் பெரிதும் பயன்படு முறையில் அமைந்துள்ளது. இதன்கண் நோய்வராமல் தடுக்கும் முறை, வந்த நோயின் வாயி லறிந்து உடன் நீக்கும் முறை முதலிய பலவும் விரிவாகக் காணலாம். இந்நூலைத் தமிழகம் ஏற்று ஊக்கு முறையிலிருந்து தொடர்ந்து படிப்படியாகப் பல அருந்தமிழ் மருத்துவ நூல்கள் அவர்களால் வெளிவந்து, தமிழுக்கும், தமிழ் மருத்துவத்துக்கும் புத்துயிரும் பேராக்கமும் செய்யும். தமிழ் மருத்துவர்களும் ஏனைய மருத்துவர்களின் மிக்கு ஏற்றமுற்று இன் தமிழ்நாட்டுக்குப் பெரிதும் பயன்பெறுவர். இவற்றிற்கு வேண்டும் அருளை ஆண்டவன் புரிவானாக.

"மூன்று கண்டலை நான்கு முகங்கள்
ஆன்ற ஐந்திங் காறு கையுடல்
கான்ற வெட்டுக் கால்பத் தெய்தி
மாண்ட மருத்துவன் மாற்றுவன் நோயே."

பொருள் அடக்கம்

பல் பொருட்குண நூல்

௧. ஐம்முதற் பொருட் குணங்கள்

1. வான் (ஆகாயம், வெளி) உலகமும் உலகப் பொருள்களும் இதன்கண் அடக்கம்.
2. வளி (காற்று) நாவறட்சி, உடல் வெப்பு, இளைப்பு, போக்கும்; இனிப்புச் சிறுநீர்ப் (மதுமேகம்) புண், காய்ச்சல், கண்ணோய் இவைகட்கு ஆகாது.
3. தீ கண்டைக்கால் என்கிற சிறு தொடைநோய், உடற்கடுப்பு, வாத ஐ (சீதளம்) பற்றிய நோய்கள் இவைகளைத் தீர்க்கும்.
4. நீர் கண்சூடு, பித்தம், உடல் வெப்பு, பித்த குன்மம், வெட்டுப்புண் செந்நீர் (இரத்தம்), சொறி-போக்கும்; பற்களை உறுதிப்படுத்தும், விந்து வளரச்செய்யும்.
5. மண் கட்டி கரைக்கும், வாதவீக்கம் போக்கும்; இதனைத் தின்றால் பாண்டுநோய் உண்டாகும்.

௨. ஐவகை நிலத்தின் குணங்கள்

1. நெய்தல் (கடற்கரை நிலம்) பித்த வாயுக்கு இடமாகும். உடல் தடிப்பிக்கும்; யானைக்கால், குடல் அண்ட வளர்ச்சி உணடாக்கும்.
2. மருதம் (வயல் நிலம்) வாதபித்த ஐகளின் குற்றங்களைப் போக்கும்; பிணிகள் யாவும் அணுகா.
3. முல்லை (காட்டு நிலம்) பித்தத்துக்கு இடம்; அதனுடன் வாதமும் பொருந்தும்; இவற்றால் பற்பல நோயுண்டாம்.
4. குறிஞ்சி (மலை நிலம்) ஐ நோய்க்கிருப்பிடம்; காய்ச்சல் வயிற்றுக் கட்டிகள் உண்டாம். குறிஞ்சி நிலப் பொருள்கள் வன்மையுடையவை.

5. பாலை (மணல் நிலம்) முவ்வுடற் குற்றங்கட்கும், ஏனைய துன்பங்கட்கும் இடமாம்.

௩. பலவகை நீர்க் குணங்கள்

1. அடவிநீர் (காடு) மிகு ஐ, உடற்பாரிப்பு, இளைப்பு; உடல், வயிறு, நா இவைகளில் வெப்பம்; தலைபளு, வலிய கொடுங்காய்ச்சல் இவைகளை உண்டாக்கும்.
2. அருவிநீர் வெள்ளை, இரத்த பித்த நோய் இவற்றை நீக்கும்; ஐ உண்டாக்கும்; உடல்வன்மை தரும்.
3. ஆற்றுநீர் வாதபித்த ஐ நோய்கள் போக்கும்; நாவறட்சி நீக்கும்; பித்த நோய்கள் அகற்றும்; விந்துமிகுக்கும்.
   (அ) கங்கைநீர் உட்சூடு, மந்தத்தி, ஈளை, மிகுபித்தம், மிகுவாதம், சிழ்வெள்ளை, உடல் எரிச்சல், நாவறட்சி இவற்றைப் போக்கும்.
   (ஆ) காவிரிநீர் வயிற்றுப்பொருமல், இருமல், இரைப்பு, வீக்கம், சளிக்கட்டு, இளைப்பு, நீர்க்குற்றம், செந்நீர்க்குன்மம், நாவறட்சி இவற்றை நீக்கும்; உடலொளி தரும்.
   (இ) கோதாவரிநீர் முக்குற்றம் (திரிதோஷம்), பல்வகைச் சொறி, நடுக்கற்காய்ச்சல் - போக்கும்.
   (ஈ) சித்திரநதிநீர் உடல் நோக்காடு, கரப்பான், வாந்தி, உடற்குத்தல், வயிற்றுவலி, சிறுநீர் நோய், முக்குற்றம், மிகுவாதம், சதைவளர்ச்சி - போக்கும்.
   (உ) சிந்துநதிநீர் உடல் குடைச்சல், அறிவு மயக்கம், மேகநோய், புண், வியர்வை, விந்துகுறை, என்புக் காய்ச்சல், வெள்ளை, சிறுநீர்ச் சிக்கல், மிகு நாவறட்சி - போக்கும்.
   (ஊ) தாமிரபரணிநீர் பலகாய்ச்சல், மிகு ஐ, கண்புகைச்சல், உட்காய்ச்சல், உயிர்ப்புநோய், ஈளை, என்புருக்கி, கைகால் எரிவு, மிகு நாவறட்சி இவற்றை நீக்கும்.

(எ) துங்கபத்திரிநீர் நாவறட்சி, என்புருக்கி, கரப்பான், சுவையின்மை, விந்துகுறை, கண்புகைச்சல், இருமல், நீரடைப்பு, உடல் நிறமாற்றம் - போக்கும்.

(ஏ) நருமதைநீர் வாந்தி, காய்ச்சல், விக்கல், காமாலே, வயிற்றுப்பொருமல், கைகாலெரிவு, நீர்க்கட்டு, கோழை, முக்குற்றச்சேர்க்கை - இவை போக்கும்.

(ஐ) பச்சையாற்றுநீர் பொடி இருமல், இரைப்பு, ஈளை, மிகுவாதம், செந்நீர்க் கடுப்பு, காய்ச்சல் - உண்டாக்கும்.

(ஒ) யமுனைநீர் மிகுகாய்ச்சல், வெண்குட்டம், இருமல், வெள்ளை, நாவறட்சி, பித்தவாந்தி, பெருமூச்சு, அயர்ச்சி, விந்துகுறை, வெண்பாண்டு - போக்கும்.

(ஓ) வைகைநீர் வாதமேகம், மண்டலகுட்டம், சோகை, கரப்பான், உடலெரிச்சல், உதறுகால், விந்துகுறை, சிலநஞ்சு இவை நீக்கும்.

குறிப்பு:— வற்று ஆற்றுநீர் உடலழகு தரும்.

4. இளநீர்

(அ) அடுக்கிளநீர் தூக்கத்துக்குமுன் இவ்விளநீருண்டால் மிகுஈளை, மலப்புழு போக்கும்; நல்லது.

(ஆ) கருவிளநீர் மிகு ஐ, புழுப்புண், கரப்பான் இவற்றை நீக்கும்; ஒளியும் களிப்பும் உண்டாம்.

(இ) கேளி இளநீர் செந்நீர்மேகம், மலப்பூச்சி, மிகு நாவறட்சி, பசியாமை, கரப்பான், மிகுகாய்ச்சல் இவை நீக்கும்.

(ஈ) செவ்விளநீர் மிகுபித்தம், நாவறட்சி, வழிநடை இளைப்பு, அயர்வு, ஈளை இவை நீக்கும்.

(உ) சோரி இளநீர் செந்நீர்நிற இளநீரால் விக்கம், நீர்ப்பாம்புப்பூச்சி, சிறுபூச்சி இவைபோம். ஒளியும், தெளிவும் உண்டாம்.

(ஊ) பச்சை இளநீர் சீழ்வெள்ளை, பழையகாய்ச்சல், சளி, எரிபூச்சி, யானைச்சொறி, கண்ணோய் நீக்கும்.

(எ) பழைய இளநீர் நீரேற்றம் முதலியன உண்டாக்கும்.

(ஏ) புதிய இளநீர் மிகுபித்தம் நீக்கும்.

(ஐ) மஞ்சள் கச்சி இளநீர் மிகுபித்தம், விக்கம், ஐ, பழைய காய்ச்சல் இவை நீக்கும்.

(ஒ) உண்பின் இளநீர் வாதபித்தம் தணிக்கும், தனிப் பித்தம் நீக்கும்; மலம் கழிக்கும், பசியுண்டாக்கும், ஒளிதரும், நோய் அணுகவொட்டாது.

(ஓ) உண்முன் இளநீர் பசிநீக்கும், குன்மம் உண்டாக்கும், மாலை எரிப்பூச்சி ஒழிக்கும்.

(ஔ) காய்ச்சியாறிய இளநீர் இருமல், ஐ, வறட்காய்ச்சல் இவை போக்கும்.

5. உப்புநீர் ஓடுவாயு, பலகாற் சிற்றுணவு, மிகுபித்தம், வாயூறல், இவை மிகுக்கும்; குடல்வளருநோய் நீக்கும்.

6. ஊற்றுநீர் மிகுபித்தம், மிகுநாவறட்சி தணிக்கும்.

7. ஊற்றோடைநீர் நோய்களெல்லாம் நீக்கும்.

8. ஏரிநீர் வாயு உண்டாக்கும்.

9. ஓடைநீர் நாவறட்சி தரும், தோள்வலிமை கொடுக்கும்.

10. கடல்நீர் வயிற்றுநோய், பெருநோய், உடற்குடைச்சல், செந்நீர்க்குன்மம், வாதகுன்மம், நீராமைக்கட்டி, பெருவயிறு, நுரையீரல்நோய் இவை நீக்கும். காய்ச்சியுண்டால்—வாதகுன்மம், குடற்கரிநோய், மலநீர்க்கட்டு, உழைப்புநோய்கள், உடற்கடுப்பு, செந்நீர் நோய், கம்பவாதம், நாக்குப்பிடிப்பு, சோர்வு, பல் நோய், சந்நி இவை நீக்கும்.

11. கரிய நீர் வாந்தி, கரப்பான், சூடு, எரிவு, மார்புச்சளி, ஈளை, பெருமூச்சு, விடாக்காய்ச்சல், புளியேப்பம், நீரேற்றம், நாவறட்சி, நடுக்கல் நீக்கும்; பசிதரும்.

12. காடிநீர் பித்தமயக்கம், சோகை, செரியாமை கழிச்சல் இவை போக்கும்; மருந்தின் நற்குணங்கள் கெடுக்கும்.

13. கிணற்றுநீர் மிகுவெப்பம், எரிச்சல், சூலை, இடுப்புக் குடைச்சல், மயக்கம், வீக்கம்; பித்தம், பெருமூச்சு, இவை நீக்கும்; இறைப்பிலாக் கிணற்றுநீர் ஈளை வளர்க்கும்.

14. குளத்துநீர் வாதநோய் மிகுக்கும்; இனிப்புநீர் நோயையும், ஐயும் உண்டாக்கும்; நீர்வரத்துப் போக்குள்ள குளத்து நீரினுல் நோயில்லை.

(அ) தாமரைக்குளத்துநீர் வாதபித்தக்கலப்பு, பழைய காய்ச்சல், மிகுநாவறட்சி இவை மிகுக்கும்.

(ஆ) அல்லிக்குளத்துநீர் செரியாக்கழிச்சல், சொறி, புண், காய்ச்சல், பாலர்தாடைநோய், விந்துக் கேடு இவை யுண்டாக்கும்.

15. சருகு ஊறியநீர் காய்ச்சலுக்குத் துணைசெய்யும்

16. சிவந்தநீர் பித்த இருமற்குற்றம் நீக்கும்; காய்ச்சல் எரிவு, விந்துக்கேடு உண்டாக்கும்.

17. சுனைநீர் இருமல், கோழைக்காய்ச்சல், மிகுவாதம், உதறு வாயு, பயித்தியம் இவை உண்டாக்கும்; நிழற்சுனை நீர் பெருவயிறு தரும்.

18. நண்டுக்குழிநீர் வாந்தி, மிகுநாவறட்சி, போகாவிக்கல் உட்ல்வெப்பு, எரிவு இவை போக்கும்.

19. நிசிநீர் (நீராகாரம்) உடற்கொதிப்பு, நமைச்சல், சொறி இவை நீக்கும்; அழகையும், விந்துவையும் மிகு விக்கும்.

20. பனிநீர் சொறி, கரப்பான், பெருநோய், சூடு, ஈளை கழிச்சல், மிகுவாதம், முக்குற்றம், உடல்வறட்சி, மிகு மூத்திரம், கண்மறைவு இவை நீக்கும்.

21. பனிமாசுநீர் பனிமாசு படிந்தநீர் மிகுபித்தத்தை நீக்கும்.

22. பாசிநீர் பல பிணிகளை உண்டாக்கும்.

23. பாறைநீர் உடலைச் சில்லிடுவிக்கும்; வாதம் மிகுக்கும் எவ்வகைக் காய்ச்சலும் உண்டாக்கும்.

(அ) கரும்பாறைநீர் விக்கம், வாந்தி, விடாக்கழிச்சல் பித்தக் காய்ச்சல், மயக்கம், சிறுநீர்க்கடுப்பு, நாவறட்சி இவைகளை நீக்கும்; வீரியம், அறிவு, அழகு இவை உண்டாக்கும்.

(ஆ) சுக்கான்பாறைநீர் சிறுநீர்க்கடுப்பு, கோழைக்கட்டு, பித்தம், சளிநோய், மனநோய் உண்டாக்கும்; பெருவாதநோய் நீக்கும்.

24. மட்டைநீர் (தெங்கு, பனை முதலிய மட்டைகளிற் பிழிந்தநீர்) நீர்ச்சுருக்கு, மிகு சிறுநீர், பவுத்திரம், புண், வயிற்றுளைவு போக்கும்.

25. மழைநீர் குளிர்ச்சி தரும், நல்லறிவு மிகுக்கும், விந்து வளர்க்கும், தளர்ந்த உடலை உரப்படுத்தும்.

26. வயல்நீர் நாவறட்சி, வெள்ளை, காய்ச்சல், மூர்ச்சை, செந்நீர்ஈளை, காய்ச்சல்வேகம் இவைகள் நீக்கும். எழுதாதுக்களும் குளிர்ச்சியடைய உடலுக்கு வன்மை தரும்.

27. வாழைநீர் வாழைக்கிழங்கு நீர் - பெருவயிறு, செந்நீர் ஒழுக்கல், எரிசிறுநீர், சிறுபுண், வெள்ளை, பெரும்பாடு, அயர்வு, நாவறட்சி, பாண்டு, எலும்புருக்கி நீக்கும்; உடல்வன்மை உண்டாக்கும்.

28. வேந்நீர் அளவாகக் கொண்டால் எதிர்க்கும் உணவு, நெற்றிநோய், புளியேப்பம், குன்மம், சீதக்கட்டு, காய்ச்சல், ஈளை இவை போக்கும்.

க. ஆறிய வெந்நீர் நாவறட்சி, விக்கல், பேதியால் கிளைத்த மிகுபித்தம், மூர்ச்சை, சில்விடம், வாந்தி, மயக்கம், விந்துநோய், முக்குற்றம், கண்ணோய், காது குத்தல், கில்பிடிப்பு, குன்மம், காய்ச்சல் வேகம், மார்புச்சளி, வாதம் இவை நீக்கும்

(அ) கால்கூறு காய்ந்த வெந்நீர் மிகுபித்தம் நீக்கும்.

(ஆ) அரைக்கூறு காய்ந்த வெந்நீர் முக்குற்றம் விலக்கும்.

(இ) முக்காற்கூறு காய்ந்த வெந்நீர் மிகுவாதம், குளிர், நடுக்கம், மிகுகாய்ச்சல், பல்வகைக் கழிச்சல், முக்குற்றம் போக்கும்.

(ஈ) இரும்புக்கெண்டி வெந்நீர் பாண்டு நீக்கும், தாது பெருக்கும். நரம்புக்கு உறுதியும் தரும்; உடலில் வெப்பதட்ப நன்மை செய்யும்.

(உ) தாமிரக்கெண்டி வெந்நீர் கண் புகைச்சல், செந்நீர்ப் பித்தம் நீக்கும்.

(ஊ) வெண்கல வெந்நீர் உதிரத்தைப் பெருக்கும்.

(எ) ஐவகை உலோகக் கலப்பு வெந்நீர் முக்குற்றம் விலக்கும்.

29. குளி குடிகட்கு ஆகாத நீர் சூரிய கிரணம்காற்று அணுகாததும்; பூச்சி, கெட்டநாற்றம், சேறு, தடிப்பு, சரகு உதிரல், சுவையின்மை இவை கொண்டதும்; ஆகாவாம்.

30. ஊணுக்குமுன், பின், நடு அருந்தும் வெந்நீர் முன் பசிமந்தம், பின் நன்மை; நடு பசியடக்கம் அல்லது மந்தம் தரும்.

௩. காலைக்கடன் செய் குணம்

1. மலச்சக்கைநீர் விடுத்தல் காலையும் மாலையும் சிக்கலின்றி மலச்சக்கை, நீர் விடுத்தல் வாதபித்த ஐகளைத் தத்தம் நிலைகளில் உலவச்செய்யும்; உடல்வெப்பு மாறவொட்டாது; நோய்க் கூட்டங்கள் ஒழிக்கும்.

2. பல் விளக்கல் துவர்ப்புள்ள தாள், இலை,கொம்பு இவைகளால் பல்விளக்குதல் பற்களுக்கு ஊனந்தராது; பல்லினிடத்தும் அவ்வேரினிடத்தும் முக்குற்றங்களைத் தலைகாட்டவொட்டாது.

3. பற்கொம்புகள் கருவேல் உறுதிதரும், வேம்பு ஒளி கொடுக்கும், நீர்ப்புலாக்குச்சி வீரியம் விளைக்கும்

ஆல்விழுது செல்வங் காட்டும், நாயுருவிவேர் முகக் கவர்ச்சி உண்டாக்கும்.

4. பல்விளக்கத் தகாதன செங்கற்றூள், மணல், கரி, தென் னம்பாளை, வைக்கோல்.

ரு. குளிப்பும், முழுக்கும்

1. அரைப்பு வகை புண்ணுடலார்க்கு உசிலங் (சிக்கிரான்) தூள், சொறி தினவுடலார்க்கு இலுப்பைப் பிண் ணாக்கு, எண்ணெய்த் தயிலத்துக்குப் பொன்னாங் காய், சிகைக்காய், பசு நெய்க்குப் பச்சைப்பயறு அரைப்பாகும்.

2. உள்ளங்கால் முதலிய இடங்களில் தயிலமிட்டு முழுகல் எண் ணெய் முதலியவற்றை உள்ளங்காலில் தேய்த்தல் கண்ணோய்களும், கண்ணுக்குக் கட்டுதல் செவி நோய் களும், செவிக்குக் குத்துதல் தலைநோய்களும், தலையில் தேய்த்தல், எல்லா நோய்களும் தீர்க்கும்.

3. எண்ணெய்த் தலைமுழுக்கு ஐம்பொறிகள் வலுத்து ஒளி ரச்செய்யும், தலை முழங்கால்கள் வளம்படுக்கும், மயிர் வளர்க்கும், நற்குரல்தரும், தலைவலி அகற்றும்.

4. காலை மாலை குளிப்பு மா, நெல்லி முதலிய இலைகளை ஊற வைத்தநீரிலாவது, மணப்பொருள் சேர்ந்த நீரிலாவது, வெறுந்தண்ணீரிலாவது, வெந்நீரிலாவது காலையில் முழுகுதல் உடம்புக்குச் சூடும் திடமும்தரும்; நோய்க ளெல்லாம் போக்கும்; மாலையில் குளித்து முழுகுதல் நடுத்தரப் பயனே தரும்.

5. தைலம் தேய்க்கும் விதம் மூக்கில் நான்குதுளி, காதில் ஆறுதுளி விட்டு, தலை, உடம்பு, உள்ளங்கால் சூடு பிறவாமல் தேய்த்து ஊறவைத்துச் சிகைக்காய் தேய்த்து வெந்நீரில் முழுகி நீரும் வியர்வையும் நீங்க உலர்த்துக.

6. நாள் தலைமுழுக்கு நாடோறுந் தைலமிட்டுத் தலைமுழுகு தல் பொறிகள் பளபளக்கச்செய்யும், உடல் திடப்

படுத்தும், சோர்வு, சளிநோய், முக்குற்றம், சுவை யின்மை, பல்நோய் போக்கும்.

7. நீர்க்குளிப்பு ஆறு மடுக்களில் காலைநேரத்தில் தலை முழுகிக் குளித்தல் தினவு, சோர்வு, வெப்பு, உடல் பருத்தல் நீக்கும்; ஒளி, வன்மை, பசி, அழகு உண் டாக்கும்.

8. பஞ்சகற்ப முழுக்கு கத்தூரி மஞ்சள், மிளகு, வேப்பம் வித்து, கடுக்காய்த்தோல், நெல்லிப்பருப்பு இவை களைக் காராம் பசுவின்பால் விட்டரைத்துக் கொதிக்க வைத்துத் தலையில் தேய்த்துக் கொண்டு தலைமுழுக் காடுதல், எந்நாளும் நோய்களுக்கு இடம் தராது.

9. பசுநெய் முழுக்கு பாலர், வாலிபர், கிழவர் எல்லார்க் கும் நல்லது; செந்நீர்க் கொதிப்பாலுண்டான எரிச் சல், உன்மத்தம், மூர்ச்சை, மூளைபற்றிய சளி, செந் நீர்ப் பித்தம், நாவறட்சி இவை நீக்கும்.

10. மஞ்சட்குளிப்பு மணக்கலவை மஞ்சட்சாப்பிட்டுக் குளித் தல் கற்றுழை நாற்றம், முகநோய்கள், ஐ (சீதளம்), வியர்வை இவை நீக்கும்.

மயிர் போக்கல்

திங்கட்கு இருமுறை மயிர்போக்கிக்கொள்ளுதல் மனத் துயர், புண், தொடைநோய், குத்தல், இருமல் கழிக்கும்; ஒளி, மகிழ்ச்சி, விழியொளி, உள் உறுப்பு வளர்ச்சி உண் டாக்கும்.

சு. அரிசிவகைக் குணம்

1. அன்னமழகி எல்லாக் காய்ச்சல்களையும், பித்தவெப்பத் தையும் போக்கும்.

2. இலுப்பைப்பூச் சம்பா பித்தநோய், தலைவலி, நாவறட்சி, வெப்பம் இவைகள் உண்டாக்கும்.

3. ஈர்க்குச்சம்பா நாவுக்கின்பம், கண்ணுக்கு அழகு கொடுக்கும். சிறிது பித்தம் பண்ணும்.

4. கம்பு நமைச்சல், சிரங்கு, வீரியம் உண்டாக்கும்; உடல் வெப்பு நீக்கும்.

5. கல்லுண்டைச்சம்பா தோள்வன்மையும் மிகு பேச்சும் உண்டாக்கும்.

6. காடைச்சம்பா வெள்ளைக்காய்ச்சல், சில சிறு நோய்கள் நீக்கும்: விந்துவிளைவு, உடல்வன்மை உண்டாக்கும்.

7. கார் அரிசி உடல் திடம், வாதம், உடல் வன்மை உண்டாக்கும்.

8. காளான் சம்பா உடலுக்கு உறுதியும் நலமும் தரும், சிற்சில வாதநோய் போம்.

9. குண்டுச்சம்பா பசியின்மை, வன்மைக்கரப்பான், உண்டாக்கும். நாவறட்சி தீரும்.

10. குறுஞ்சம்பா பித்தம், கரப்பான் உண்டாக்கும்; விந்துறுப்பு பெருகும்; உடற்குத்துநோய் தீர்க்கும்.

11. குன்றிமணிச்சம்பா சிறு வாதநோய் முதலியன நீக்கும்; உடல்வன்மையும் விந்துறுப்பும் பெருக்கும்.

12. கேழ்வரகு வாதம் வருவிக்கும் எனினும் உடலால் உழைப்போர்க்கு மிக நல்லது.

13. கைவரைச்சம்பா உடல்வன்மை தரும்; விந்து கட்டும்; நலம் உண்டாக்கும்; பித்தமில்லை.

14. கோடைச்சம்பா முக்குற்ற வாதவலியும், சிற்சில நோய்களும் தீரும்.

15. கோதுமை உடலுக்கு வலிவுதரும்; விந்து மிகுக்கும்; பித்தமுண்டாக்கும்; மிகுவாதம், வெள்ளை நீக்கும்.

16. கோரைச்சம்பா பயித்தியம், உள்ளழல், வெள்ளை, நமைச்சல் இவை நீக்கும்; குளிர்ச்சியும் நலமும் தரும்.

17. சவ்வரிசி வெள்ளை, என்புருக்கிநோய், வெண்மேகம், செந்நீர்மேகம் போக்கும்; விந்து தரும்; சளி உண்டாக்கும்.

18. சாமை நாவறட்சிக்காய்ச்சல், வெள்ளை, மிகுவாதநோய், சோபை, இவை நீக்கும்; உடல் திடமுண்டாக்கும்.

19. சீரகச்சம்பா மிகுபசி; சிறுவாதநோய் நீக்கும்.

20. செஞ்சம்பா சிறுசிரங்கு அல்லது கரப்பான், மிகுபுண், யானைச்சொறி, மிகுபசி உண்டாக்கும்.

21. சோளம் (சிவப்பு) சிறுகரப்பான், புண், மந்தம் மிகுக்கும். உடலழகு, பசி இவை விலக்கும்.

சோளம் (கருமை) நமைச்சல், கரப்பான், புண், அயர்வு, இவை உண்டாக்கும்; மாறுநிற அழகு தரும்.

22. திப்பிலி அரிசி சளி, வயிறுப்பல், மேகம், வாதக்காய்ச்சல், ஈளை, இவை போக்கும். விந்துவளர்க்கும்.

23. தினையரிசி மீறின காய்ச்சல், சளிநோய், தனிவாதம், சோகை இவை போக்கும், பித்தமும் பசியும் உண்டாக்கும்.

24. பச்சரிசி தனிமிகுவாதம், கொடு மந்தநோய், உடல் வன்மை உண்டாக்கும்; பித்த எரிச்சல் நீக்கும்.

25. பழைய அரிசி கிழவர், பாலர், நோயாளிகள், இவர்க்கு நல்லது. பசியும் குளிர்ச்சியும் உண்டாக்கும் ; சிற்சில நோய்களும் கோழையும் (கபமும்) நீக்கும்.

26. புழுகு சம்பா வனப்பு, ஒளி, மிகுபசி, உடல்வன்மை இவை உண்டாக்கும் ; நாவறட்சி நீக்கும்.

27. புழுங்கலரிசி குழந்தைகள், வாதநோயாளிகள், பத்தியமிருப்போர் இவர்கட்கு நல்லது.

28. மணக்கத்தை புண் குட்டம், புரைப் புண், சிறு நஞ்சு, நீக்கும்.

29. மணிச்சம்பா மிகுசிறுநீர் விலக்கும்; கிழவர் பாலர்களைத் திடமாக்கும் ; பசி உண்டாக்கும்.

30. மல்லிகைச் சம்பா உடல்நலம், உறுதிதரும் ; கரப்பான் வெள்ளை, கண்வெப்பு இவை போக்கும்.

31. மிளகு சம்பா பசிவளர்க்கும், பெருவாத நோய்கள் போக்கும்.

32. மைச்சம்பா சுவையின்மை, வாதபித்தம், தனிவாதம், வாந்தி இவை போக்கும்.

33. வளைதடிச் சம்பா வாதபித்தம், வயிறளைப்பு, வயிற்றுப் பொருமல், கரப்பான், மிகுமந்தம் இவை யுண்டாக்கும்.

எ. ஆடைவகைகளின் குணம்

1. ஆடைக்கட்டுகள்
   (அ) அங்கி ஒளி, திடம், பசி உண்டாக்கும். பித்தம் நீக்கும்.
   (ஆ) தலைக்கட்டு வாதபித்தக் கலப்பைக் கலைக்கும்.
   (இ) இடுப்புக் கட்டு நல்ல ஆண்மை உண்டாக்கும்.
2. அழுக்காடை நோய் சேர்க்கும்; ஒளி கெடுக்கும். அறிவு நீக்கும். நடுக்கல், மனவருத்தம், தினவு, கவலை வாய் பேசக் கூசுதல், பலதுன்பம், நாணம் இவை யுண்டாக்கும்
3. கம்பளம் குளிர்காற்றையும்; மூடுபனியையும் விலக்கும்; பெரும்பாடு, செரியாமை, சூலை, நீங்காக்கழிச்சல் கருஞ்சிழ் இவை போக்கும்.
4. கறுப்பாடை இருமல், வெப்பு, கொடு நஞ்சு, பசியாமை, பித்தம் இவை போக்கும்.
5. சாலுவை ஐ, தலைவலி, வலிநோய், வயிற்றுவலி, குளிர், பனி இவை நீக்கும்.
6. சிவப்பாடை பித்தம், வெப்பு, முறைக்காய்ச்சல், வாந்தி சுவை யின்மை, சளி, மந்தம், மிகுஐ இவைகளில் ஒன்றினாலும், கலப்பினாலும் உடல் நோயுற்றிருக்க அணிவது அவற்றை மிகச் செய்யும்.
7. நார்மடி சளி, நீரேற்றம், குடல் வளர்ச்சி, சந்நி இவை போக்கும், உடலைத் தூய்மையாக்கும்.
8. பச்சை ஆடை அழல் கெடுக்கும், விழி குளிர்ச்சி செய்யும், உடலைப் பூரிப்பிக்கும், ஐ போக்கும்.

9. பட்டாடை பித்தம், சளி போக்கும்; அறிவும் மகிழ்ச்சியும் உண்டாக்கும்; வியர்வை வெளிப்படுத்தும்; ஒளி தரும்.

10. வெண்பட்டாடை மிகுகாய்ச்சல், குளிர்நோய் போக்கும்; ஒளி அழகு, மகிழ்ச்சி உண்டாக்கும்.

11. வெள்ளையாடை முக்குற்றம் போக்கும்; ஆயுள் வளர்க்கும் செல்வம், அழகு, மகிழ்ச்சி உண்டாக்கும்; அறிவும், வெற்றியும் வருவிக்கும்; வியர்வை வெளியாக்கும்.

அ. சோற்றைப்பற்றிய சில குறிப்புகள்

1. எண்ணெய்ச் சோறு நல்லெண்ணெய் சேர்ந்த சோறு உடல் வலிவு, நற்போகம், நற்பசி இவை உண்டாக்கும்; வாத சளி நீக்கும்.

2. கம்புச் சோறு செந்நீர் குறைக்கும்; இரைப்பு, புண் உண்டாக்கும்; உடல் பெருகச்செய்யும்; உடல் நிறம் கெடுக்கும்.

3. குழந்தைச் சோறு (அளிந்த சோறு) வாதம், இருமல், பசிமந்தம், வலிவு குறைவு, பீநசம் இவை தரும்.

4. கேழ்வரகுக் கூழ் வாத பித்தம், வயிற்றுநோய் நீக்கும். களி வன்மையும், மிகுவாதமும் தரும்.

5. சாமைச் சோறு வாதநோய், ஈளை, மிகு ஐ, வீக்கம் இவை போக்கும்; பித்தம் விந்து வளரும்.

கஞ்சி முக்குற்றம் விலக்கும்.

6. சிறுசுடுகைச் சோறு சிறந்தது. முக்குற்ற நோய்கள் தீர்க்கும்; பீநசம் அகற்றும்; சுவையின்மை நீக்கும். உடல் வன்மை ஆக்கும்.

7. சோளச் சோறு தினவு, புண், கரப்பான் மிகுக்கும்; மருந்து கெடுக்கும்.

8. தினைமாச் சோறு ஐ, வாதம் விலக்கும்; பித்தத்தன்மையுடையதாயினும் எழுச்சியை வளர்த்து, மிகு வாதத்தை நீக்கும்.

கஞ்சி வீக்கங்களை ஒழிக்கும்.

9. தூய்மைச் சோறு* (சுத்தான்னம்) எவ்வுடலார்க்கும் நல்லது ; குடல் நோய்வாய்ப்படாது ; சிறந்தது.

10. நெய்ச் சோறு வன்மை, கண்குளிர்ச்சி, செரிப்புக் குணம் உண்டாக்கும் ; பித்தம் விலக்கும், பத்திய வுணவாகும்; கிழவர்க்கு இன்றியமையாதது.

11. பச்சரிசிச் சோறு வாலிபர்க்கு வன்மை தரும் ; குழந்தைகட்கு மந்தம் உண்டாக்கும் ; நீர்ச்சுருக்கு நீக்கும் ; சிறிது வாயு உண்டாக்கும்.

12. பழஞ் சோறு இதனை நீருடன் காலையில் அருந்தில் விந்துவளர்ச்சி, பசி, ஒளி உண்டாம். பித்தநோய் போக்கும்.

13. பாற் சோறு பித்தம் தாகம் விலக்கும்; சிறிதுமந்தந்தரும், உடல் திடம், வீரிய வளர்ச்சி உண்டாக்கும். எத்தரத்தார்க்கும் நல்லது.

14. புழுங்கலரிசிச் சோறு மிகுவாதம், வன்மை, வலிய நோய்கள் உண்டுபண்ணுது ; நோயாளர்க்கு நல்லது.

15. புளித்த சோறு வெப்புண்டாக்கும்; பித்தம் போக்கும்; மந்த மலச் சிக்கை, வாந்தி நீக்கும்.

16. பொங்கற் சோறு பச்சரிசிப் பொங்கற் சோறு மந்தநோய், வயிற்றுப்பொருமல், நடுக்கம், வெப்பம் இவை யுண்டாக்கும். சம்பாப் பச்சரிசி விந்து வளர்க்கும்.

17. மிகுசூடுகைச் சோறு செந்நீர்ப் பித்தம், நாவறட்சி, மயக்கம், மந்த நோய் இவை உண்டாக்கும்.

---

* பழைய முழு அரிசியைத் தீட்டி, ஆய்ந்து, இளவெந்நீரால் கழுவி, துணியிற் கொட்டிச் சிறிது ஆறவைத்து, அடுப்பேற்றி, மூன்றுபங்கு தண்ணீர் விட்டு நன்றாய்க் கொதிக்கும் போது அதிற்போட்டு முக்காற்பங்கு வெந்தவுடன் கரண்டியால் துழாவி வடித்துக்கொண்டு, மறுபடி தணலில் வைத்துப் பக்குவப்படுத்தப்பட்டது.

18. மோர்ப் பழையது உடலெரிச்சல், பித்தநோய், உன்மத்தம் (மயக்கம்) இவை நீக்கும்; ஐயும் தூக்கமும் மிகும்.

19. வரகுச் சோறு பெருமூச்சு, சொறி சிரங்கு, தினவு, புண், பித்தம் இவை யுண்டாக்கும்.

௯. சோற்றுக் குற்றங்கள்

1. உலர்ந்த சோறு செரியாமை உண்டாக்கும்.
2. ஊசிய சோறு உடனே தூக்கம், மிகுவாதம், சீத பித்த வளர்ச்சி யுண்டாக்கும்.
3. கஞ்சி சிக்கின சோறு செரியாமை யுண்டாக்கும்.
4. காந்தற் சோறு செரிப்புறுப்புக்கள் கெடும்.
5. குழைந்த சோறு உடல் வெப்பு ஒழிக்கும்.
6. கோழியலரிசிச் சோறு ஆயுள் முதலியன கெடுக்கும்.
7. நறுக்கரிசிச் சோறு மந்தம் உண்டாக்கும்.
8. நூலிழைந்த சோறு தூக்கம், இருமல்நோய் உண்டாக்கும்.
9. மயிர்பூச்சி உமி முதலியன கலந்த சோறு சுவையின்மை உண்டாக்கும்.

௧௦. காய்வகைகளின் குணம்

1. அத்திக்காய் மேகநோய், வாதநோய், சூலை நோய், வெப்பு நோய், புண்ணோய் இவை தீர்க்கும்; சக்கை கழியும்.
2. அருநெல்லிக்காய் வயிற்றுளைச்சல், நாவறட்சி, ஈளை, உட்சூடு இவை நீக்கும்.
3. அவரைக்காய் சுவை மாற்றம் நீக்கும்; மந்தம், கழிச்சல், வாத நோய், சளி, சூலை, இவை உண்டாக்கும்.
4. ஊசி மிளகாய் சீதபேதி, நீர்ச்சுருக்கு, மூலம் உண்டாக்கும்.
5. எலுமிச்சங்காய் முக்குற்றம், சளி, சூலை, வாந்தி, குன்மம், இடு மருந்து, வெப்பு, இவை போக்கும்.

கோடி எலுமிச்சை வாந்தி, மயக்கம், கழிச்சல், சுவை யின்மை இவை போக்கும்.

6. கண்டங்கத்திரிக்காய் ஐ, சீதச்சக்கை, பசியின்மைநீக்கும்.

7. கடாரங்காய் பித்தம், வாயூறல், சுவையின்மை போக்கும்; நோயாளிகட்கு நல்லது.

8. கத்திரிக்காய் கோழை அகற்றும்; சொறி சிரங்கு, கரப்பான், ஊறல் இவையுண்டாக்கும்; பத்தியப் பொருளாம்.

9. கலியாணபூசனிக்காய் உட்காய்ச்சல், இடுமருந்து, பித்தக் காய்ச்சல், என்புக்காய்ச்சல், பேய்ச் சொறி, மேக நோய், பயித்தியம், செந்நீர்ப் பெருக்கு (பெரும்பாடு) இவை போக்கும்; சிறுநீர் பெருக்கும்; உடலுரமாக்கித்தேற்றும்.

10. கலுமிச்சங்காய் பல் வீழ்த்தும் பற்கூச்ச முண்டாக்கும், உள்ளூறுப்புவலி குறைக்கும், ஐ சேரும்.

11. களாக்காய் காதடைப்பு, நாவறட்சி, பித்தக்குற்றம், வாந்தி, சுவையின்மை, செந்நீர் வெப்பு போக்கும், பசியுண்டாக்கும்.

12. கொத்தவரைக்காய் பயித்தியம், சளி, வாதக்கடுப்பு உண்டாக்கும்; பித்த நளிர்ச்சி யகற்றும்; மருந்து முறிக்கும்.

13. கோவைக்காய் சுவையின்மை, நீங்கா வெப்பு, காய்ச்சல், சளிக்குற்றம், இவை போக்கும்; வற்றல் சுவையின்மை, கரப்பான் நீக்கும்.

14. சிகைக்காய் (சீக்காய்) நசியமருந்துக்கு முக்கியமானது: பேதி வாந்தி உண்டாக்கும்; நெய்ச்சிக்கைப்போக்கும்.

15. சுக்கான்காய் மிகுவாதம் நீக்கும்; வற்றல் அதனுடன் சுவையின்மையையும் நீக்கும்.

16. சுண்டைக்காய் சளி, பூச்சி நோய், மிகுவாதம், இவை போக்கும்; வற்றல் சுவையின்மை, சக்கைப்பூசசி, கழிச்சல், சீதக்கட்டு, இவை நீக்கும்; மார்புச்சளி,

பூச்சி நோய், செரியா பேதி, மூல நோய், இவற்றிற்கு நல்லது; பசியுண்டாக்கும்.

17. சுரைக்காய் வாதபித்தம், சுவையின்மை, மண்ணீரல், மார்பு நோய், இவை யுண்டாக்கும்; உட்சூடு நீக்கும்.

18. தூதுளங்காய் சளி நோய், மிகு பயித்தியம், சுவையின்மை, செந்நீர்ப்பை வாயு, குடல்வாதம், சக்கைக் கட்டு இவை நீக்கும்.

19. நாரத்தங்காய் வாத நோய், குன்மம், வாற்பூச்சி நீக்கும்; உடல் தூய்மை யுண்டாக்கும்.

20. நுரைபீர்க்கங்காய் நாவறட்சி, சக்கைசிக்கல் நீக்கும்; இரைப்பை வன்மை கெடுக்கும்; பசியடக்கும்; சளி, காய்ச்சல், உண்டாக்கும்.

21. (அ.) நெல்லிக்காய் பயித்தியம், பீநசம், வாய்ச் சுரப்பு, வாந்தி, வெறிமயக்கம், சக்கைக்கட்டு, தலைச் சுழற்சி, மேகம்-இவை போக்கும்; உடலழகு உண்டாக்கும்; வளியும் சளியும் நீக்கும்.

(ஆ.) அருநெல்லிக்காய் சீதபித்தம், ஈளை, நாவறட்சி, உட்சூடு இவற்றிற்கு நல்லது.

22. பயற்றங்காய் சளி, சுவையின்மை, செந்நீர்க்குன்மம், வெப்பு இவை அகற்றும்; குளிர்ச்சிதரும்; உடல் வளர்க்கும்.

23. பலாக்காய் சூடு அடக்கும்; மிகுவாதம், இளைப்பு, பெருமூச்சு, விந்து வளர்ச்சி, இவையுண்டாக்கும்.

24. பறங்கிக்காய் (பூசனிக்காய்) அனல் அழற்சியையும், மிகு பித்தத்தையும் நீக்கும்; மிக்க சளிநோ யுண்டாக்கும். குழிபறங்கிக்காய் (கோடைப்பூசனி) வாதக் கடுப்பு மிகுஐ, வாதசூலை, தீமந்தம் இவை யுண்டாக்கும்.

25. பனைநுங்கு வியர்வைக் குருவை நீக்கும்; பசி தரும்; தோலுடனுண்டால் சீதபேதிக்கழிச்சல் அகலும்.

26. (அ.) பாகற்காய் மருந்துக்கு முறிப்பு; வாதபித்தங்கள் மேலோங்கும்.

(ஆ.) மிதிபாகற்காய் வாதபித்தம் மிகும்; கரப்பான் உண்டாக்கும்.

27. பீர்க்கங்காய் ஐப் பித்தம் மிகும்; வாதம், சளி நிலை மாற்றும்.

28. புடலங்காய் விந்து, சளி, பயித்தியம் மிகுக்கும்.

29. புளியங்காய் கொட்டை முதிராப் புளியங்காய் சோர்வு, பித்தம் நீக்கும்; வாதம் மிகுக்கும்.

30. மஞ்சள் முள்ளங்கி பாண்டு, சளி நோய், நீரடைப்பு, மார்புவலி, சக்கைக்கட்டு, கல்லடைப்பு நீக்கும்; உடல் வன்மை தரும்.

31. மணித்தக்காளிக்காய் சக்கை இளக்கும்; மிகு சளி, வாதம் போக்கும்.

வற்றல் நீர்ப்பேதியாக்கும்; வாந்தி, வாயிலைப்பு நீக்கும்.

32. மரியங்காய் வாய்க்கசப்பு, சுவையின்மை நீக்கும்; காய்ச்சல் நோய்க்கு நல்லது.

33. மாங்காய் விந்து குறைவு, மிகுவளி, ஆருதபுண், தோல்வெடிப்பு, பற்கூசல், சொற்குளறல், இவையுண்டாக்கும்; பசி விலக்கும்.

34. மிளகாய் செரியாபேதி, மார்பு நோய், செரியாமை நீக்கும்; கீல்வாதம், சூதகசந்நி, நீர்ப்பை நோய், இவை போக்கும்.

பழம் செந்நீர் மூலமுளை, சக்கைவாய்க் கடுப்பு, விந்து வளர்ச்சி உண்டாக்கும்; நஞ்சு மாந்தம், சுவையின்மை, வயிற்று நோய்,மிகுமந்தம், வயிற்றுப்பொருமல் நீக்கும்.

வெண்டுமிளகாய் மிகுவாதம் நீக்கும்.

குண்டுமிளகாய் சூடுண்டாக்கும்.

பச்சை மிளகாய் பசியுண்டாக்கும்.

35. மிளகுக்காய் (பச்சை மிளகு) வாத நோய், சீழ்மூலம் நீக்கும்.

36. முருங்கைக்காய் சளி நீக்கும்; விந்து மிகுக்கும்.

37. மூலாங்காய் (குமட்டி) விந்து கெடுக்கும்; பல் வீழ்த்தும்; உடல் ஒளி கெடுக்கும்; மிகுவாதம் மிகுகுளிர்ச்சி யுண்டாக்கும்; குடற் புழு அகற்றும்.

38. மோர்சைக்காய் முக்குற்றம் மிகுக்கும்; மிகு சூட்டைத் தணிக்கும்.

39. வழுதுணங்காய் எவ்வுடலாருக்கும் பொருந்தும்; சளி கரைக்கும்.

40. வாழைக்காய் பித்த வாந்தி, பயித்தியம், மிகுபித்தம், உமிழ்நீர்ச்சுரப்பு, வயிறுளைதல், சூடு, இருமல், இவை போக்கும்; செந்நீர் ஓங்கச்செய்யும்; உணவு கொள்ளும்.

41. வெண்டைக்காய் விடாபேதி, சீதச் செந்நீர்க் கழிச்சல், ஐவளி இவை உண்டாக்கும்.

42. வெள்ளரிக்காய் நீர்துளைத்தினவு, நீர்ச்சுருக்கு, கரப்பான் நீக்கும்; வாதம் விளைக்கும்; மருந்து முறிக்கும்; உண்ட பின் உண்ணப் பசியுண்டாக்கும்.

கக. பழ வகைகளின் குணம்

1. அத்திப்பழம் (தசை) செந்நீர்ப்பெருக்கும்; உடல் வளர்க்கும்; காய்ச்சற் சூடு நீக்கும்; சக்கை போக்கும்.

   அத்திப்பழம் (விதை) சக்கைக் கட்டு நீக்கும்; பித்தச் சூடு போக்கும்.

   உலர்ந்த தேன் அத்திப்பழம் தொண்டை வறட்சி அடக்கும்; சக்கை போக்கும்; நல்ல செந்நீர் உண்டாக்கும்.

2. அன்னாசிப்பழம் வெள்ளை, வாந்தி, பித்தம், நாவறட்சி, தலைநோய் போக்கும்.

   அன்னாசிப் பூ கறியில் கூட்டிச் சமைத்துண்ண வாத நோய், மேகவாயு, பிடிப்பு போக்கும்; பசி மிகுக்கும்.

3. ஆரஞ்சுப்பழம் (கமலாப்பழம்) பித்தம், தினவு, கரப்பான், சொறி சிரங்கு போக்கும்; உடல் வன்மையுண்டாக்கும்

4. ஆல்பகோராப்பழம் வாதம், பித்தம் நீக்கும்; சக்கை கழிக்கும்; சூடு தணிக்கும்.

5. இலந்தைப்பழம் பித்த மூர்ச்சை, சுவையின்மை, முக்குற்ற வாந்தி, வலி நோய் இவை போக்கும்; பசியில் உண்டால் எரிவுண்டாக்கும்.

6. ஈச்சன் (பேர்) பழம் பித்த நீர்ச்சுரப்பு, மூர்ச்சைக் காய்ச்சல், நீர்க்கோவை, நாவறட்சி, மிகுபித்தம், நீர்ப் பெருக்கு, வாயிலைப்பு, சுவையின்மை, சக்கைக்கட்டு இவற்றைக் கண்டிக்கும்.

ஈச்சன் (சிற்) பழம் சீதபேதி, உழலைநோய், புண், பெருமூச்சு, காய்ச்சல், மேகநோய், வாய் நாற்றம், மந்தம் இவை யுண்டாக்கும்; அறிவு குறைக்கும்.

7. எலுமிச்சம்பழம் பித்த மயக்கம், வாந்தி, சுவையின்மை, நாவறட்சி, யானைக்கால், வெறி, கண்ணோய், காதுவலி இவைபோக்கும்; கழிச்சல் கட்டும்; நகச்சுற்றுக்கு நல்லது.

8. களாப்பழம் இரைப்பைக்கு வலிவும் பசியும் உண்டாக்கும்; உடல்வெப்பு நீக்கும்; மிகுதி உண்டால் வயிற்றில் காற்றுப் பெருக்கும்; பசியில் உண்டால் சீதச்செந்நீரும், மந்தத்தில் உண்டால் நல்ல பசியும் உண்டாக்கும்; தொண்டை வலியும், தலைக்கணப்பும் நீக்கும்.

9. காரைப்பழம் சீதச் செந்நீர்க் கடுப்பும், விடாபேதியும் நீக்கும்.

10. கொய்யாப்பழம் முக்குற்றம், தலைமயக்கம், சுவையின்மை, மந்தம், வாந்தி, வயிறுப்பல், கரப்பான், வீரியம் இவை உண்டாக்கும்; சக்கை கழிக்கும்.

11. சவரிப்பழம் தலைநோய், உடற்கடுப்பு, மூக்கொழுக்கு இவை நீக்கும்.

12. சாத்துக்குடி செந்நீர்ப்பை வன்மை, செந்நீர் தூய்மை, சுவை உண்டாக்கும்.

13. சீத்தாப்பழம் பித்த சளி, தீ மந்தம், பயித்தியம் உண்டாக்கும்.

14. தக்காளி (சீமை) செந்நீர், குடல் இவைகளின் குற்றங்கள் நீக்கும்; ஐம்புலன் அறிவு மிகுக்கும்; வயிற்றுப் புண், சக்கைச் சிக்கல், மிகு பித்தம் நீக்கும்.

15. நாரத்தம்பழம் பித்த குன்மம் நீக்கும்; வீரியம் வளர்க்கும்.

16. நாவற்பழம் தீமந்தம், உடல்நோய், கடுவன் உண்டாக்கும்; மிகுநீர், வெப்பு, வாயு, கடுப்பு, நாவறட்சி இவை நீக்கும்.

17. பலாப்பழம் முக்குற்றக் கலப்பு, கரப்பான், முன்னில்லா நோய்கள் இவை யுண்டாக்கும்.

18. பனம்பழம் கரப்பான், அழுகு சிரங்கு, சக்கைக்கட்டு, பித்தவாயு நோய்கள் இவை யுண்டாக்கும்.

19. பாகற்பழம் காய்ச்சல், மிகுமேகம், இருமல், இரைப்பு, மூலம், முக்குற்றம், குட்டம், சக்கைப்பூச்சி இவை நீக்கும்.

20. புளியம்பழம் அறிவுமந்தம், உடல்பாரிப்பு, மிகுகாய்ச்சல், உடல்நடுக்கம், விந்துக்குறை, நரை திரை இவை உண்டாக்கும்; வாந்தியும், பித்தமும் நீக்கும்.

பழம்புளி முக்குற்றம், வாதநோய், சூலை, ஐ, வாந்தி, கண் நோய், பயித்தியம் இவை நீக்கும்.

21. மங்குஸ்தான் பழத்தின் மேல் ஓட்டால் வயிற்றுப்புண் சீதபேதி, செந்நீர்பேதி, விடாக்கழிச்சல், கருப்ப நோய் அகற்றும்.

22. மாதுளம்பழம் பெருமூர்ச்சை, வாந்தி, சளி, மிகு நாவறட்சி, பித்தநோய், மலடு, வாய்நீர்ச்சுரப்பு, கசப்பு, விக்கல், மாந்தம், மிகுகாய்ச்சல், நெஞ்செரிவு, காதடைப்பு, நீங்காமயக்கம், இவை ஒழிக்கும்; உடற் குளிர்ச்சி யுண்டாக்கும்.

23. மாம்பழம் நமைச்சல், மார்பு எரிச்சல், கண்ணோய், கரப்பான், புண் இவை மிகுக்கும்; பசி நீக்கும்.

24. மிளகாய்ப்பழம் செந்நீர் மூலமுளை, எருவாய்க்கடுப்பு, விந்து வளர்ச்சி உண்டாக்கும்; நச்சுமாந்தம், சுவை

யின்மை, வயிற்றுநோய், வாதநோய், வயிற்றுப் பொருமல் இவை நீக்கும்.

25. முந்திரிப்பழம் நாவறட்சி, உடல்வெப்பு நீக்கும்; கரப்பான், புண், கிரந்தி (மெய்யூறல்), நெஞ்சு கரகரப்பு உண்டாக்கும்.

26. முந்திரிகைப்பழம் [கொடித் திராட்சை] காய்ச்சல், சுவையின்மை, நாவறட்சி, புண், இரைப்பு, ஈளை, பலபித்தம், நச்சுமாந்தம், மிகுமேகம், வெறிநோய் முதலியன நீக்கும்.

உலர்ந்ததிராட்சை தேன்விட்டுலர்த்திய திராட்சைப் பழம் சக்கை வெளியாக்கும், மேக அழல் தணிக்கும்; செந்நீர் பெருக்கும்.

27. வாழைப்பழம் உடல்வெளுப்பு, பித்தநோய்கள், மதநோய், மூர்ச்சை இவை போக்கும்.

என்வகை வாழைப்பழத்தின் குணம்

இரசதாளி, செவ்வாழை, மொந்தன், வெள்வாழை, இவை நோய்க்காகும். அடுக்குவாழை, கருவாழை, பச்சை வாழை, மலைவாழை இவற்றில் கருவாழை நல்லது. இவ்வெண் வாழைப்பழங்களும் வாதநோயாளர்க்கு உதவா. ஆனால் உணவோடு உண்ணில் குற்றமில்லை.

(அ) இரசதாளி வாழைப்பழம் பசிமந்தம், வாதநோய் உண்டாக்கும்.

(ஆ) செவ்வாழைப்பழம் பசிமந்தமும், விந்துவன்மையும் கொடுக்கும்; வாதநோயாளர்க்கு உதவாது.

(இ) நவரைவாழை திமந்தம், தினவு, வாத ஐக்கலப்பு, கரப்பான் இவை மிகுக்கும்.

(ஈ) பச்சை வாழைப்பழம் உடல்வெப்பு, பித்தம், சக்கைக்கட்டு, இவை நீக்கும்.

(உ) பேயன்வாழை பயித்தியமும், உட்சூடும் நீக்கும்; மிகு வாதமும், மிகுகுளிர்ச்சியும், உண்டாக்கும்; சக்கைக் கட்டு நீங்கும்.

(ஊ) மலைவாழைப்பழம் சக்கைக்கட்டு, சோகை நீக்கும்; பசிமந்தம் உண்டாக்கும்.

(எ) மொந்தன் திமந்தம், உடல்வலியுடன் பாரிப்பு, இசிவு, ஐ, நாவறட்சி இவை யுண்டாக்கும்; பித்தம், காமாலை, உடல் வறட்சி இவை நீக்கும்.

28. விளாம்பழம் உயிர்ப்பு, ஈளை, சளி, நாவறட்சி நீக்கும்; நல்ல பசி உண்டாக்கும்.

கூஉ. கொட்டைவகைக் குணம்

1. அழிஞ்சிற்கொட்டை மிகுவாதம், மிகுசளி, சீவடியும் பெருநோய் போக்கும்; பித்தம் பெருக்கும்.
2. ஆளிவிதை சோகை, மிகுவாந்தி, உடற்கடுப்பு, வாதவலி, நரம்புச்சூலை, என்புச்சூடு, ஓக்காளம், சுவையின்மை, அண்டவாதம், செரியாமை, சீதபேதி, செரியாபேதி; ஈரல்வீக்கம், வயிற்றுப்பொருமல், விக்கல், தோல்நோய், சளிநோய், குசுமநோய், மூலம் இவை நீக்கும்; பால் சுரக்க, கரு கரைக்க, நீர் வெளிப்பட, விந்து பெருக, சக்கை தள்ள, உட்சூடு தணியப் பயன்படும்.
3. இலுப்பைக்கொட்டை அண்டவாதம், நஞ்சு இவை நீக்கும்.
4. ஊமத்தம் விதை காய்ச்சல், நஞ்சு, சந்நி, காய்ச்சற் கழிச்சல், இவை நீக்கும்; வெறியுண்டாக்கும்.
5. எட்டிக்கொட்டை கருமேகம், சந்நி, கடிநஞ்சு, பெருநோய், வாதவலி, விந்துகுறை, கட்டி, கரப்பான், மயக்கம் (மூர்ச்சை), பித்தம், காய்ச்சல், சீதக்காய்ச்சல், பேதி, சீதபேதி, பாண்டு, தேமல், சொட்டுநீர், நீர்க்கோவை, சக்கைக்கட்டு, அடிதள்ளல் (மூலம் வெளிப்படல்), பயித்தியம் இவை போக்கும்.
6. கரிசாலை விதை காமாலை போக்கும்.
7. கழற்காய் (கழற்சிக்காய்-கச்சக்காய்) அண்டவாதம், பக்கசூலை, வயிற்றுவலி (குன்மம்) இவை போக்கும்.
8. குன்றிமணி கண்ணோய், பித்தநோய், மாறுநிறம், காமாலை, வியர்வை, மூர்ச்சைக்காய்ச்சல், சளிக்காய்ச்சல் இவை நீக்கும்; விந்து மிகுக்கும்.

9. சாரப்பருப்பு நீர்ச்சுருக்கு, நீர்க்கடுப்பு, நீர்மேகம் இவை நீக்கும்; நீர் உறுப்பு இறுக்கும்; இரசம், கந்தகம் இவற்றின் நஞ்சு நீக்கும்.

10. தாமரைக்கொட்டை மந்தம், சுவையின்மை நீக்கும்; விந்து வளர்க்கும்.

11. துளசிவிதை ஐ, சுவையின்மை போக்கும்.

12. தேற்றான்கொட்டை மிகுமேகம், வெட்டை, உட்சூடு, உடற்சூடு, வயிற்றுக்கடுப்பு, எரிநீர், உட்புண் நீக்கும்; மந்தம் உண்டாக்கும்; கண்ணுக்கு நன்மருந்தாகும்.

13. நீர்முள்ளி விதை மிகுமேகம், காய்ச்சற்கழிச்சல், சளி, சோகை, இளைப்பு நீக்கும்; ஏழுறுப்புகளும் பெருக்கும்.

14. நெருஞ்சில் விதை நீர்க்கட்டு, சதையடைப்பு, சொட்டுநீர், இவை நீக்கும்.

1௫. பலாக்கொட்டை அள்ளுமாந்தம், சளி, சக்கைச் சிக்கல், புளியேப்பம், கல்வயிறு, வயிற்றுவலி இவை உண்டாக்கும்.

16. பிரமதண்டு வித்து கரப்பான், வெள்ளை, சொறி சிரங்கு, அரையாப்பு முதலியன நீக்கும்.

17. புங்கங்கொட்டை கால்புண், கரப்பான், காதுநோய், சந்நி, கண்ணோய் இவை நீக்கும்; சக்கை கட்டும்.

காட்டுப்புங்கம் விதை தேமல், புடை, கில்வாயு நீக்கும்.

18. புளியங்கொட்டை விந்துமேகம், பித்தக்கழிச்சல், புண், நீர்க்கடுப்பு, வெள்ளை இவை நீக்கும்.

19. புன்னைக்கொட்டை செவிப்புண், சந்நி, நடுக்கல்நோய், குதகவாயு, நீரேற்றம் இவை நீக்கும்.

20. பூசனிவிதை பயித்தியம், மிகுமேகம், உடலழலை - நீக்கும்; குளிர்ச்சி, உடல்திடம் உண்டாக்கும்.

21. பூனைக்காலி விதை கற்றாழை நாற்றம், செங்நீர்க் கழிச்சல், கரப்பான் இவை நீக்கும்; உடல்திடம் உண்டாக்கும்.

22. பேய்ப்பீர்க்கு விதை காலில் தடிப்பேற்று நஞ்சுகள் நீக்கும்

23. மகிழம் வித்து மிகுசக்கை கழிதல், கண்ணோய், பாம்பு நஞ்சு, காய்ச்சல் இவை நீக்கும்; உடல் வன்மை, அழகு உண்டாக்கும்.

24. மஞ்சள் முள்ளங்கி விதை மார்புநோய், கல்லடைப்பு, நீரடைப்பு, சூதகச் சிக்கல் நீக்கும்.

25. மாங்கொட்டை சீதபேதி, செந்நீர் கழிச்சல், செந்நீர்க் கடுப்பு, மூலச்சூடு, பெரும்பாடு, அதிசாரம் இவை நீக்கும்.

26. மாதுளை வித்து விந்து இறுக்கும்; மேக நீர்க்கடுப்பு நீக்கும்; உறுப்புக்கள் திடமுண்டாக்கும்.

27. மிசரிப் பருப்பு சாரப்பருப்பின் குணமெல்லாம் கொடுக்கும்.

28. முந்திரிப் பருப்பு வாதபித்தக் கலப்பு, உறுப்பு வளர்ச்சி, பசியின்மை உண்டாக்கும்.

29. முருங்கை வித்து விந்துகட்டும்; உடல்வலிமை தரும்.

30. வாதுமைப் பருப்பு கண்படலம், கொழுத்தபுண்-போக்கும்.

31. வெங்காய விதை குன்மம் போக்கும், உடல்திடமாக்கும்.

32. வெள்ளரி விதை கடுக்கு நீரடைப்பு, நீர்த்துளை வெடிப்பு, சதையடைப்பு, கல்லடைப்பு, மிகுமேகம்-போக்கும்.

33. வேப்பங் கொட்டை பல்வகை நஞ்சு, சந்நி நீக்கும்.

கங. பிஞ்சுவகைக் குணம்

1. அத்திப் பிஞ்சு மூலவாயு, மூலக்கழிச்சல், செந்நீர் மூலம், வயிற்றுக்கடுப்பு-இவைநீக்கும்.

2. அவரைப் பிஞ்சு முக்குற்றம், புண், காய்ச்சல், கண் பில்லம் இவை நீக்கும்; பத்தியப்பொருள், இரவு உணவு இவற்றிற்கு நல்லது.

3. கத்தரிப் பிஞ்சு காய்ச்சல், மிகு பித்தம், சளி, முக்குற்றம், இவை நீக்கும்; சக்கை இளக்கும்; குரல் ஒலி வலுக்கும்; சொறிசிரங்கு நோய்கள் மிகும்—பத்தியப் பொருள்.

4. பலாப் பிஞ்சு நாவறட்சி, பித்தநோய் நீக்கும்; விந்து மிகுக்கும்; மந்தம் உண்டாக்கும்.

5. மாதுளம் பிஞ்சு பற்பல விடாக் கழிச்சல்கள் நீக்கும்.

6. மாம்பிஞ்சு முக்குற்றம், சுவையின்மை, வாந்தி, பசியின்மை இவை போக்கும்.

7. முருங்கைப் பிஞ்சு என்புக் காய்ச்சல், என்புருக்கி நோய், சுவையின்மை, உறுப்புக்குறை இவை நீக்கும்.

8. வாழைப் பிஞ்சு (கச்சல்)—செந்நீர்க் கடுப்பு, செந்நீர் மூலம், மிகுநீர், கீழ்வயிற்றுப்புண் இவை போக்கும்.

கரு. பூவகைக் குணம்

1. அத்திப் பூ சுருட்டுப் புகையாலும், வெயில் முதலியவற்றாலும் பிறந்த பித்தம், உடல் அழலை இவை நீக்கும்.

2. செந்தாமரைப் பூ வாந்தி, விழியெரிச்சல், காய்ச்சல், நாவறட்சி இவை போக்கும்.

3. தும்பைப் பூ நாவறட்சி நோய், சந்நிக் காய்ச்சல், கண்குற்றம் நீக்கும்.

4. பன்னீர்ப் பூ சக்கைக் கட்டு, காய்ச்சல், நாவறட்சி, ஓக்காளம், சக்கைவாய் எரிச்சல், செந்நீர் வெள்ளை, வயிற்றிசிவு, வாந்தி, சுவையின்மை, விந்துக்குறை, மிகு பித்தம் இவை போக்கும்.

5. புளியம் பூ மிகு பித்தம், சுவையின்மை, மிகுவாந்தி நீக்கும்.

6. புன்னைப் பூ நீங்காமேகம், மயக்க சந்நி, கரப்பான், சொறி சிரங்கு, மயக்கம் உண்டாக்கும்; பித்தம் மிகுக்கும்.

7. மல்லிகைப் பூ கோழை, கண்மயக்கம், உடல்வெப்பு, சூனியம், நீக்கும்; செல்வம் பெருக்கும்.

8. மகிழம் பூ உடல்வெப்பம் உண்டாக்கும்; இதனை முகர சுவையின்மை நீங்கும்,

9. மாதுளம் பூ பித்தவாந்தி, வயிற்றுக் கடுப்பு, வெப்பு, செந்நீர் மூலம் இவை போக்கும்; செந்நீர்த்திடமும், வலிவும் தரும்.

10. மாதுளம்பழத் தோல் வாய்ப்புண், சீதபேதி, செந்நீர்க் கழிச்சல் போக்கும்; உள்ளுறுப்புக்கள் வன்மை பெறும்.

11. முருங்கைப் பூ மிகுபித்தம், சுவையின்மை நீக்கும்; கண் குளிர்ச்சி, உறுப்பு வளர்ச்சி உண்டாக்கும்.

12. வாழைப் பூ செந்நீர் மூலம், வெள்ளை, பயித்தியம், வயிற்றுக் கடுப்பு, இருமல், கைகால் எரிச்சல், இவை நீக்கும்; விந்து வளர்ச்சி உண்டாக்கும்.

13. வெங்காயப் பூ குன்ம நோய்கள், குடல் நோய்கள் நீக்கும்.

14. வெண்டாமரைப் பூ ஈரற்சூடு, மருந்துச்சூடு, உட்சூடு நீக்கும்.

15. வேப்பம் பூ சந்நி, பித்த மூர்ச்சை, நாக்குற்றம், சுவையின்மை, வாந்தி, நீடித்த வாதம், ஏப்பம், சக்கைப் பூச்சிகள் இவை போக்கும்.

கரு. கீரைவகைக் குணம்

1. அறு கீரை (அறைக்கீரை) காய்ச்சல், நடுக்கல், சந்நி, வாத நோய், இவை போக்கும்; உறுப்புக்கள் வளர்க்கும்; விந்து மிகுக்கும்.

2. ஆரைக் கீரை பித்தநோய், மிகுநீர், செந்நீர்வெள்ளை, இவை நீக்கும்.

3. கருனைத் தண்டுக் கீரை மூலம், மிகுசளி, கொழுப்புறுப்பு வளர்ச்சி நீக்கும்; செரிப்பும் பசியும் உண்டாக்கும்.

4. கலவைக் கீரை முக்குற்றம், சக்கைச் சிக்கல், குடல்நோய், போக்கும்; பத்தியப் பொருள்.

(கலவைக் கீரை பல கீரைகளும் கலந்தது)

5. காசினிக் கீரை சிறுக்கிருமல், மந்தம், என்புக்காய்ச்சல், வீக்கம், செந்நீர் அழுக்கு இவை நீக்கும்; செந்நீர் வளர்க்கும்.

6. கீரைத் தண்டு பித்தவலி, மேகச்சூடு, வயிற்றுக்கடுப்பு, செந்நீர்க் கழிச்சல் இவை நீக்கும்.

7. குப்பைக் கீரை (முள்ளி) நீர்ப்பெருக்கும்; வெப்பமுண்டாக்கும்.

8. குப்பைமேனிக் கீரை பலநோய், தீப்புண், பலநஞ்சு, வயிற்றுவலி, வாதநோய், செந்நீர் மூலம், நமைச்சல், குத்தல், இரைப்பு, மூக்கொழுக்கு, சளிநோய் இவை நீக்கும்.

9. கொத்துமல்லிக் கீரை உட்சூடு, நளிர் காய்ச்சல், பயித்தியம், செரியாமை, வாந்தி, விக்கல், நாவறட்சி, விந்துக்குறை, பெரு ஏப்பம், சிவந்த கொப்புளம், இவை போக்கும்; சுவையின்மை, பித்தக் காய்ச்சல், வன்மை உண்டாக்கும்.

10. சாறுவேளை காமாலை, சக்கைநீர்க்கட்டு, பாண்டுநோய், மிகுகபம், இவை நீக்கும்.

11. சிறு கீரை கண் புகைச்சல், கண்நோய், ஈளை, படலம், இரசவேகம், புண், சொட்டுநீர், வீக்கம், பித்தம், நஞ்சுகள் நீக்கும்; அழகுண்டாம்.

12. சுக்கான் கீரை குன்மம், பித்த ஊறல், உடல் வெப்பு, கண்டமாலை இவை நீக்கும்.

13. செங்கீரைத் தண்டு தீராத பித்தம், பெரும்பாடு, சந்நி, நீக்கும்.

14. தூதுளைக் கீரை காதுமந்தம் (சைத்யம்), காதெழுச்சி, ஈளை, நமைச்சல், மதநோய், பசியாமை, முக்குற்றம், உடலுட்கல், விந்து நீக்கம், இளைப்பு இவை நீக்கும்.

15. பண்ணைக் கீரை ஆமம், கரப்பான், சொறி சிரங்கு, புண்-நீக்கும்; சக்கை இளக்கும்; குடலுக்கு வலிவு தரும்.

16. பரட்டைக் கீரை ஐநோய், வாதநோய், கரப்பான், போக்கும்; பித்தந் தரும்.

17. பருப்புக் கீரை (பசளை) பித்தமறுக்கும், சிறுநீர் நோய், செந்நீர்ப்பித்தம், மேகம், தோல்நோய், சீதபேதி போக்கும்; புடை, கரப்பான், பூச்சி உண்டாக்கும்; மிகுவாதம் நீக்கும்; முலைப்பால் பெருக்கும்.

18. பின்னுக்குக் கீரை சக்கை, சிறுநீர் இறக்கும்; வாதம், கரப்பான் உண்டாக்கும்; வெள்ளை, மேகம் போக்கும்.

19. புதியனுக் கீரை சுவையின்மை, வாந்தி, பசிமந்தம், செந்நீர் அழுக்கு, சக்கைப்போக்கு நீக்கும்; உணவு செல்லும்.

20. புளிச்சிறு கீரை சிணுக்கிருமல், மந்தம் நீக்கும்; உடல் வலிவு, உறுப்பு வளர்ச்சி உண்டாக்கும், வாதநோய், சுவையின்மை, ஐ, செந்நீர்ப்பித்தம், கரப்பான், வீக்கம், என்புக்காய்ச்சல் இவையும் நீக்கும்.

21. புளிப்புக் கீரை மிகுவாதம், சுவையின்மை, ஐ, செந்நீர்ப் பித்தம், கரப்பான் நீக்கும்; பித்தம் மிகுக்கும்.

22. புளியாரைக் கீரை பித்தமயக்கம், வாதச்சளி, மூலவாயு விடாக்கழிச்சல், செந்நீர்மூலம் இவை போக்கும்.

23. மணலிக் கீரை மிகுவாதம், மார்புச்சளி, ஐ, பூச்சிநோய், பயித்தியம் இவை போக்கும்.

24. முருங்கைக் கீரை பசிமந்தம், உட்சூடு, தலைநோய், பித்த மூர்ச்சை, கண்ணோய் இவை போக்கும்.

25. முளைக் கீரை ஈளைக்காய்ச்சல் நீக்கும்; பசிதரும்.

26. வசலைக் கீரை சிறுநீர்க்கடுப்பு, சொட்டுச்சிறுநீர், ஒழுகு வெள்ளை, சுவையின்மை, வாந்தி இவை போக்கும்.

27. வெந்தயக் கீரை வயிற்றுப்பொருமல், பசிமந்தம், வாதம், ஐக்குற்றம், ஈளை, சுவையின்மை இவை போக்கும்.

௬௯. கறிவகைக் குணங்கள்

1. துவரம்பருப்பு பசு நெய்யுடன் உண்ணில் அவ்வளவுக் கவ்வளவு தசை வளரும்; குறிஞ்சிநிலப் பருப்பே சிறந்தது. மேலும் வெப்பு, குடல்முறைப்பு, சக்கைச் சிக்கு, நாநோய், பித்தம், வாதசளி, நீங்காச்சொறி இவை நீக்கும்; நினைவு, வனப்பு, கண்ணொளி இவையுண்டாக்கும்.

2. துவையல் புளிப்பிலைத் துவையல் பித்தம் நீக்கும்; வெறும் புளித் துவையல் செந்நீர் முறிக்கும்; புளி

சேராத துவையல் நலம்; காரம் சேர்ந்த துவையல் பசியை எழுப்பலால் மிக நல்லது.

3. பச்சடி புளிச்சுவைப் பச்சடி மிகுபித்தம் போக்கும்; உறைப்புப்பச்சடி ஐ போக்கும்; இனிப்புப் பச்சடி சுவையின்மை நீக்கும்; துவர்ப்புப் பச்சடி வாதத்தை யுண்டாக்கும்.

4. பொரியல் உறைப்புப் பொரியல் சளி யுண்டாக்கும்; புளிப்புச் சுவைப் பொரியல் மந்தம் வாதம் இவை தரும்.

5. வறல் இளவறுப்பு மந்தம் தரும்; கருகல்வறுப்பு வாத பித்த சளியையும் தரும்; நடுத்தரவறுப்பு கலப்பு நோயையும் நீரேற்றத்தையும் தணிக்கும்.

6. நேரக் கறிவகைகள்

(அ) இராக்கறி அவரைப்பிஞ்சு, அத்திக்காய், பசும் பால், முருங்கைப்பிஞ்சு, துவரம்பருப்பு, ஆற்று முள்ளிக்காய், காட்டுத் தூதுணங்காய்.

(ஆ) காலைக்கறி காராமணி, உழுந்து, கடலை, துவரை, எள், மொச்சை, தட்டைப்பயறு, சிறுபயறு, கடுகு, மிளகு, சுக்கு, பெருங்காயம், இவை காலைக்கறிகளிற் சேர்வது நல்லது.

(இ) நடுப்பகற்கறி கிழங்கு வகைகள், பழங்கள்,வாதப் பொருள்கள், மந்தப் பொருள்கள், இலைக்கறி கள், எருமைத்தயிர், மோர், பகலவன் வெப்பத் தாலும், உழைப்பினாலும் இவற்றின் குற்றங் கள் நீங்கும்.

கள. காய் தானியங்களின் குணம்

1. உழுந்து வாதச்சளி, மந்தம் உண்டாக்கும்; இடுப்புறுதி, மிகுவீரியம் தரும்; பயித்தியமும் எலும்புருக்கியும் நீக்கும்; வயிற்றுவலி, கழிச்சல், சீதபேதி, சிறுநீர் நோய், மூலநோய், ஈரல்நோய், இவற்றைக் கண்டிக் கும்; கருப்பை நோய்கள் நீக்கும்.

2. எள்ளு சூடு, சளி, ஈளைநோய், பித்தம் இவை தரும்; உடல் வன்மை உண்டாக்கும்; குரலொலி கெடுக்கும்; செந்நீர் வெளிப்படுத்தும்; கண்ணொளிதரும்; மருந்தை முறிக்கும்.

3. கடலை வயிறுப்பொருமல், நாவறட்சி, குடல்நோய், கழிச்சல், மயக்கம், மூலவாயு இவை உண்டாக்கும்; மருந்து கெடுக்கும்; பச்சைக்கடலையால் உடல் தழைக்கும், உள்ளுறுப்பு திடமாகும், நுரையீரல் வன்மை பெறும்.

4. கொள்ளு அண்டவாயு, பித்தகுன்மம், பயித்தியம், உண்டாக்கும; வாதவலி, நீரேற்றம், நளிர் காய்ச்சல், மருந்து வன்மை இவை போக்கும்.

5. துவரை உப்பிலாப்பத்தியம், காய்ச்சல், சந்நி, இவற்றிற்கும் படுக்கை நோயாளிக்கும் நல்லது.

6. மக்காச்சோளம் பசி அடக்கும்; உடல் வன்மை கொடுக்கும்; விந்து இறுக்கும்; கழிச்சல் கட்டும்.

7. மொச்சை முக்குற்றம், இரைச்சல் வாயு உண்டாக்கும்; சக்கை குறைக்கும்; சூடு தணிக்கும்.

8. பயறு

(அ) கரும்பயறு ஐநோய், தொடைநரம்பு நோய் விலக்[கும்.

(ஆ) சிறுபயறு சளி, பித்தம், சுவையின்மை இவை போக்கும்; பித்தவாதம் உண்டாக்கும்.

(இ) தட்டைப்பயறு பசிமந்தம், சந்நி உண்டாக்கும்.

(ஈ) பச்சைப்பயறு பித்தம் நீக்கும்; வாயு தரும்; ஐ உண்டாக்கும்.

(உ) பனிப்பயறு பித்தம், சுவையின்மை, சளி, வெள்ளை, கரப்பான் இவை போக்கும்.

(ஊ) பெரும்பயறு (காராமணி) பசி கெடுக்கும்; செரியாமை, விடாக்கழிச்சல், சளி, வாதப்பிடிப்பு, வாதமூலம் இவை உண்டாக்கும்.

(எ) வெண்பயறு ஓடுவாதம் போக்கும்.

9. வேர்க்கடலை செந்நீர் மூலம் போக்கும் உடல்; வளப்பம், பித்தம் உண்டாக்கும்.

கஅ. குழம்பு சாறு வகைக் குணம்

1. குழம்பு உறைப்புள்ள குழம்பால் வாத மிகுதியுண்டாம். நீர்க்கவைத்த குழம்பால் முக்குற்றம் விலகும்.

2. சாறு—துவரம்பருப்புச் சாறு

(அ) துவரம்பருப்பிட்டுக் காய்ச்சிய நீரில் மிளகு, பூண்டு முதலிய சம்பாரங்கள் சேர்த்துச் சாறு வைத்து நற்கனிகள் சேர்ந்த உணவுடன் அருந்தில் மந்தம், மிகுவாதம் போம்.

(ஆ) கொள்ளுச்சாறு இளைத்த உடல் பருக்கும்; உரமாக்கும்; மிகுவாதம், மிகுபித்தம், விடாக் கழிச்சல், குன்மம், காய்ச்சல், பெருமூச்சு, ஈளை, இருமல், விழிப்புண், நீரேற்றம் இவை போக்கும்.

கசு. உணவு முடிவிற் கொள்வனவற்றின் குணம்

1. உணவு முடிவில் புளித்த தயிரும், உப்புங் கூட்டி யுண்ணில் உணவில் உள்ள முக்குற்றம் நீங்கும்; செரிப்புத் தன்மையும் மிகும்.

2. உணவு முடிவில் மோர்ச்சோறு கொள்வது உடல் வெப்பத்தை மிகுக்கும்; பித்தமூலச் சிறுநீர், முளைமூலம், பாண்டு, நாவறட்சி, விடாக்கழிச்சல், ஐச் சோகை இவை விலக்கும்; புண்களுக்கு ஆகாது.

உ0. வயிற்றைத் தூய்மை செய்வது முதலியன

1. வயிற்றைத் தூய்மை செய்தல் மருந்துக்குடி நீர், அரைத்த கற்க மருந்து, ஆமணக்கு நெய் இவற்றைக் கோடைக் காலத்திற் கொடுக்கலாம்.

நேர்வாளம், பலவித கள்ளிப்பால், இரசம், உப்பு இவை சேர்ந்த மருந்துகளை எப்போதும் கொடுக்கலாம்.

2. வயிற்றுப்போக்குச் செய்வன காராமணி, பறங்கி, பருங் காராமணி, அகத்தி ஆகிய கீரைகளும் கத்தரிக்காயும்.
3. வயிற்றுப்போக்கு கட்டுவன வாழைப்பிஞ்சு, அத்திப்பிஞ்சு முதலியன.
4. (உடலுக்கு உடனே) வலிவு கொடுப்பன, கெடுப்பன தண்ணீர், பசும்பால் இவை உடனே வலிவு செய்யும். கடூர வெயில், தயிலமுழுக்கு இவை உடனே வலிவுக்கேடு தரும்.

உகூ. பால் வகைகளின் குணம்

1. எருமைப்பால் திமிர்வாதம் உண்டாக்கும்; அறிவுக் கூர்மையையும், மருந்துக் குணத்தையும் கெடுக்கும்.
2. ஒட்டைப்பால் பசிமந்தம், வாதசூலை, பல்வகைக் கரப் பான், காதொலி, செவிடு, மிகுஇருமல், இரைப்பு உண்டாக்கும்.
3. கழுதைப்பால் இது மிகு இனிப்பு. வாதநோய், கரப் பான், புண், மேகத்தடிப்பு, கட்டி, ஒட்டுப்புண், சொரி, சீழ்வெள்ளை, சிரங்கு, புதுமைப்புண், கரு மேகம், மிகுபித்தம், வெறிமயக்கம், சளிநோய் இவை போக்கும்.
4. செம்மறியாட்டுப்பால் ஐப்பித்தம், வயிற்றுப்பொருமல், மேல்மூச்சு இவை யுண்டாக்கும்.
5. பசுப்பால் இளையோர், முதியோர்களுக்கும்; பழஞ்சுரம், புண், சூலை, வெள்ளை, வலுவின்மை, மெலிவு இவை யுடையார்க்கும் நல்லது.
   - (அ) கபிலைப் பசுப்பால் முக்குற்றம் நீக்கும்.
   - (ஆ) கரும் பசுப்பால் சளிநோய் நீக்கும்,
   - (இ) காராம்பசுப்பால் விழிப்பிணி, ஈளை, மற்றப்பாலின் குற்றங்கள், செந்நீர்ப் பித்த நோய் இவை நீக்கும்.
   - (ஈ) கோம்பசையும் பசுப்பால் பித்தநோய் நீக்கும்; இசிவு நோய்கள், சளிநோய் உண்டாக்கும்; விந்து மிகுக்கும்.

(உ) செம்மைநிறப் பசுப்பால் முக்குற்றம் அறுக்கும், சிறந்தது.

(ஊ) நாரைப் பசுப்பால் முயல்வலி நீக்கும்.

(எ) மான் பசுப்பால் முக்குற்றம் நீக்கும்.

(ஏ) வென் பசுப்பால் மிகுபித்தம் போக்கும்.

(ஐ) ஆகாப் பசுப்பால் (அரணை நோய், தாரா நோய், வெண்புள்ளி, சக்கை தின்னல், என்புண்ணல் இவையுடைய பசுவின்பால்) முக்குற்றம், ஈளை, ஆயுள் குறைவு இவை யுண்டாக்கும்.

(ஒ) இராப் பசுப்பால் கண்ணோய் போக்கும்; பத்தியப் பொருள்.

(ஓ) பகற் பசுப்பால் அழலை, ஈளை, பித்தம் போக்கும். மேனி யொளி குறையும்.

6. முலைப்பால் எழுவகைக்குற்றம், வெப்பம், சந்நி, காய்ச்சல் வகைகள் முக்குற்றம், சிறுநீர்க்கொதிப்பு, வறட்சி இவை போக்கும்; உடல்வன்மை யுண்டாக்கும்; துணை மருந்து, கலிக்கம் இவைகட்கு ஆகும்.

(அ) கருமைப்பெண்பால் கண்சிகிச்சைக் குதவும்; மருந்துக்குதவாது.

(ஆ) செம்மைப்பெண்பால் முக்குற்றம் போக்கும்.

(இ) பரத்தையர்பால் முக்குற்றம், வாதநோய், செந்நீர்ச்சொறி, ஆறுப்புண், கழல்வாதம் இவை யுண்டாக்கும்.

7. யானைப்பால் மிகுவாதம் நீக்கும்; விந்து வளர்க்கும், மிகு வன்மை, உடலழகும் உண்டாக்கும்.

8. வெள்ளாட்டுப்பால் வாதபித்தம், உயிர்ப்பு நோய், சளி, சீதபேதி, புண், வாத வீக்கம் நீக்கும்; பசி யுண்டாக்கும்.

9. பாலைப்பற்றிய சில குறிப்புக்கள்

(அ) பாற்கலன் செப்புக்கலத்தில் காய்ச்சியபால் வாத ஐ போக்கும்.

(ஆ) பொன் மண் கலங்களில் காய்ச்சிய பால் மிகு பித்தம் போக்கும்.

(இ) வெள்ளி, வெண்கலம், இரும்பு இக்கலன்களில் காய்ச்சியபால் ஈளை நோயை நீக்கும்.

(ஈ) ஆடையெடுத்தபால் பசிமந்தம், எழு தாதுக்களின் செரிப்பு உண்டாக்கும், முக்குற்றம் நீக்கும்.

(உ) காய்ச்சும்பாலுக்கு நீரளவை வெள்ளாடு, பசு இவைகளின் பாலுக்கு எட்டிலொரு பங்கும், எருமை செம்மறியாட்டுப் பால்களுக்குச் சரிப்பங்கும் வேண்டும். எந்தப் பாலிலும் சுக்கு, சிறுகாஞ்சொரி வேர் சேர்த்துக் காய்ச்சில் அது வெள்ளாட்டுப்பாலுக்கு நேராம்.

(ஊ) பாலேடு பயித்தியம், பித்தவாந்தி மூர்ச்சை நீக்கும். மிகுவன்மை, வீரியம், உடல் வெப்பு ஓங்கும். இதனை வலியிலார் உண்டாலும் குற்றமில்லை.

10. மரப்பால்

(அ) அத்திப்பால் பித்தம், மிகுநீர், கீல்பிடிப்பு சொட்டுமூத்திரம் நீக்கும்.

(ஆ) ஆலம்பால் வெள்ளை நீக்கும்; ஆடும் பற்களை இறுக்கும். குளிர்ச்சி, உடல் திடம் உண்டாக்கும்.

(இ) தேங்காய்ப்பால் உணவு செலுத்தும்; வாதம், பித்தம், கரப்பான், விந்து வளர்ச்சி உண்டாக்கும்.

(ஈ) பிரமதண்டுப்பால் கண்ணோய்களையெல்லாம் அகற்றும்; கண்கூசல், கண்ணருகல், கண் ஒழுகல், கண் நோதல், கண் சிவத்தல் முதலியன.

(உ) புங்கம்பால் புண், வாதவலி நீக்கும்; உடல் பொன்னொளி தரும்.

(ஊ) பேயத்திப்பால் கால்வெடிப்பு, மேகச்சொறி, பெருநோய்த்தடிப்பு, மூலைப்புண் இவை நீக்கும்.

(எ) பிராயன்பால் பல்வலி, பித்தவெடிப்பு போக்கும் விந்து வன்மை பெறும்.

உ௨. தயிர்வகைக் குணம்

1. எருமைத்தயிர் எரிச்சல், பித்தநோய் போக்கும்; சளிபற்றிய கரப்பான், வாதநோய், உடற்பாரிப்பு, அறிவு மந்தம் உண்டாக்கும். கண் குளிர்ச்சி தரும்.
2. ஒட்டைத்தயிர் உடல்வெப்பு, சிறுகரப்பான், புண், உடற்பாரிப்பு உண்டாக்கும்; நாவறட்சி, சக்கைப்பூச்சி நீக்கும்.
3. செம்மறியாட்டுத்தயிர் கரப்பான், சொறி, மூலக்கடுப்பு, செந்நீர் மூலம், வாதநோய் இவை யுண்டாக்கும்.
4. பசுத்தயிர் செரியாமைபோக்கும்; பசியுண்டாக்கும்; நாவறட்சி, ஆயாசம், உடலெரிச்சல் இவை நீக்கும்.
5. வெள்ளாட்டுத்தயிர் மிகச்சூடு; ஏட்டால் மந்த முண்டாம்.

உ௩. மோர்வகைக் குணம்

1. எருமைமோர் நாவறட்சி, கழிச்சல், நீர்க்கழிச்சல், காமாலை, பூச்சி இவை நீக்கும்.
2. ஒட்டைமோர் வாதபித்தத் தணிவுண்டாக்கும்.
3. பசுமோர் விக்கம், வயிற்றுக்கட்டி, வயிற்றுவலி, பாண்டு, மிகுபித்தம், இடுமருந்துநோய், கழிச்சல், முக்குற்றம், பசிமந்தம், வெப்பம், நாவறட்சி இவை நீக்கும்.
4. வெள்ளாட்டுமோர் மேகநோய் போக்கும்.

உ௪. வெண்ணெய்வகைக் குணம்

1. எருமை வெண்ணெய் சொட்டுச் சிறுநீர் நீக்கும்; பூச்சி, பசியாமை, வாதநோய், சளி, கரப்பான், கலப்புநோய் இவை உண்டாக்கும்.
2. ஒட்டை வெண்ணெய் சிறுநீர்ப் பெருக்கு, மிகுபித்தம் இவை நீக்கும்; வாதநோய், மந்தம் உண்டாக்கும்; அழகு தரும்.

3. பசு வெண்ணெய் கண்ணோய், கண்ணெரிச்சல், பீளை, பன்மேகம் போக்கும்; பசியுண்டாக்கும்.

4. வெள்ளாட்டு வெண்ணெய் காய்ச்சல், பித்தம், கரப்பான், நீக்கும். பசியுண்டாக்கும்.

உரு. நெய்வகைக் குணம்

1. எருமை நெய் அறிவு, அழகு, கண்ணொளி இவை குறைக்கும்; வாதபித்த குற்றம், கரப்பான் இவையுண்டாக்கும்.

2. கலப்பு நெய் விந்துவளர்ச்சி, பசியுண்டாக்கும்.

3. பசுநெய் நாவறட்சி, கண்நோய், வாந்தி, பித்தநோய், நச்சுவாதம், புண்வெள்ளை, வயிற்றெரிவு, பித்த விக்கல், இருமல், வயிற்றுவலி, சினைப்பு, குடல் நெளிவு, என்புருகல், மூலநோய், இவை நீக்கும்.

4. வெள்ளாட்டு நெய் ஐ, வாதம் போக்கும்; உடல் வளர்க்கும்; கண்ணொளி யுண்டாக்கும்; பத்தியப்பொருள்.

உசா. மற்றநெய்க் குணம்

1. ஆமணக்கு நெய் பேதியாக்கும்; மிகுவாதம், குன்மம், குடலேற்றம், பொறிகளெரிச்சல், இவை நீக்கும்; பொன்னிறமும், உறுப்பு வளர்ச்சியுமுண்டாக்கும்.

2. இலுப்பை நெய் கரப்பான், கடிநஞ்சு, புண், சிரங்கு, வன்மை உண்டாக்கும்; இடுப்புவலி, வலுக்குறைவு— நீக்கும்.

3. எள்நெய் அறிவுத்தெளிவு, விழிக்குளிர்ச்சி, மனமகிழ்ச்சி, உடல்திடம், வலிவு, ஒளி, வாலிபத்தன்மை உண்டாக்கும். கண்ணோய், காதுநோய், மண்டை சிவப்பு, ஈளை, புண்—இவை நீக்கும்.

4. கூட்டு நெய்

(அ) முக்கூட்டு நெய் எள்நெய், பசுநெய், ஆமணக்கு நெய் சேர்ந்த நெய்—வாதபித்த ஐ மீறவொட்டாது.

(ஆ) ஐங்கூட்டு நெய் ஆமணக்கு, எள், வேம்பு, புன்னை, புங்கு, இந்நெய்கள் சேர்ந்த நெய்-நடுக்கநோய், பெருவாதம், சந்நிக்காய்ச்சல், சளிநோய் இவை நீக்கும்.

5. சிற்றாமணக்கு நெய் மருந்து வெப்பு, வாயு, மூலச்சூடு நீக்கும். குழந்தைகளின் உடலை வளர்க்கும்.

6. தேங்காய் நெய் கிரந்தி, பல்நோய், படர்தாமரை, சிரங்கு போக்கும். தலைமயிர் வளர்க்கும்.

7. நீரடிமுத்து நெய் மேல்பூசினாலும், உட்கொண்டாலும், வாத குட்டம், சிரங்கு, சொறி, பெருநோய், சூலை நீக்கும்.

8. புங்கன் நெய் அழகு ஒளி உண்டாக்கும்; கரப்பான், சிரங்கு, சொறி நீக்கும்.

9. புன்னை நெய்—சந்நி, மிகுவாதநோய், நடுக்குநோய், வலிகள், புண் பூச்சி - இவை போக்கும்.

10. வாதுமைநெய் சூடு கபம் நீக்கும்; ஒளிதரும்.

11. வேப்பநெய் பெருவாதம், சொறிப்புண், கரப்பான், சிரங்கு, முன்னிசுவு, காய்ச்சல், சந்நி இவை நீக்கும்.

உஎ. பொங்கல் சோற்று வகைக் குணம்

1. உளுந்துப் பொங்கல் ஐ, இருமல், மந்தம், உடல் வன்மை மிகுக்கும்; பித்தந் தணிக்கும்.

2. எள்ளுப் பொங்கல் வாத பித்தம் அகற்றும்; ஐ, உடல் வன்மை உண்டாக்கும்.

3. கடுகுப் பொங்கல் கடுகும் புளியுஞ் சேர்ந்த சோறு வாத மிகுக்கும்; ஐமிகுதி ஒழிக்கும்.

4. கட்டுச் சோறு இதனை நாளுங்கொண்டால், உடல் குத்தல், விந்துயர்ச்சி, இரைப்பு, இருமல், கண்டமாலை உண்டாக்கும்; செந்நீர் நோய், ஒழுக்கு வெள்ளை இவை நீக்கும்.

5. சர்க்கரைப் பொங்கல் சுவையின்மை, வாந்தி, பித்தம் நீக்கும்.

6. தயிர்ச் சோறு உட்சூடு, பித்தம் போக்கும்; உடலைக்காக்கும்; சிறந்தது.

7. பருப்புப் பொங்கல் (வெண் பொங்கல்)—வீரிய விளைவு, வாதப் பெருக்கம் உண்டாக்கும்; பித்த மிகுதி போக்கும்.

8. பாற் பொங்கல் வெப்பிலா வாதம் உண்டாக்கும்; அழலும், பித்தமும் அகற்றும்; நெய் சர்க்கரை சேர்ந்தால் ஐ மேற்படும், பித்த மொடுங்கும்.

9. புளிப் பொங்கல் வாந்தி, சுவையின்மை, பித்தம் போக்கும்; எலுமிச்சஞ் சாற்றில் செய்துண்பது சிறந்தது.

10. மிளகுப் பொங்கல் வாயுப் பொருமல், குடலிரைச்சல், சளி, மிகு பித்தம் போக்கும்; பசியுண்டாக்கும்.

உஅ. சிற்றுண்டி வகைக் குணம்

1. அதிரசம் சளியும், பித்தமும் மிகுக்கும்; வாயு சுழித்து உள்ளடக்கும்.

2. அப்பளம் வாயு பெருக்கும்; உடற்குறுதி செய்யும்; சளி நீக்கும்.

   சோற்றுப் பளம் முக்குற்றம் அளவு படுத்தும்.

3. அவல் பாலும் நெய்யும் சேர்ந்தால் உடல் வன்மையுண்டாக்கும்; தயிர் கலந்தால் மந்தமாக்கும்; மோர்கலந்தால் கோபமும் எரிவும் நீக்கும்; நீரில் ஊறவைத்துண்டால் வாயுமிகும்; உணவேற்காது; புளிப்பு சேர்த்துண்டால் பித்தநோய் நீக்கும்.

4. இட்டலி மிகு பித்தம் நீக்கும்.
   சம்பார இட்டலி முக்குற்றம் மீறுது.

5. உழுந்து வடை மிகுவாதம், மிகு பித்தம் போக்கும்; பசி கெடுக்கும்; உணவொடு கொள்ளில் நலம்.

6. கொழுக் கட்டை மிகுவாதம், மிகு பித்தம், ஐ உண்டாக்கும்.

7. கோதுமை அடை உடல் வன்மை, பசி, விந்து மிகுக்கும் ஐ நீக்கும்.

8. தயிர் வடை உளுத்தம் பருப்பைப் புளித்த தயிரில் ஊற வைத்து, ஒன்றிரண்டாக அரைத்து, சுட்ட வடையை நல்ல தேனில் தோய்த்து, உண்ணில் ஐபித்த நோயும், வாத முதிர்ச்சியும் நீங்கும்.

9. தேன் குழல் ஐவாதம், வெப்பம் மிகுக்கும்; நாவறட்சி யுண்டாக்கும்; பசி மந்தம் செய்யும்.

10. தோசை மிகு பித்தம், ஐவாதம் நீக்கும்.

சம்பார தோசை வாதம், ஐ போக்கும்; வீரியம் மிகும்.

11. நெற் பொரி நாவறட்சி, வாந்தி, பசிமந்தம், பித்தவாதம், மதநோய், மூர்ச்சை, கழிச்சல், சுவையின்மை நீக்கும்.

12. பரமான்னம் மிகு பித்தம், நாவறட்சி, விலக்கும்; காய்ச்சல், மிகுவன்மை, உடற்பெருக்கு உண்டாக்கும்.

13. பாயசம் சக்கைக் கட்டு, வாந்தி, பித்தம், இளைப்பு, இவை நீக்கும்; மந்தம், ஐ, பொறிநலம், அழகு, உரம், மனத்தெளிவு, பசி, அறிவு—இவை யுண்டாக்கும்.

14. பிட்டு வன்மை, மேல்வெப்பு உண்டாக்கும்; பெண்கட்குச் செந்நீ ரொழுக்குக் கட்டும்.

15. பொரியுண்டை வாந்தி, பித்தம், வாதம், சளி—இவை போக்கும்.

16. முறுக்கு ஐ, பித்தம் மிகுக்கும்; மிகுவாதம் தணிக்கும்.

17. வாழைப்பழ வடை முக்குற்றம் நீக்கும், நெய் சேர்த்துண்ணில் நல்லது, பேயன் வாழைப்பழம் சிறந்தது.

உசு. உரவுணவும், கனி கொள்ளலும்

1. உரவுணவு அறுசுவையோடு கொள்ளும் உணவு உடலுக்கு உரந்தரும்; அதற்கு எட்டுப்பங்கு உரம் மாவும் அவலுமாம்; இவைக்கு எட்டுப்பங்கு உரம் பாலும் பழமும்; இவற்றைவிட எட்டுப்பங்கு உரம் இறைச்சியுங் குழம்பும்; இவற்றிற்கு மேல் எட்டுப்பங்கு உரம் நெய்கள்: இந்நெய்கள் அளவு கடந்தால் தீமையையுஞ் செய்யும்.

2. கனியுண்ணல் உண்பதற்கு முன் நெல்லிக் கனி, பின்பு இலந்தைக் கனி, இவ்விரு வேளையும் விளாங்கனி, கொள்ளலாம்; வாழைக் கனி எப்போதுங் கூடாது.

௩௦. உணவைப் பற்றிய செய்திகள்

1. உணவின் அளவை சோறும் கறியும் அரைவயிறு, பால் மோர், நீர், கால்வயிறு, கால்வயிறு வளியும் அழலும் உலாவி உண்டியைச் செரிப்பிக்க வேண்டிய இடை வெளியாகும்.

2. உணவின் சாற்றுச் செய்கை உணவின் சாறு முதல் நாள் நீருறுப்பை நனைத்து ஊறி, இரண்டாம் நாள் அதனில் ஏறிச் செந்நீரிற் பாய்ந்து, மூன்றும் நாள் தசையுறுப் பிலும், நான்காம் நாள் மேதை யுறுப்பிலும், ஐந்தாம் நாள் என்புறுப்பிலும், ஆறும் நாள் மூளை யுறுப்பி லும், ஏழாம் நாள் விந்தினிலும், சென்று அவ்வவ் வுறுப்புகட்கு வளர்ச்சி கொடுத்து எட்டாம் நாள் உடலுக்கு உரம் தந்து நிற்கும்.

3. உணவு செய்விதி முதலில் இனிப்புப் பொருள், நடுவில் உப்பு, புளிப்பு, உறைப்புப் பொருள்களும் இலைக்கறி யும், கடைசியில் கைப்பு, துவர்ப்புப் பொருள்களும் கொள்ள வேண்டும்.

4. உணவுநேரம் ஒரு நாளில் இரண்டு வேளை உணவுகொள் வதே சிறப்பாம். மூன்று வேளை கொள்வதானால் முத லுணவு பகலவன் தோன்றி மூன்றே முக்கால் நாழி கைக்குள்ளும்; இரண்டாவது பதினைந்து நாழிகைக் குள்ளும், மூன்றாவது மாலை ஏழரை நாழிகைக்குள் ளும் கொள்வது நலந்தரும்.

5. உணவின் பிரிவு உணவில் ஒருபங்கு பூச்சிகட்கும், ஒரு பங்கு சக்கைக்கும், ஒருபங்கு உடலமுலுக்கும், ஒரு பங்கு உடற்கூறுகட்கும் ஆகும்.

6. உணவு பொருந்தும் பொருந்தா நேரங்கள் பகலவன் தோன் றிப் பதினொன்றேகால் நாழிகைக்குள் கொள்ளும் உணவு உடலுக்குப் பொருத்தமானது; பதினைந்து

நாழிகை யுணவுமிதம் என்றும் அளவிடு பிணிகளை விலக்கும்; இருபத்திரெண்டரை நாழிகையில் உண்ணில் உயிர்க்கிறுதியாம்.

7. உணவுவேட்கை பசியால் அழகு, ஆண்மை, மகிழ்ச்சி, ஆசை, தூய்மை, உயிர்ப்பு, பேச்சு கெடும்; உடற்கூறு வேறுபாடுகளும் மூப்புத்தன்மையும், சுற்றத்தார் பகையும் உண்டாகும்.

௩௧. நீரருந்தும் வகைக் குணம்

உணவு கொள்ளும்போது இடையில் நீர் அருந்துதல் கூடாது. உண்டபின்பே அருந்தவேண்டும். உணவு முடிவில் வெந்நீரை ஒரு தடவையாக அருந்தினால் காய்ச்சல், வாதம், நாவறட்சி, மந்தம், வயிற்றுப்பொருமல் இவை போக்கும். ஆயுளும், விந்தும் வளரும்.

நீரை அண்ணாந்துண்ணில் காது சீழ், காது கேளாமையும் குனிந்துண்ணில் இருமலும் உண்டாம்; கலத்தைக் கடித்துச் சப்பி உண்ணில் நோய் இல்லை.

௩௨. கஞ்சி வகைக் குணம்

1. உறைகஞ்சி நேரப்பட்டுத் தயிரைப்போல் உறைந்து போன கஞ்சி வாதத்தையும் சளிப் பெருக்கையும் தரும்.

2. எவா அரிசிக் கஞ்சி உடல் வற்றிப்போன ஈளை நோயாளர்களும், தசையின்றி என்புக் கூடாய் நின்றவர்களும், உடல் வன்மை கெட்டு கைகால் ஓய்ந்து வீழ்கின்றவர்களும் இவ் எவா அரிசிக் கஞ்சியைக் கொள்ள வேண்டும்.

3. ஐயரிசிக் கஞ்சி துவரை, உளுந்து, கடலை, சிறுபயறு, பச்சரிசி வகைக்கு ஒரு பிடி தனித்தனி மெல்லிய சீலையில் முடிந்து, ஆற்றுநீர் இரண்டு படி சேர்த்து, எட்டில்

ஒன்றாகக் காய்ச்சி அருந்தில் முக்குற்றம் நீக்கும் ஆயாசம் போக்கும். இது நீடித்த பட்டினி முடிவிற் கொள்வதாகும்.

4. கஞ்சிச் சோறு கஞ்சியுஞ் சோறுமாய் உட்கொள்வது உடல் பெருக்கும்; ஒளி தரும், சளி யுண்டாக்கும்; வெப்பு, பித்தம் போக்கும்.

5. கொதி கஞ்சி சோறு வேகும்போது மீட்கின்ற கொதி கஞ்சியானது நீர்ச்சுருக்கைப் போக்கும்.

6. கொள்ளுக் கஞ்சி கொள்ளு சேர்ந்த சோற்றுக் கஞ்சி மிகு பசி, வீம வன்மை, வீரிய வளர்ச்சி இவை கிழவர்களுக்கும் உண்டாக்கும்.

7. கோதுமைக் கஞ்சி கொடுங் காய்ச்சல், நீரேற்றம், சளி, சந்நி இவை விலக்கும், உடல் வன்மை யுண்டாக்கும்.

8. நெற்பொரிக் கஞ்சி மிகுபித்தம் போக்கும்.

9. பயறு உழுந்து பச்சரிசிக் கஞ்சி பயறு சேர்ந்தது பித்தம் விலக்கும்; உழுந்து சேர்ந்தது வாதம் மிகுக்கும்; பச்சரிசி ஐயத்தைப் போக்கும்.

10. பால் கஞ்சி பித்த எரிவு நீக்கும்; அறிவு, விந்து வளர்க்கும்.

11. மறுஉலைக் கஞ்சி பலதரம் வடித்து வடித்து இறக்கிய நீர்த்த சோற்றுக்கஞ்சி முக்குற்றம், காய்ச்சல், வெப்பம் போக்கும், உடல் நலம் தரும்.

12. முடிச்சுக் கஞ்சி அரையாழாக்கு அரிசியில் இரண்டு படி தண்ணீர்விட்டு, அரைப்பலம் சுக்கை நறுக்கித் துணியில் முடிந்துபோட்டு. நாலில் ஒரு பங்காகக் காய்ச்சி இறக்கிய தெளிவு மிகுவாதம், வெப்பம், சிவந்த சிறுநீர், பித்த நோய்கள், செரியாமை முதலியன நீக்கும்; பசி பெருகும்.

13. வடி கஞ்சி சோற்றிலிருந்து வடித்த கஞ்சிகளெல்லாம் மந்தமேயாயினும், விழிக்குக் குளிர்ச்சியாம். மிகு பித்தம் நீக்கும்.

௩௩. உடற்கூறுகட்கு ஒவ்வாதன

1. தயிர் கூடா உடல் குறைநோய் வீக்கம், கண்ணோய், குன்மம், காமாலை, காய்ச்சல், மந்தம், விஷூசி, கழுத்து நோய், சோபை, சளிநோய், நச்சுக் காய்ச்சல், பீநசம், பீலிசம், புண், பாண்டு, கழிச்சல் இந்நோயாளர்க்குத் தயிர் கூடாது.
2. தாம்பூலம் கூடா உடல் மதநோய், மூர்ச்சை, சந்நி, மிகு காய்ச்சல், சட்கநோய், உடலூறிய நஞ்சு, பித்தம், ஈளை, தலைநோய் இந் நோயாளர்க்குத் தாம்பூலம் கூடவே கூடாது.
3. நெய் கூடா உடல் முறைக்காய்ச்சல், சந்நி, நீர்க்கோவை, பெருவயிறு, அநாகரோகம், கழிச்சல், குரல் குறைவு, குன்மம் இந் நோயாளர்க்கு நெய்கூடாவாம்.

௩௪. உடற் பயிற்சி

1. குதிரையேற்றம்
2. சிலம்பம்
3. நடை
4. மற்போர்

உடல்வலி, தளருடல், இறுகுதல், மிகு பசி உண்டாக்கும். சளிவளி நோய், சூலை நோய், பழஞ்சக்கைக் கட்டு இவை நீக்கும்.

௩௫. உண்கல வகைக் குணம்

1. உண்கலச் சிறப்பு வெள்ளை வாழையிலை மனமகிழ்ச்சி தரும்; மற்ற இலைகள் நடுத்தரமாம்; தங்கம், வெள்ளி வெண்கலம் மிகநலமாம், இவற்றையெல்லாம் விட, மட்கலமே சிறந்தது; இதனில் சோறுண்ணில் ஈளை, பாண்டு முதலிய நோய்கள் விலகும்.
2. கைக்கலம் உணவைக் கைக்கலத்திற் கொள்ள, கறிகளெல்லாம் கலந்த சோற்றைக் கைக்கலத்திலுண்ண மனமாற்றம், மனத்துயர், சுவையின்மை இவை விலகும்.
3. செப்புக்கலம் உடல்நலம், ஒளி, கண்ணொளி, மகிழ்ச்சி தரும். செந்நீர் வெப்புநோய் நீக்கும்.

4. தங்கக்கலம் விந்து வளர்ச்சி, பசி, உடல்வன்மை, மனமகிழ்ச்சி, உண்டாக்கும்; பித்த சோபை நீக்கும்.

5. தாமரை இலைக்கலம் வெப்பம், வாதநோய், பசியின்மை உண்டாக்கும்; செல்வம் நீக்கும்.

6. பலாவிலைக்கலம் அடங்கிய பித்தம் எழும்பும்; நீங்காப் பெருவயிறும், குன்மமும் நீக்கும்.

7. பாலமரத்திலைக்கலம் துடைநரம்பு நோய், கோழைச்சளி நோய், பெரும்பாடு, பித்தம், நாவறட்சி இவை நீக்கும்; குளிர்ச்சிதரும்.

8. வாழையிலைக்கலம் மேனியொளியும், நல்லுணர்ச்சியும் உண்டாக்கும்; பசியின்மை, உடல் மெலிவு, வாதக்குறை, ஐ, சுவையின்மை, இவை நீக்கும்; மிகுபித்தம் தணியும்.

9. வெண்கலம் சோர்வும், செந்நீர் வெப்பும் போக்கும்; செந்நீர் உறுப்பு வளரும்; முக்குற்ற மறுக்கும்.

10. வெள்ளிக்கலம் ஐநோய், மிகுபித்தம் நீக்கும்; ஒளியும், மகிழ்வும் வாதப் பெருக்கும் உண்டாக்கும்.

௩௪. முத்தகையுடலார்க்கு உப்பு கறிவகைக் குணம்

1. வாத உடலார்க்கு

உப்பு கடலுப்பு.

ஊறுகாய் நாரத்தை, தான்றி, கடுக்காய், தேற்றான், பருங்களா, சிறுகளா, இஞ்சி உப்பூறியது.

கறிவகை கலியாணப்பூசணி, கத்தரிக்காய், வழுதுணங்காய், முருங்கைப்பிஞ்சு, வெள்ளை அவரைக்காய், மிதிபாவற்பிஞ்சு, காராக்கருணை, காட்டுக்கருணை.

கீரைவகை குப்பைமேனி, முன்னை, ஆரை, நல்வேளை, மணத்தக்காளி, யானைநெருஞ்சி, முசுமுசுக்கை, அப்பைக் கோவை, காட்டுமூக்கரட்டை, நல்வசலை.

சாறு சக்கரவர்த்திக்கீரை, வெள்ளைச்சாரடை, பாகல், முருங்கை, முளைக்கீரை, நல்லதூதுணம், பொன்

ஞங்கண்ணி இவ்விலைகளின் சாறுகளில் மிளகு தண்ணீர் செய்யவும்.

வற்றல் சுண்டை, பேய்ப்புடல், தூதுணம், மணத்தக்காளி, நெல்லி, ஆதொண்டை, காட்டுப்பிரண்டை, வெள்ளவரை, முள்ளி இவைகளின் காய்களும், காட்டுப் பிரண்டையும்.

2. பித்த உடலார்க்கு

உப்பு கடலுப்பு

ஊறுகாய் பச்சைமிளகு, இஞ்சி, தூதுணம், கடுக்காய், நெல்லி, தான்றி, நாரத்தை, தமரத்தை, புன்னை, ஆல், விளா, தேற்றான், மா இவற்றின் பிஞ்சு; பருநன்னாரிக்கிழங்கு, கொளிஞ்சி நாரத்தங்காய், எலுமிச்சங்காய்.

கறி வகை வெள்ளரி, கொம்புப் பாகல், மிதி பாகல், நீளப் புடல், பீர்க்கு, அவரை, ஆற்று முள்ளி, கலியாண பூசுணை, கத்தரி, முருங்கை, பருங்களா, வாழைக்காய், வள்ளிக் கிழங்கு, வெங்காயம், வாழைப் பூ, ஷிதண்டு.

கீரை வகை புளியாரை, கோவை, ஓரிதழ்த் தாமரை, முருங்கை, வசலை, நல்லபொன் முசுட்டை, மிளகு, அப்பைக் கோவை, பாலை, காட்டு முசுமுசுக்கை, தூதுணம், சுரை, வல்லாரை, சிறு கீரை, மணத்தக்காளி.

சாறு கொத்து வசலை, கொடி வசலை, வெள்ளை அகத்தி, பிரமிய வழுக்கை, தைவேளை, தார்.

வற்றல் வெண் முள்ளி, பேய்ப்புடல், தூதுணம், காட்டுச் சுண்டை, கண்டங் கத்தரி, பயற்றங் காய், மணத்தக்காளி, தாமரை, வல்லாரை இக்காய்கள்.

3. ஐ உடலார்க்கு.

உப்பு இந்துப்பு; எல்லார்க்குமாம்.

ஊறுகாய் பசு மஞ்சள், மிளகு, சுண்டை, வாழை யிளந்தண்டு, மாம் பிஞ்சு, அத்திப் பிஞ்சு, தூதுணம், மிதி பாகற் பிஞ்சு.

கறிவகை கத்தரி, பேய்ப் புடல், அவரை, கொம்புப் பாகல, மிதி பாகல், பெருங்களா, கண்டங் கத்தரி, அத்தி, இக்காய்கள்; பலா, பயற்றம பிஞ்சு, சுரை, ஆல், பீர்க்கு, இப்பிஞ்சுகள்; கருணைக் கிழங்கு, வாழைத்தண்டு, அடி பூ, முள்ளங்கி, முள் முருக்கின ரும்பு, கூஸ்மாண்டம் (நீற்றுப் பூசுணை), வெங்காயம், வள்ளிக் கிழங்கு.

கீரை வகை காரை, அப்பைக்கோவை, வரிக்கோவை, பசு முன்னை, கருஞ்செம்பை, பேய்ப்புடல், துயிலி, பிரமிய வழுக்கை, நெருஞ்சில், நீராரை, புளியாரை, முல்லை, மருதம், நெய்தல், குப்பைமேனி, வல்லாரை, பொன்னுவாரை, முசுமுசுக்கை, முருங்கை, பெரும் பிண்ணுக்கு, சிறு பிண்ணுக்கு, பண்ணை, மணலி, முளைக்கிரை, முசுட்டை, காராமணி, உழுந்து, கடலை, புளி மலைக்களா, வேளை, மணத்தக்காளி, பொன்னுங் காணி, சக்கரவர்த்திகிரை, பீளை, வசலை, சுக்கு, கற் ருழை, நாய்வேளை, வேளை.

சாறு ஓமம், செங்கடுகு, சதகுப்பை, வெந்தயம், கொத்த மல்லி, வேளை, சுக்கு, அகத்தி, குளிஞ்சா, பாகல், தும்பை.

வற்றல் சுண்டை, மணத்தக்காளி, தாதுணம், பிரண்டை, கோவை, முள்ளி, பேய்ப்புடல், ஆதொண்டை, அவரை, கண்டங்கத்தரி, இக்காய்கள்; நெல்லி, காட்டு நாரத்தை பிஞ்சுகள்.

குறிப்பு:—குற்றமுள்ள கறிகளை அவைகளுக்கு மாருகிய பொருள்களால் குற்றம் போக்கி நற்குணக் கறிகளு டன் உண்ணிற் குற்றமில்லை.

௧௭. புகை வகைக் குணங்கள்

1. சுடுகாட்டுப் புகை ஆயுள் குறைக்கும்.
2. தயிலப் புகை வாதநோய் ஒழிக்கும்.
3. வேள்விப் புகை ஆயுளை நீட்டிக்கும்.

௫அ. பத்தியம்

1. பத்தியப் பொருள்கள் பொன்னாங்காணி, சிறு கீரை, பசு நெய், கோவை, சுண்டை முதலியவற்றல்கள் அவரைப் பிஞ்சு, அப்பைக்கோவைக் காய், வெள்ளைப் பூண்டு, முருங்கைப் பிஞ்சு, பனிப்பயறு, மாவடு, அத்திப் பிஞ்சு, கருவாழைக் கச்சல், ஷை பூ, மாம் பருப்பு.

2. பத்தியத்துக் காகாதன கொள்ளு, காடி, குமட்டிக்காய், கொம்புப் பாகல், முத்திரை அவரைக் காய், காரா மணிக்காய், சேப்பங்கிழங்கு, வள்ளிக்கிழங்கு, பாலைக் கீரை, மாங்காய், இளநீர், மாதுளன், மாச்சிற் றுண்டி, புளி, கடுகு, தேங்காய், எருமை நெய், ஷை பால், கிழங்குகள், முப்பழங்கள், பெருங்காயம், வெங் காயம்.

3. தைலமாடுதற் பத்தியம் புளி, தயிர், பால், பாகற்காய், இலைக்கறி, அகத்தி, பகல் தூக்கம், மறுநாளும் பத் தியமாய் இருக்கவேண்டும்.

4. முக்குற்றம் போக்குவன.

(அ) வாதம் போக்குவன செங்கழுநீர்க் கிழங்கு, கோட்டம், குறிஞ்சித்தேன், மிளகு, எண்ணெய், பெருங்காயம், தழுதாழையிலை, சிற்றாமணக்கு நெய், உழுந்து.

(ஆ) பித்தம் போக்குவன கொளுஞ்சி நாரத்தம் பழம், வாழைச் சருகு சுட்டகரி, தண்ணீர் விட்டான் கிழங்கு, சந்தனம், நெல்லிமுள்ளி, சம்பு நாவல், பெருமரப்பட்டை, கோரைக் கிழங்கு, செம்பருத்தி, தென்னம் பூ, கரும்பு, தாமரை மகரந்தம், ஷை வளை யம், செங்குவளைக் கேசரம், துணிசுட்ட சாம்பல், கலி யாண பூசணிக்காய்.

(இ) ஐ போக்குவன பசும் பால், தும்மாரட்டகம், முள் ளங்கி, மயிலிறகுச் சாம்பல், தூதுளைச்சமூலம், மலைத் தேன், ஓமம், வெள்ளைச் சருக்கரை, துளசி விதை, விளாம் பழம்.

(ஈ) முக்குற்றம் விருப் பொருள்கள் மிளகு, மஞ்சள், சீரகம், பெருங்காயம், சுக்கு, ஏலம், வெந்தயம், வெண்பூண்டு இவை கறி வகைகளில் சேர்க்க வேண்டும்.

௬௦. பால் பத்தியக்* குணம்

1. குற்றமில்லாத சோற்ருேடு பழஞ் சேர்த்துப் பால் உண்ணவேண்டும். தனியே உண்ணவேண்டில் கற்கண்டுத்தூள் பொருந்தும். காரப் பொருள் நோயுற்ற போது துணையாகக் கொள்ளலாம்.
2. பாலருந்தும் நேரம் கறந்த மூன்றே முக்கால் அல்லது ஐந்து நாழிகைக்குள் அருந்தவேண்டும்; பிறகு நஞ்சாகும்.

பகலவன் தோன்று நேரத்திற் கொள்ளும் பசுப்பால் உடம்பெரிப்பு, காமாலை, செங்நீர்ப் பித்தம், பாண்டு, விந்துக்கேடு, மார்புச்சளி இவை நீக்கும்; மேனியிடும்; குழந்தைகட்குப் பொருத்தமானது.

கறந்த சுடுகை ஆருமற் கொள்வது சிறப்பு.

௬௧. மருந்துப் பொருள்களின் குணம்

1. மூலம் போக்குவன மருட்கிழங்கு, வெண்சாரடை சமூலம், கருணைக் கிழங்கு, பிரண்டை, காட்டுக் கருணை, புளிநரளை, காராக் கருணை, மெருகன் கிழங்கு, வெள்ளறுகு, வெண்சித்திர மூலம்.
2. நஞ்சு போக்குவன பேய்ச்சுரை, பேய்க் கொம்மட்டி, பேய்ப் பீர்க்கு, தும்மட்டி, பேய்ப்புடல், புங்கு, அழிஞ்சில், காட்டவுரி, மலைவேம்பு, சிவனுர் வேம்பு, வெள்ளெருக்கு, வெள்ளறுகு.
3. பித்தந் தணிப்பன வெள்ளை மொச்சை, கடலை, பெருங் காராமணி, உழுந்து, ஏலம், வெந்தயம், மிளகு, சுண்

*பால் பத்தியமுறை பாலமிழ்தம் என்னும் நூலின்கண் பரக்கக் காணலாம்.

டைக்காய், பசு வெண்ணெய், இஞ்சி, அப்பைக் கோவைக்காய், கருவேப்பிலை, சீரகம்.

4. முக்குற்றம் தணிப்பன மிளகு, மஞ்சள், சீரகம், பெருங் காயம், சுக்கு, ஏலம், வெந்தயம், வெள்ளைப்பூண்டு.

5. அறுசுவைகளின் மிகுதிக்குணம்

(அ) புளிப்பும் துவர்ப்பும் மிகின் வாதம் மிகும்.

(ஆ) உப்பும் கசப்பும் மிகின் பித்தம் மிகும்.

(இ) உறைப்பும் தித்திப்பும் மிகின் ஐ மிகும்.

6. மருந்தூட்டும் தருணம்

(அ) வாதநோயாளர்க்கு உணவு கொள்ளுமுன்.

(ஆ) பித்தநோயாளர்க்கு உணவுகளின் நடுவில்.

(இ) ஐநோயாளர்க்கு உணவு கொண்டபின்.

7. மருந்தூட்டும் கலம்

(அ) வாதநோயாளர்க்கு வெண்கலக்கலம்.

(ஆ) பித்தநோயாளர்க்கு தங்கக்கலம்.

(இ) ஐநோயாளர்க்கு தாம்பரக்கலம்.

இவற்றிற்கெல்லாம் மேல் குயக்கலம் (மட்கலம்).

8. மருந்துண்டபின் வாயிலிடும் பொருள்கள்

கொட்டைப்பாக்குச் சீவல், நாகப்பூ, தேன், திராட்சை, வெற்றிலைக்காம்பு, கிராம்பு, பழநெற்பொரி, பச்சைக்கற் பூரத் தூள்.

௬௨. கடைச்சரக்குகளின் குணம்

1. அக்ரோட்டு: கொட்டை உடல் வளப்பம் உண்டாக்கும். வேர்ப்பட்டை தொண்டைப்புண் ஆற்றும்; வயிற்றுப் பூச்சிகள், பால்சுரப்பு இவை நீக்கும்.

2. அபினி வயிற்றுநோய், வாதநோய், காதுநோய், பல் நோய், விடாக்கழிச்சல், செரியாமை, எலும்பிற் குடைச்சல், மூக்குநோய் இவை போக்கும்.

3. அப்பளாக்காரம் வாதக்குடல் வளர்ச்சி, கீல்வீக்கம், பெருவாதம், சளிநோய், வயிற்றுப்பொருமல், வாதகுன்மம் இவை நீக்கும்.

4. அம்பர் விந்துவிருத்தி, ஒளி, உடல்வன்மை இவைதரும், அளிபுண், கரப்பான் இவை நீக்கும்.

5. அரக்கு குறைநோய், பெண்கள் செந்நீர்நோய், ஐப்பித்தம், வயிற்றுநோய், பெருமூச்சு, எலும்புருக்கிநோய், சத்தியோ விரணம், மார்புநோய், முடம், சந்நிபாதம் கலப்பு நோய், சளிநோய் இவை போக்கும்.

6. அரிதாரம் ஈளை, சளிநோய், ஐவாதம், பலகுன்மம் போக்கும்.

7. அன்னபேதி முளைக்கட்டி, குத்தல், செரியாமை, ஆமைக் கட்டி, பெருவயிறு இவை நீக்கும்.

8. இஸ்கோல் விதை சக்கைக்கட்டு, சீதபேதி, வெள்ளை, வயிற்றுவலி, இருமல், நீர்க்கட்டு முதலிய நீக்கும்.

9. இலவங்கப்பட்டை செந்நீர்க்கழிச்சல், வயிற்றுப்பிடுங்கல்; மூலப்புண், இவை நீக்கும்; குளிர்ச்சியுண்டாக்கும்.

10. இலவங்கப்பத்திரி வெள்ளைக்காய்ச்சல், குளிர்காய்ச்சல். வெள்ளை, இரைப்பு, இருமல், பித்தநாவறட்சி, வாந்தி, ஐவாதரோகம், (வாய்திறந்தபடியே இருத்தல்) வாய்ப்புண், கட்டி, விந்துகுறை, வாய்க்கசப்பு, சுவையின்மை இவை நீக்கும்.

11. இலவங்கப்பூ மிகுபித்தம், விடாக்கழிச்சல், வாந்தி, செந்நீர்க்கழிச்சல், சக்கைவாய்க் கடுப்பு, விந்துக்குறை, செவிநோய், சிவந்த மச்சம், கறுத்த மச்சம், முகவாய் நோய்கள், கண்பூப்படலம் இவை போம்; மலம் கட்டும்; நலம் உண்டு.

12. உரோஜாப்பூ வாந்தி, சக்கைச் சிக்கல், பெரும்பாடு, நாவறட்சி, வாய்ப்புண், காய்ச்சல், வாயெரிச்சல், செந்நீர் வெள்ளை, வயிற்றிசிவு இவை போக்கும்.

13. உப்பு (பொது) சூட்டுநோய், கண்டநோய், கட்டி, குன்மங்கள் இவை விலக்கும்.

(அ) இந்துப்பு குன்மம், மந்தம், பெண் செந்நீர் நோய், பித்தம், சளி, நரம்புப்புண், முக்குற்றம், சக்கைக்கட்டு, விந்துக்கேடு, இலிங்கப்புற்று, கடுவன், விழி தலை நா பல் காது கழுத்து கண்டம் யோனி இவ்விடத்து நோய்கள், மிகு ஐ நோய், கண்ணோய், நாவறட்சி, பெருமூச்சு, செந்நீர் மூலம், சிலந்தி தேள் எலி இவற்றின் நஞ்சு, வாதக்கடுப்பு, குத்தல் இவைபோக்கும்

(ஆ) கல்லுப்பு சளி, குத்தல், சுவையின்மை, பயித்தியம், வாந்தி, வெப்புவாயு, எட்டுக்குன்மம், வாதநோய், நாவறட்சி, சக்கை, மந்தம் இவை போக்கும்.

(இ) கறியுப்பு செரியாமை, வயிற்றுப்பொருமல், வாதநோய், வாதசளி, நீரடைப்பு போக்கும்; பசித்தீபனம் உண்டாம்.

(ஈ) வளையலுப்பு குடல்வாதம், வாதபித்தம், இரைப்பு, வயிற்றுநோய், கீல்பிடிப்பு, காய்ச்சல், பீலிகம் இவை நீக்கும்.

14. உலோகம்

(அ) இரும்பு பித்தபாண்டு, ஐ வெள்ளைக் குட்டம், உடல்பாரிப்பு, வீக்கம், பெருமந்தம், காமாலை, வயிற்றுநோய், விந்துப்போக்கு இவை விலக்கும்; மிகுசக்கை, பசி உண்டாக்கும்.

(ஆ) எஃகு பல்நோய், விந்துக்கேடு, வீக்கம், கண்ணோய், மந்தம், உடல்வெளுப்பு, வலியின்மை, ஈளைநோய் இவை போக்கும்.

(இ) காந்தம் வீக்கம், குன்மம், காமாலை, வெள்ளை, பாண்டு, முக்குற்றம், பெருவயிறு, விழிநோய், நீர்மேகம், நீராமைக்கட்டி இவை போக்கும்; ஆயுள் வளர்க்கும்.

(ஈ) காரீயம் தாவரநஞ்சு, கண்ணோய், போகாப்புண், வலிவாத குன்மம், குத்தல், சக்கைவாய்ப் புண், யானைத்தோற் பெருநோய், காய்ச்சல் இவை நீக்கும்.

(உ) தரா கீல்பிடிப்பு, வெள்ளை, வாதபித்தக் கலப்பு இவை போக்கும்,

(ஊ) தாம்பரம் செந்நீர்ப்பித்தம், முக்குற்றக்காய்ச்சல், பெருவயிறு, சளிநோய், பீலிகம், செரியாமை, வெண்குட்டம், பித்தசளி, செந்நீர்க்குன்மம், புண், ஈளை, பூச்சி, உறுப்புக்குறைகள், விழிநோய் இவை போக்கும்.

(எ) துத்தநாகம் புண்ணாகி வெளிப்படும் வெள்ளை, விடாக்கழிச்சல், வெள்ளை, உட்சூடு, சிதச்செந்நீர்க்கழிச்சல், முளைப்புண், பித்தம் போக்கும்.

(ஏ) பஞ்சலோகம் பொன், காரியம், செம்பு, இரும்பு, துத்தநாகம் இவற்றால் விழிப்பிணி நீங்கும்.

(ஐ) பித்தளை விந்துப்பெருக்கம், குளிர்ச்சி உண்டாக்கும்: இக்காய்ச்சல், வாதம், பயித்திய குன்மம் இவை போக்கும்.

(ஒ) பொன் தாவர நஞ்சு, ஒளிமழுங்கல், பெருங்காய்ச்சல், பித்த ஈளை, உடல் வெப்பு, முற்றிய சளி, விந்துக்குறை, விழிநோய், கோழைக்கட்டு இவை விலக்கும்.

(ஓ) வெண்கலம் விழிநோய், வெள்ளை, பெரும்பாடு, மிகுநீர், செந்நீர்ப்பித்தம், இரைப்பு, செரியாமை, சளி, குத்தல், பெருவயிறு, இவை போக்கும்; பித்தம், விந்து மிகுக்கும்.

(ஔ) வெள்ளி பழங்காய்ச்சல், மரநஞ்சு, வாதப்பிடிப்பு, வெள்ளை, செந்நீர்க்கழிச்சல், ஈளை, பயித்தியம், கோழை, விழிநோய், இருமல், மார்புசளி, குன்மம், தோற்புண், நீர்க்கோவை, ஊறற்புண், சிரங்கு, சொறி இவை போக்கும்.

(ஃ) வெள்ளீயம் ஈளை, நாவறட்சி, கடுவன் (கரப்பான்), நீர்க்கோவை, பித்தக்கபம், மேகச்சிறுநீர், ஒளிக்குறைவு, காய்ச்சல், வன்மைக்குறைவு, புண், மந்தாரகாசம், கபம், பசியின்மை இவை போக்கும்.

15. உருத்திர சடை வித்து (சப்ஜா) மேக வெள்ளை, சீதபேதி, இரத்தமூலம் இவை நீக்கும்.

16. ஏலம்

(அ) காட்டு ஏலம் நீங்கா வாந்தி, சளி, கழிச்சல், சுவையின்மை, பயித்தியம் போக்கும்.

(ஆ) சிறு ஏலம் சக்கை வாயு, நுரைத்த சக்கை, வறட்டு காய்ச்சல், உமிழ்நீர் ஊறல், வாயினிப்பு, நாவறட்சி, நீர்க்கழிச்சல், வியர்வைத் தலைவலி, மிகு காய்ச்சல், சளி இவை போக்கும்.

(இ) பெரு ஏலம் தொண்டை, வாய், கன்னம், நா, சக்கைவாய் இவ்விடத்து நோய்கள், விடா பேதி, அரையாப்பு, நீர்ச் சுருக்கு, நாவறட்சி, வாந்தி, சிலந்தி நஞ்சு, காய்ச்சல், வெப்புக்கழிச்சல், எரிவு, இருமல், சோம நோய், விந்துக்கேடு, வயிற்றில் சளிநிறைதல், நெஞ்சிற் கோழை, உரத்த பித்தம் இவை விலக்கும்.

(ஈ) மலை ஏலம் நாவறட்சி, பித்த சொறி, நீர்ச்சுருக்கு, சுவையின்மை இவைபோக்கும்.

17. ஐங்கூட்டெண்ணெய் வேம்பு, புங்கு, புன்னை, ஆமணக்கு எள் இவ்வைந்தின் கூட்டுநெய் வாதநோய் நீக்கும்.

18. ஒட்டறை குறை நோய், மிடற்று ஐ நோய், செந்நீர் மூலம், விடா பேதி, மந்தம், ஐக் குன்மம், நரம்புப் புண், நடுக்கற் காய்ச்சல், சிறுபாம்புக் கடி இவை போக்கும்.

19. ஓமம் குளிர்காய்ச்சல், இருமல், செரியாமை, வயிற்றுப்பொருமல், விடா பேதி, குடலிரைச்சல், சக்கை

வாய்க்கடுப்பு, சீதபேதி, ஈளை, பல்நோய், ஈறுநோய், ஆண்குறி நோய் இவை போக்கும்.

20. கசகசா சாற்றுறுப்புப் பூச்சி, தினவு, சீதச் செந்நீர்க் கழிச்சல், கழிச்சல், நீரேற்றம், தூக்கத்தடை இவை போக்கும்; அழகு, ஒளி, விந்து இவை மிகுக்கும்.

21. கஸ்தூரி தலைநோய், உபதந்த மூலம், சந்நிக் காய்ச்சல், இவை போக்கும்; ஒளி, நலம், பெண்களுக்கு நாத வளர்ச்சி வன்மை தரும்.

22. கஞ்சா மூலவாயுக் கழிச்சல், நீங்காக் கழிச்சல், உடற் பாரிப்பு, சளிநோய், கரப்பான் இவை போக்கும்; அறிவு மயக்கமும் மருட்சியும் உண்டாக்கும்.

23. கடலைப் புளிப்பு மிகு பசியுண்டாக்கும், உடல் அழலை, மிகு நாவறட்சி, வாந்தி, விக்கல் இவை நீக்கும்.

24. கடல் நுரை விழி நோய், புண், ஈளை, குன்மம் போக்கும்

25. கடுகு :—

(அ) சிறு கடுகு நஞ்சு, ஐநோய், வயிறு விம்மல் இவை நீக்கும்; மேற்றோல் முதலியவற்றில் உண்டாகும் வாதப்பிணிகட்கு இலேபனச் சிகிச்சைக்காகும்.

(ஆ) செங்கடுகு தலையிடிப்பிருமல், பீநசம், கோழைச் சளி, பயித்தியம், காணாக்கடி, வாதசளி, குடைச்சல், முடம், பசி மந்தம், சோபம், மிகுவாதம், குழம்பிய உமிழ்நீர், கழிச்சல், வயிற்றுவலி, முக்குற்றம் இவை விலக்கும்; நலக்கருவுயிர்த்தல் தரும்.

(இ) நாய்க் கடுகு மேக நீர்ச்சுருக்கு, வாயு, வாதக் கடுப்பு, குன்மம் போக்கும்; பேய்விலக்கும்.

(ஈ) வெண்கடுகு பாம்புநஞ்சு, வண்டு நஞ்சு, துடை நரம்பு வாதம், பேய் இவை போக்கும்.

26. கடுக்காய் கன்னம் கழுத்து நா ஆண்குறி இவ்விடத்து நோய், கால்புற்று, கழிச்சல், துடைநரம்பு

நோய், உடல் பாரிப்பு, இடிப்புண், பெண் விந்து நோய், காமாலை, பல நஞ்சு இவை போக்கும்.

சுடுக்காய்ப் பிஞ்சு ஆமணக்கு நெய்யால் வறுத்துத் தூள்செய்து அப்போதே உண்டால் சக்கைச் சிக்கலும் வெண் சிதமும் நீங்கும்; முக்கலும், சக்கைவாய்க் கடுப்பும் ஒழியும்.

27. கம்பளம் கம்பளச் சாம்பல் சந்நியைப் போக்கும்.

28. கருஞ்சீரகம் மண்டைக் கரப்பான், புண், பீநசம், உட்சூடு, தலைநோய், கண்ணோய் இவை நீக்கும்.

29. கருப்பூரம் பூச்சி, நீரேற்றம், இசிவு, காய்ச்சல், வாத நோய், தீப்புண், வாந்தி, பைத்தியம், ஐவாதம், காது குத்தல் போக்கும்.

பச்சைக் கருப்பூரம் எட்டுக்குன்மம், கீல் குத்தல், வாத நோய், சிழ்வெள்ளை, மிகு ஐ இவைபோக்கும்.

30. கர்ச்சூர்க்காய் (பேரீச்சன்) உமிழ்நீர்ப் பெருக்கு, இனிப்பு நீர் இவை போக்கும்; பசி, உடல்வன்மை யுண்டாக்கும்.

31. கல்நார் பித்த ஈளை, வாதநோய், பற்குடைச்சல், பல்லரணை, குறி எரிச்சல், வாந்தி, மிகு மூத்திரம், விந்துக் குறை, செரியாமை, குடல்நோய், நாவறட்சி இவை போக்கும்.

32. காசினிவிதை சுவையின்மை, வாந்தி இவை போக்கும்.

33. காப்பிக்கொட்டை காப்பிக்கொட்டை முதலில் மன மகிழ்ச்சி, உடல் வலிவு, பித்தம் இவை உண்டாக்கும்; பின்னால் பசியை நாளுக்கு நாள் குறைத்து ஒளியை மாறுபடச் செய்யும்.

34. காட்டுச்சீரகம் உள்ளங்கைக் கரும்புள்ளி, வெள்ளை, பயித்தியம், குன்மம் போக்கும்; குளிர்ச்சி யுண்டாக்கும்.

35. கார்போக அரிசி கரப்பான், புண், பலநஞ்சு, ஐவாதம், தினவு, யானைச்சொறி, சிரங்கு நீக்கும்; பயித்தியம் தரும்.

36. காவிக்கல் கண்ணோய், மேகநீர், அக்கி, வாந்தி போக்கும்.

37. கிச்சிலிக் கிழங்கு ஐநோய், கீல்பிடிப்பு, புண் இவை போக்கும்.

38. குங்கிலியம் நீர்ச்சுருக்கு, தந்தி மேகம், கிளைப்புண், என்பு நோய், சிழ்ப்புண் இவை நீக்கும்.

39. குங்குமப்பூ விந்துக்கேடு, நாவறட்சி, குடல்வளர்ச்சி, மேகநீர், கீல்பிடிப்பு, சளி, காய்ச்சல், பயித்தியம், வாதம், மண்டைவலி, கண்பூ, கண்ணோய், வாந்தி, மூக்கொழுக்கு, காதுநோய் (செவிடு), நீரேற்றம், வாயினிப்பு இவை போக்கும்; கருவுயிர்ப்பில் நலந் தரும்.

40. குலாப்பூ (சிவப்பு ரோஜா) மேகவெள்ளை, சிலபேதி, இரத்தமூலம் இவைநீக்கும்.

41. குளம்பு எருமை, கழுதை இவற்றின் குளம்பு குதிரை வலி நீக்கும்.

42. கொத்துமல்லி உட்சூடு, நளிர்காய்ச்சல், பயித்தியவேகம், செரியாமை, வாந்தி, விக்கல், நாவறட்சி, விந்துக் கேடு, பெரு ஏப்பம், போகாப்புண் இவைபோக்கும்.

43. கோரோசனம் மேகநீர், மேகக் காய்ச்சல், மிகுமந்தம், உன்மத்தம், கண மாந்தம், ஐநோய், அம்மைப்புண் இவை நீக்கும்.

44. சடாமாஞ்சி (பருங்கோரை) பெரு நோய், சிலந்திநஞ்சு பழங்காய்ச்சல், உட்சூடு, வாயு, கழிச்சல், விழிநோய், ஈளை, செந்நீர்ப்பித்தம், பெருமூச்சு இவைபோக்கும்.

45. சந்தனம் முக்குற்றம், மன மயக்கம், காய்ச்சல், ஒழுக்குநோய், நாவறட்சி, உட்சூடு, நமைச்சல் போக்கும்; உடல்வன்மை தரும்.

46. சவுக்காரம் கரப்பான், ஐ, மிகுவாதம், உட்சூடு, வயிற்றுநோய் இவை போக்கும்; சக்கை கழிக்கும்.

47. சவ்வாது சளிக்காய்ச்சல், தலைவலி, மூக்கொழுக்கு, குத்து வாயு, உடல் நடுக்கம் இவை போக்கும்.

48. சாதிக்காய் விந்துக்கேடு, கழிச்சல், முகவாய் நோய்கள், தலைநோய், இரைப்பு, இருமல் இவை போக்கும்; மயக்கம் தரும்.

49. சாதிபத்திரி அழற்காய்ச்சல், கழிச்சல், நீர்மந்தக் கழிச்சல் இவை போக்கும்; பயித்தியம், விந்துப் பெருக்கம் தரும்.

50. சாம்பிராணி வாதச்சளி, விழிநோய், தலைநோய், மூக்கொழுக்கு போக்கும்.

51 சிலாசத்து

(அ) நீர்ச் சுருக்கு, வெள்ளை, மிகு பாரிப்பு வித்திரதி, நீரடைப்பு, சோணிதவாயு, விந்துப் போக்கு இவை போக்கும்.

(ஆ) கோமூத்திர சிலாசத்து நீரடைப்பு, நாளத்தெரிவு, உள் இரணம், வெள்ளை, நாவிற்சூடு, செந்நீர் வெப்பு இவை போக்கும்.

(இ) சிலாரசம் தலைவலி, நீரேற்றம், நடுக்கநோய், சந்நி, பெருந் தும்மல் போக்கும்.

52. சிவதை வேர் பழஞ்சக்கை, கீழ்வயிற்றுநோய், பித்த வாதக்கலப்பு, பாலர்நோய் இவை நீக்கும்.

53. சீரகம் வாந்தி, சுவையின்மை, வயிற்றுவலி, முகநோய், பீலிகம், பெருமூச்சு, ஈளை, நீரடைப்பு, மச்சம், தொண்டைக்கம்மல், சிதச்செந்நீர்க்கழிச்சல், மிகுவாதம், மூக்குஒழுக்கு, பயித்தியம் இவை போக்கும்; உடலுக்கும் கண்ணுக்கும் குளிர்ச்சி தரும்

54. சீனிச் சருக்கரை வாதக்காய்ச்சல், கடுவாதநோய், வாந்தி, பூச்சிநோய், நீங்காவிக்கல் போக்கும்.

(அ) சருக்கரை வாந்தி, பித்தம், சுவையின்மை போக்கும். கெட்டிப்பட்ட சளியை இளகச் செய்யும்.

55. சுக்கான்கல் புண், சந்நி, கொடியவாயு இவை நீக்கும்.

56. சுக்கு விலாக்குத்தல், செரியாமை, மார்பெரிச்சல், புளியேப்பம், இரைப்பு, காசம், நீர்பீனசம், நீரேற்றம், கழிச்சல், வாதகுன்மம், சளுப்பு, வாதநோய், வயிற்

றுப்பொருமல், காதுகுத்தல், முகநோய், சிரநோய், குலேவலி, வாதசீதநோய், முதலிய வற்றைக் குணப் படுத்தும்.

57. சொந்தைப்பாக்கு இதனை இடித்துத் தண்ணீரில் ஒரு நாளளவு ஊறவைத்து நூறுதடவை கழுவி உலர்த்தி நறுமணப்பொருள் கலந்து வெற்றிலையுடன் கொள்ளின் பசிமந்தம், முக்குற்றம் நீக்கும்; ஒளியும் அழகும் உண்டாக்கும். இவ்வாறு செய்யாவிடின் குற்றமுண்டாக்கும்.

58. சோகி (பலகறை) தசை வளர்ச்சிநோய் நீக்கும்.

59. சோம்பு யோனிநோய், வயிற்றுவலி, காய்ச்சல், செரியாமை, வயிற்றுப் பொருமல், சளியிருமல், பீலிகம், பெருமூச்சு, குரல்நோய், பெருந்தும்மல் இவை போக்கும்.

60. தபாக்கரிசி தேகவளம் உண்டாக்கும்; பித்தம் மிகுக்கும்; சக்கை இளக்கும்.

61. தக்கோலம் பாண்டுநோய்க்காய்ச்சல், முகவாய்நோய், இவை போக்கும்; உடல்வன்மை, வீரியவளர்ச்சி, சக்கைக்கட்டு தரும்.

62. தாளிசபத்திரி மூக்குநோய், கழுத்துநோய், பழைய இருமல், இரைப்பு, சுவையின்மை, வாந்தி, சீழ்மேகம்,செரியாமை, என்புக் காய்ச்சல் இவைபோக்கும் ; கருவுயிர்த்தற்றுன்பம் நீக்கும்.

63. திப்பிலி சுவே, சளியிருமல், சளிகுன்மம், பெருமூச்சு, கோழை, பாண்டு, நீரேற்றம், பீலிகம், கழிச்சல், கொடிய ஐநோய்கள், சுவையின்மை, வயிற்றுப் பொருமல், வாயு, தலேநோய், பெருவயிறு, முக்குற்றம், நடுக்கற்காய்ச்சல், மேகக்கட்டி, சக்கைவாய் நோய், நெஞ்சுநோய், வாதபித்த நோய்கள், மூக்கு கண் காதுநோய்கள், முகமச்சம் இவை போக்கும்; விந்து இறுக்கும்.

64. திரிகடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி) முகவாய்நோய், மூலம், காதுநோய், பாண்டு, தலேநோய், மாநஞ்சு, பித்தசளி,

சிக்குவைநோய் பூச்சி, பெரும்பாம்பு நஞ்சு, தேள்கடி, கோழை, ஈளை யிருமல், கொடிய ஐ நோய்கள், சுவை யின்மை, நீரடைப்பு, போகாப்புண், நாடிப்புண் போக்கும்.

65. துத்தம் குறிப்புண், முளைப்புண், தலைநோய், கரப்பான், விழிநோய், சுழிகணம், கண்ணோய், இமைநோய், சூலைநோய் இவை போக்கும்.

66. துடைப்பம் சிறுநீர்க்கட்டு, சளி, வீக்கம், பெருவயிறு போக்கும்.

67. துளசிவிதை ஐ, சுவையின்மை இவை நீக்கும்.

68. தேயிலை மனமகிழ்ச்சி, நரம்புவன்மை, உண்டாக்கும்; தூக்கம் கெடுக்கும்; நீடித்துக்கொண்டுவரின் குன்மம், பித்தம் உண்டாக்கும்.

69. தேன்

(அ) கொம்புத்தேன் மாமரம் முதலிய மரக்கொம்பு களில் கட்டுகிற தேன் முக்குற்றங்களையும், உளமாந்தையையும், சுவையின்மையையும் நீக்கும்.

(ஆ) புற்றுத்தேன் சளி, இருமல், ஈளை, வாந்தி, கண்ணோய் இவை நீக்கும்.

(இ) மரப்பொந்துத் தேன் உடல் வெப்பம் உண்டாக்கும்; வாந்தி, பசிமந்தம், பல விக்கல், சுவை யின்மை, இருமல், பெருமூச்சு, ஈளை (க்ஷயம்), உடற் பாரிப்பு இவை நீக்கும்.

(ஈ) மலைத்தேன் ஈளை, பெருமூச்சு, விக்கல், கண்ணிற் புண், காய்ச்சல், உடற் கருப்பு இவை நீக்கும்; பசியும், நல்ல குரலும் உண்டாக்கும்; துணை மருந்தாகும்.

(உ) மனைத்தேன் புண், சிலைப்புண், கரப்பான், கண் புண்ணிற் பூச்சி, புழுவெட்டு, மிகு ஐ, ஈளை இவை நீக்கும்; உடல் வெப்புண்டாக்கும்.

(ஊ) புதுத்தேன் நிறைஆயுள் தரும்; உடல் வெப்பம், உடல் ஒளி உண்டாக்கும்; மிகச் சேர்த்தால் சுவையின்மையும், நெஞ்சிற் சளியும் விளைக்கும்.

(எ) பழையதேன் எல்லா வாத நோய்களையும், வயிற்றெரிச்சலையும், வாதமூல நோயையும் விளைக்கும்; மருந்தின் நற்குணங்களையும் கெடுக்கும்.

70. நாகப்பூ மூர்ச்சை, செந்நீர் வெள்ளை, இரைப்பு, இருமல், கண்புகை, நடுக்கல், குரல்கம்மல், எலிக்கடி, வாய்நோய், தேள்கடி, கழிச்சல், குட்டம், செந்நீர், மூலம், மேகம், வெப்பு, மிகுநீர், விந்துக்கேடு இவை போக்கும்.

சிறுநாகப்பூ வெள்ளை, நீரடைப்பு கொடுவாயு, இருமல் இவை போக்கும்.

71. நிலஆவாரை பற்பல மூலவாயு, காய்ச்சல், சீழ்ச்சிரங்கு, வயிற்றுவலி, வயிற்றுப்பொருமல், சக்கைக்கட்டு இவை நீக்கும்.

72. நீரடிமுத்து கிராச்சிரங்கு, பெருநோய், வாதநோய், தினவு இவை போக்கும்; பித்தம், சூடு உண்டாக்கும்.

73. பச்சிலைச்சிச்சிலி பரிமளப்பச்சிலை, பித்தசளிப்புண், செந்நீர் சக்கைக் கிருமிகள் இவை போக்கும்;

74. பட்டாணி நுரையீரலுக்கும், செந்நீர்ப்பைக்கும், வன்மை கொடுக்கும்; சிறிது வாயு, மந்தம் உண்டாக்கும்.

75 பலகறை (வெண்மை நிறத்தது) மாந்தம், நாவறட்சி, கழிச்சல், நச்சுக்காய்ச்சல், குத்தல், விழிநோய், கலப்பு நோய், ஈளை, சளிநோய் இவை போக்கும்.

76. பல் எலும்பு பல விலங்குகளின் பல், நகம், எலும்புகள் பற்பல விழிப்பிணிகளை நீக்கும்.

77. பறங்கிப்பட்டை நாவறட்சி, பல வாதநோய்கள், விந்துக்கேடு, பிளவை, நீரிழிவு, கடிவிடம், சிரங்கு, மூலமுளை, புண், முடநோய், குறைநோய், சளி, பவுத்திரப் புண், வாந்தி இவை போக்கும்.

78. பனங்கற்கண்டு மேகக்காய்ச்சல், அம்மைவெப்பம், குறிக் கடுப்பு, நாவறட்சி இவை நீக்கும்.

(அ) ஈச்சன் வெல்லம் அறிவுமந்தம், ஐவாதம், பித்தம், திமிர் வாதம் இவை யுண்டாக்கும்.

(ஆ) நல்லவெல்லம் பித்தகுன்மம் நீக்கும்; சளி, சக்கை வாய்ப் பூச்சி, நீரிழிவு உண்டாக்கும்.

79. பனைவெல்லம் சந்நிக்காய்ச்சல், முக்குற்றக் கலப்பு, சுவையின்மை, குன்மம், மார்பு எரிச்சல் இவை நீக்கும்.

80. பன்னீர் ஆயாசம், முக்குற்றம், மனநோய் நீக்கும்; சந்நி மருந்துகளில் உடன் மருந்தாகச் சேர்க்கப்படும்.

81. பார்லி அரிசி மந்தக்கழிச்சல் கட்டும்; சிறுநீர் பெருக்கும், நோயாளி பசி தணிக்கும்.

82. பிண்ணாக்கு (எள்) உட்புண், சிரங்கு, நமைச்சல், கரப்பான், நீர் மேகம் போக்கும்.

(அ) இலுப்பை கடுவன், புண், கரப்பான், அண்டவீக்கம், முக்குற்றம், எண்ணெய்ச்சிக்கு போக்கும்.

(ஆ) தேங்காய் நமைச்சல், சிரங்கு, புண், கொடுங்கரப்பான், மலப்பூச்சி உண்டாக்கும்.

(இ) வேப்பன் வாத சிலேத்துமம், வாதத் தலைநோய், வாதநோய், முக்குற்றம் நீக்கும்.

83. பிஸ்தாப்பருப்பு உடல்வன்மை, விந்துவளர்ச்சி, பால் சுரப்பு மிகுவிக்கும்.

84. பிங்கான் தசை வளர்ச்சி நீக்கும்.

85. பெருங்காயம் பல்நோய், பல்மூலநோய், பலவகைப் பாம்புநஞ்சு, தேள்நஞ்சு, பூச்சி, செரியாமை, வாத நோய், வயிற்றுநோய், யோனிநோய், மார்புநோய், குன்மங்கள், கருப்பநோய், சூலை, செந்நீர்ப்பூச்சி, சளி நோய், குண்டச்சல் இவை போக்கும்.

86. பேரிச்சன் கர்ச்சூர் பார்க்க.

87. மட்டிப்பால் தலைநோய், நீரேற்றம், வாதநோய், சளி வாந்தி போக்கும்.

88. மயில்துத்தம் (துருசு) புண், கண்ணோய், முக்குற்றம் போக்கும்; வாந்தி, கழிச்சல் உண்டாக்கும்; ஒளி தரும்.

89. மராட்டிப் பூ உள்ளுறுப்பு வன்மை, நாவுணர்ச்சி மிகுக்கும்; பல்வலி, பெரும்பாடு, தலைவலி, கழிச்சல் நீக்கும்.

90. மாசிக்காய் நாநோய், போகா உட்சூடு, கணச்சூடு, பலமேகம் நீக்கும்; உடல் வன்மை தரும்.

91. மான்கொம்பு கைகால் எரிவு, என்புநோய், முக்குற்றம், பெருநாவறட்சி, மார்புநோய், கண்ணோய் இவை போக்கும்.

92. மிருதாரசிங்கி செந்நீர்ப்புண், கரப்பான், கிரந்திக்கூட்டம், பெரும்புண் இவை போக்கும்.

93. மிளகு குளிர்காய்ச்சல், பாண்டு, சளி, கழிச்சல், குன்மம், வாயு, சுவையின்மை, பித்தம், மூலம், சந்நி, அறிவு மயக்கம், மேகம், இருமல், துடைநரம்புநோய், குய்யநோய், செந்நீர்நோய், கழுத்துநோய், காதுநோய், செந்நீர்க் குன்மம், காமாலை, செரியாமை இவை போக்கும்.

(அ) வால்மிளகு முக்குற்றம், குன்மம், நாவறட்சி, வெட்டை இவை போக்கும்; பசியுண்டாக்கும்.

(ஆ) வெள்ளைமிளகு கழிச்சல், ஐ, காய்ச்சல், சீழ்மேகம், இவை நீக்கும்; பசியுண்டாக்கும்.

94. மூசாம்பரம் (கரிய போளம்) செந்நீர்ப்பை நோய், சோபை, குன்மம், முடம், மேகக்கட்டி, கைகால் குத்தல் போக்கும்.

95. வசம்பு பாம்பு நஞ்சு முதலியன, கொடும்புண், ஐவகை வலி, விடபாகநோய், குன்மம், செந்நீர்ப்பித்தம், வாய்

நாற்றம், சூலை, சந்நி, பீலிகம், கால்புற்று, பெரும் பூச்சி இவை போக்கும்.

96. வாலுழுவையரிசி வயிற்றுப்பிடுங்கல், கழிச்சறக்கடுப்பு, பித்தம், இருமல், சக்கைக்கட்டு, தீட்டுநோய் இவை போக்கும்.

97. வாதுமைநெய் வெப்பம், சளிக்குற்றம் போக்கும்; விந்துவுக்கும், ஐம்பொறிகட்கும் ஒளியுண்டாக்கும்.

(அ) பருப்பு விழிப்படலம், புண்கொழுமை நீக்கும்.

(ஆ) பிசின் விந்து தடிப்பிக்கும்; நச்சு மருந்துகள் அமிழ்தாகும், ஈளைக்கோழை தணிக்கும்.

98. வாய்விளங்கம் பாண்டு, குன்மம், சதைவளர்ச்சி, வாயு, பல்நஞ்சு, தலை மூக்கு வயிறு இவற்றில் தெரியா நோய், பவுத்திரப்புண் போக்கும்.

99. விலாமிச்சைவேர் மேகநீர், கண் எரிவு, செந்நீர்ப்பித்தம், நாவறட்சி, மதநோய், மூர்ச்சை, பித்தம், மயக்கம், சோபம், தலைவலி, தீக்காய்ச்சல் போக்கும்.

100. விழலரிசி பித்தம், காய்ச்சல், குடல்வாதம், முக்குற்றம், சீழ்மேகம் போக்கும்

101. வெங்காரம் தவளைச்சொறி, கரப்பான், குன்மங்கள், தினவு, செந்நீர் மூலம், ஒழுக்குக்கழிச்சல், நீரடைப்பு, தொடை நரம்புநோய், பல்நோய், சிறுநீர்நோய், சளி, புழு, பாம்புநஞ்சு, சந்நி இவை போக்கும்.

102. வெட்பாலை அரிசி பித்தம், கடுவன், குடல்வளர்ச்சி, வயிறுப்புல் இவை போக்கும்.

103. வெந்தயம் கணமாந்தம், என்புக்காய்ச்சல், மிகுமேகம், ஈளை, சீதக்கழிச்சல், கழிச்சல், செந்நீர்ப்பித்தம், இருமல், உட்சூடு போக்கும்; விந்து வளரும்.

104. வெள்ளைப்பூண்டு சந்நி, வாதநோய், ஐத்தலைநோய், தாள்வலி, நீரேற்றம், சீதபேதி, உளைமூலம் போக்கும.

கடைச் சரக்குக்கள் (A)

1. அக்கரகாரம் வாயுக்குற்றம், நீர் வேட்கைக் காய்ச்சல் நீக்கும்; இதனை வாயில் அடக்கிக்கொள்ளின் எச்சிலூறும்.

2. அட்டுப்பு பயித்தியம், சூலை, கக்கல், சுவையின்மை இவை நீக்கும்.

3. அதிமதுரம் வெட்டுக் காயங்கள், வாத பித்த ஐகளால் வரும் புண்கள், நீர்விடாய், கண்ணோய், பயித்தியம், விக்கல், வலிகள், வெண்குட்டம், எலும்புருக்கி, நீர்ச்சுருக்கு, வெறி, மூர்ச்சை, விந்துக்கழிவு, புகை இருமல், காய்ச்சல், சோணித வாதம், காமாலை, நஞ்சு, விழைவுநோய், தலைநோய், குய்யநோய் இவை நீக்கும்.

4. அதிவிடயம் கிரந்திகட்டி, சூட்டுக்கழிச்சல், காய்ச்சல், கோழை, எதிரெடுத்தல் இவை போக்கும்.

5. அப்பிரகம் குடலண்டம், பெருவயிறு, வெள்ளை நோய், நீரிழிவு, காய்ச்சல், நமைச்சல், மேகபித்தம், கண்ணோய், வாத நோய் இவை போக்கும்; வீரிய வளர்ச்சி உண்டாக்கும்.

6. அரத்தை

(அ) சிற்றரத்தை எதிரெடுத்தல், பித்தம், கரப்பான், வாயு, தலைநோய், கவம், முக்குற்றம், ஐக்காய்ச்சல், இரைப்பிருமல் இவை போக்கும்.

(ஆ) பேரரத்தை வாதம், இசிவு, வலி, சந்நி, பித்த சீதம், குளிர் காய்ச்சல், கிளைக்கும்புண், நீரேற்றம், பலவகை நஞ்சுகள், தூமைக்கோளாறுகள் இவைதீர்க்கும்; அழகு உண்டாக்கும்.

7. இந்திர கோபப் பூச்சி (ஈயல்) கருமேகம், விந்துப்போக்கு, கக்கி வெளிப்படுத்தாநிற்கும் கோழை இவை நீக்கும்; காயசித்தி விளைக்கும்.

8. இரத்த போளம் அடிபட்டு அதனுல் உண்டாகும் வலியும் புடைப்பும், எழுந்து நிமிர்ந்து நிற்க ஒட்டாத பக்கநோய், மார்புவலி இவை நீக்கும்.

9. உமிலிசாரம் குடல்வாதம், சூலை, குன்மம், சிறுநீர்க்கட்டு இவை நீக்கும்.

10. கடுகுரோகிணி மாந்தம், கணக்காய்ச்சல், கபம், வாதம், கரப்பான், சீதக் கழிச்சல், சக்கைக்கட்டு, முக்குற்றம், புண், வயிற்றுவலி இவை நீக்கும்.

11. கண்டு பாரங்கி (சிறுதேக்கு) முக்குற்ற மிகுதி, இரைப்பு நோய், காய்ச்சல், பித்தம், மூக்குநோய், நீர்க்கோவை, மிகுவாதம், குளிர்காய்ச்சல், உடல்வலி, உட்காந்தல், குரல்கம்மல், மனநோய் இவை போக்கும்.

12. கந்தி உப்பு உடற்பருமை, குடல்வாதம் இவை போக்கும்; மிகுசூடு பண்ணும்.

13. கம்பி உப்பு எட்டு குன்மங்கள், சூதகக் கட்டி, சிறுநீர்க்கட்டு, நீர்ச்சுறுக்கு, ஈளை, சோணித வாதம், கழிச்சல், பெருவயிறு இவை போக்கும்.

14. கருஞ் சிவதை (காரமும் கசப்புமுள்ள கருஞ்சிவதை) எலிக்கடி நஞ்சு, பித்த குன்மம் இவை நீக்கும்; சக்கை வெளிப்படுத்தும்.

15. கருஞ்சீரகம் மண்டைக் கரப்பான், புண், மூக்குச் சிராய் நோய், காய்ச்சல், தலைவலி, கண்வலி இவை போக்கும்.

16. கருநாவி நாவொட்டிக் காய்ச்சல், பெரும்புண்கள், மணிரல் நோய், பூச்சிகள், வல்லைக்கட்டி, பெருவயிறு, வாதக் காய்ச்சல் இவை நீக்கும்.

17. கல்மதம் மிடற்றுநோய், மேகம், கல்லடைப்பு, நீர் அடைப்பு, ஊன் அடைப்பு, நீர்ச்சுறுக்கு, மேக வெட்டை, விந்துப் போக்கு இவை விலக்கும்.

18. கற்கடகசிங்கி (கடுக்காய்ப்பூ) முக்கல், கபம், இருமல், கயம், கிராணி, மூலமுளை, குருதிப்பித்தம், குருதிக்கழிச்சல், குடலிரைச்சல், மேகப்புண், காய்ச்சல், நச்சுக் காய்ச்சல் இவை போக்கும்; வீரியம் உண்டாக்கும்.

19. கற்பாசி (மழையாற் பிறந்த கற்பாசி) நாட்பட்ட மேகம், மிகுசாரக் கழிச்சல் இவைபோக்கும்.

20. கிரந்தி தகரம் பித்த நோய்கள், இரைப்பு நோய்கள், கிரந்தி கட்டிகள் இவை நீக்கும்.

21. குக்கில் காது - உதடு-மூக்கு பற்றிய நோய்கள், கட்டி, காணுக்கடி, மேகப்புண், வாதக் கட்டி, சூலை, நகங்களைப்பற்றிய புண்கள் இவை போக்கும்.

22. குங்குலியம் பெரும்பாடு, மேகம், ஆறுப்புண்கள், எலும் புருக்கி, சிழ்ப்புண் இவை விலக்கும்.

23. குந்திரிக்கம் இருமல், இரைப்பு, மேகக்கட்டி, பூச்சிக் கடிகள், விறுச்சு குட்டம், படைகள், கிரந்தி, நாட்பட்ட சிரங்குகள் இவை நீக்கும்.

24. குரோசாவி ஓமம் மிக்க சிறுநீர், வாதம், வீரியக் கழிவு, புண்கள், அதிசாரக் கழிச்சல், உடற்கடுப்பு, கரப்பான், மிகுதியாகிய கபம் இவை போக்கும்; மிகு மயக்கத்தை யுண்டாக்கும்.

25. கூகை நீறு குய்யநோய், கட்டி, மார்புநோய், கிரிப்புழு, இருமல், ஈளை இவை நீக்கும்; விந்துவளம் உண்டாக்கும்.

26. கோஷ்டம் கண், கவுள், வயிறு, மிடறு, தலை, நா, வாய், இவ்விடங்களினோய்கள், தோடக்காய்ச்சல், வீக்கம், கில்வாதம், முளைமூலம், இரைப்பு, இருமல், எலி-பாம்பு-நாவி முதலிய நஞ்சுகள், மேகக்கட்டி, ஐவாதங்களால் வரும் மிகுதியாகிய கொப்புளங்கள், பூதகணம், குழந்தை கோட்குற்றம், விந்துக் கழிவு,

வெள்ளை, பித்தம் இவை விலக்கும்; கருவுயிர்த்தல் எளிதாக்கும்.

27. சகந்திர பேதி என்புக் காய்ச்சல், நீர்வேட்கைக் காய்ச்சல், குருதிக் கழிச்சல், எதிரெடுத்தல், கவம், சந்நி, கண்ணோய், வீரியப்போக்கு, மேகம் இவை போக்கும்.

28. சதகுப்பை வாதம், பெரும்பாடு, தலைவலி, காதுகுத்தல், நீர் கொள்ளல் (சலதோஷம்), கபநோய், மூலக் கடுப்பு, உட்காய்ச்சல், நாட்பட்ட பீநசம் இவை நீக்கும்.

29. சந்திசாரம் மந்தம், சக்கைக்கட்டு, நீர்க்கட்டு, மண்ணீரல் நோய், மிகுந்த ஒலியுடன் வருமிருமல், வாதவலி, குன்மம், பெருவயிறு, கிராணி இவை போக்கும்.

30. சவ்வியம் (செவ்வியம்) சூலை, சுவையின்மை, சந்நி, பழைய இருமல், ஈளை, பித்தம், குரற்கம்மல், களநோய், நாட்பட்ட காய்ச்சல், எலும்பைப்பற்றி ஏறுகின்ற தாவர நஞ்சு இவை நீக்கும்.

31. சன்ன லவங்கப்பட்டை குளிர்ச்சி உண்டாக்கும்; குருதிக் கிராணி, வயிற்றுக் கடுப்பு, உள்மூலப்புண் இவையகற்றும்.

32. சீனக்காரம் (படிகாரம்) பல்லரணை, யானைக்கால், கண்ணோய், வாதம், கெட்ட ஊன், உள்ளழலை, குன்மம் இவை விலக்கும்.

33. சூந்திரநாவி காய்ச்சல், தலைவலி, சந்நிபாதம், எரிப்பூச்சி, பாம்பு-தேள் நச்சுக்கடி, உட்புண், குறைநோய் இவை நீக்கும்.

34. சேங்கொட்டை புழு, கயம், சூலை, கிரந்தி, திமிர்வாயு, வாத குன்மம், உள்மூலம், புண்ணை விளைக்கும் யானைத் தோல் குட்டம், காணுக்கடி, உணவுநஞ்சு இவை போக்கும்.

35. நான்றிக்காய் (தாணிக்காய்) சிலந்தி நஞ்சு, குரிப்புண், சீழ்மேகம், முக்குற்றக் காய்ச்சல், செந்நீர்ப் பித்தம்,

வாதபித்தக்கலவை, பித்தநீர், உட் சூடு, வாதம் இவை போக்கும்; அழகு, ஒளி உண்டாக்கும்.

36. திப்பிலிமூலம் (கண்டதிப்பிலி, நறுக்குத் திப்பிலி, நறுக்கு மூலம், மோடி என்றும் இதற்குப் பெயர்) நீர் விடாய், பித்தம், மயக்கம், நீங்காக்காய்ச்சல், இருமல், மேகம், குரற்கம்மல், உடலுளைச்சல் இவை போக்கும்.

37. தும்பசாரம் ஈளை, இரைப்பு, வலிப்பு, வாதம், குன்ம நோய் இவை விலக்கும்.

38. நண்டுக்கல் நீர்ச் சுருக்கு, நீரடைப்பு, பெருவயிறு, நீரொழுகு மேகம், வெட்டை, ஐ இவை யகற்றும்.

39. நவாச்சாரம் குன்மவலி, குடற்சூலை, பெருவயிறு, கல்லடைப்பு, தோலின் புலால் நாற்றம், முக்குற்றம், மிகுவாதம் இவை நீக்கும்.

40. நாகணம் (நகம்) தலைவலி, நீரேற்றம், தலை யிடிப்புக் குத்தல், மலட்டுநோய், வீக்கம், நீங்காத கண்ணோய், வயிற்றுநோய் இவை அகற்றும்.

41. நிமிளை (பொன், வெள்ளி, வெண்கலம், செம்பு என்கிற நான்குவித நிமிளைகள் உண்டு) விந்துவை வளர்க்கும்; மிகு பித்தம், சந்நி இவை நீக்கும்.

42. நெல்லிமுள்ளி உட்சூடு, சூதகக் கோளாறு, எலும்புருக்கி, கண்ணோய், நீர்வேட்கை, குருதிப் பித்தம், விந்து கழலல், சிறுநீர்க் கடுப்பு, ஆண்குறிப்புண், பித்தம், எதிரெடுத்தல், வெட்டை இவை விலக்கும்; இதனை அரைத்துத் தலையில் தடவி முழுகக் கண்கள் குளிர்ச்சி பெறும்.

43. நேர்வாளம் சக்கையைக் கழிக்கும் மருந்தில் மிகுமுக்கியமாகிய நேர்வாளப் பருப்பால் குடலிற் றங்கிய பழைய மலமும், அதைப்பற்றிய பன்னோய்களும், வாத நோய்களும் நீங்கும்.

44. பச்சைநாவி குறைநோய், நஞ்சு, சந்நி, குன்மம், என்பு பற்றிய அழலை, விடாய்க்காய்ச்சல் இவையொழிக்கும்.

45. பிசின்பட்டை தசையிலும் சோரியிலும் பரந்து ஊசி போல் குத்திக் குடையும் வாயு, உடற்காந்தல் இவை போக்கும்.

46. பிளப்புச் சீரகம் ஒழியாப் பித்தம், வாத முனைப்பு இவை நீக்கும்; உடற்கு அழகு உண்டாக்கும்.

47. பீதரோகிணி கண்களைப்பற்றி வரும் காசம், படலம் இமையைப்பற்றிய நோய் இவையும் பிறவும் நீக்கும்.

48. புத்திரசீவி விதை மூலம், காய்ச்சல், வெள்ளை, நீர்மேகம், வயிற்றுப்பொருமல், நாவறட்சி இவை போக்கும்; விந்து வளர்க்கும்.

49. புழுகுச்சட்டம் (மணமுள்ளது) மந்தவாயு, பித்தகபம், நஞ்சு இவை போக்கும்; ஒளியும், அழகும், ஆயுள் நிறைவும், திருமகள் அருளும் உண்டாக்கும்.

50. பூநாகம் மிக வூறு விளைக்கும் நாவறட்சி நோய், எட்டு வித கொடிய சந்நி பாத வெப்புநோய்கள், மாவாதம், ஒக்காளம், ஐ இவை நீக்கும்.

51. மயிலிறகுச் சாம்பல் விக்கல், கக்கல் இவை விலக்கும்.

52. மாங்கிசபேதி புறஊன் வளர்ச்சி, விக்கம் உட்சூடு, சூலை, கபம், மண்ணிரல்கட்டி இவை போக்கும்.

53. முசுறுமுட்டை மாவாதம், மந்தம், இசிவு, ஐவகைவலி, நீர்க்கயநோய், சந்நி இவை நீக்கும்.

54. முத்துச் சிப்பி ஈளை, இருமல், கோழையை வெளிப்படுத்துங் கயநோய், மேகக்கட்டி, ஐ இவை விலக்கும்.

55. மெழுகு பக்கவாதம், விக்கம், கபம், ஊதை, விந்துப் போக்கு, தேள்-கூளி-புழு இவைகளால் உண்டாகும் பெரும்புண், வெட்டுப்புண், தீப்புண் இவை போக்கும்.

56. வட்டத்திருப்பி ஐ, நஞ்சு, ஊதை, பித்தம், எலும் புருக்கி, வெள்ளை, பித்தக் காய்ச்சல், கழிச்சல் சிரங்கு இவை யொழிக்கும்; எலும்பாக இளைத்த வர்க்கு ஊனுக்கும்.

57. வாலேந்திர போளம் கில்பிடிப்பு, கயநோய், சொறி, கரப் பான், வயிற்றுநோய் ஆகிய இவை விலக்கும்.

58. வெட்டிவேர் வேர் (செடி) பார்க்க.

59. வெலிச்சப்பிசின் வாயுவாற் பிறந்த சந்நிபாத நோய்கள், மிகுநீர் இவை போக்கும்.

60. வெள்ளி லோத்திரம் நச்சுமர நஞ்சுகள், எலும்புருக்கி, பெருவயிறு, குரற்கம்மல், மறுநோய் இவை தீர்க்கும்.

61. வெள்ளைச்சங்கு செந்நீர்ப்பித்தம், கண்ணோய்கள், வாதக் குற்றம், இசிவு, முளைக்கட்டி இவை தீர்க்கும்; பசி உண்டாக்கும்.

62. வெள்ளை நாவி குட்டம், கடி, சூலை, மார்பைப் பற்றி வரும் பூச்சி நோய், வாதகுன்மம், காய்ச்சல் இவை தீர்க் கும்.

௨௩. நவரத்தினங்களின் குணம்

1. கோமேதகம் வாதபித்தக் கலப்பு, சக்கைக் கட்டு, பசி யின்மை, காய்ச்சற்கேடு நீக்கும்; ஒளிதரும்.

2. நீலம் குதிகால் நோய், மேகநீர், பித்தம், பாண்டு, திகைப்பு போக்கும்; நல்லறிவு மிகுக்கும்; விந்து விளைக்கும்.

3. பவளம் காய்ச்சற் கேடு, சளி, முக்குற்றம், இருமல், சுவையின்மை, பூச்சி நஞ்சு, விந்துக்கேடு, நாவறட்சி, நாவில் சுறசுறப்பு போக்கும்; ஒளி தரும்.

4. புட்பராகம் விந்து மிகுதி, நல்லறிவு, கீர்த்தி இவை தரும்; நோய்க் கூட்டங்கள் நீக்கும்.

5. **மரகதம்** விந்து விளைக்கும்; பேய், புண், பலநஞ்சு இனிப்புநீர் போக்கும்.

6. **மாணிக்கம்** காய்ச்சல், சந்நி குற்றம், மேகம், கண்ணோய், மிகுநாவறட்சி போக்கும்; கவர்ச்சி யுண்டாக்கும்.

7. **முத்து** என்புக்காய்ச்சல், வீக்கம், சுவையின்மை, மெலிவு, விழிநோய், பித்துநோய், நஞ்சு, ஐ, விந்துக் கேடு, கோழை, மனவலியின்மை போக்கும்.

8. **வயிரம்** நோய்கள் பலவும் போக்கும்; அழகுண்டாக்கும்.

9. **வைடூரியம்** ஐவாதக்கெடுதி, சளி, புளியேப்பம், பிடிப்பு, வாதகுன்மம், பித்த நோய்கள், பத்தியக்குற்றநோய் போக்கும்.

௬௬. வீட்டு வெளி நன்மை தீமைகளின் குணங்கள்

1. **தீக்காய்தல்** வாதக்கடுப்பு, சீதளம் இவை விலக்கும்; நாவறட்சி, வெப்பு, செந்நீர்ப்பித்தம், செந்நீர்க் கொதிப்பு மிகுக்கும்.

2. **நிழற் குணம்** குளிர்நிழல்-உடல் பெருக்கும்; அழகுதரும்; கடுப்பு வாதம், மந்தம், சோர்வு உண்டாக்கும்.

3. **மழை மந்தாரம்** தூக்கம், ஒளி, பசி, நாவறட்சி போக்கும்; களிப்பு, நடுக்கல், கீல்வீாயு, இரைப்பு உண்டாக்கும்.

4. **மிகுபேச்சின் கேடு** அறிவு நலம் கெடும்; சாற்றுறுப்பு, செந்நீருறுப்பு சுண்டும்; பித்தம் மிகும்; சளி, இருமல், மேகநீர் உண்டாக்கும்.

5. **விழித்தவுடன் கண்ணாடி பார்த்தல்** வீரியவளர்ச்சி, மகிழ்ச்சி, கவர்ச்சி, அறிவு மிகல் தரும்.

6. **விழித்தவுடன் நீரருந்தல்** விழித்தவுடன் நன்னீரோ, நிசி நீரோ கொள்ளின் பித்த மிகுதி விலகும்; சக்கை நீர்க் கட்டு நீங்கும்; வாத பித்த ஐகள் தத்தம் நிலைகளில் ஒழுங்குபெற நடைபெறும்.

7. விழித்தவுடன் பார்க்கத்தக்கவை தாமரைப்பூ, தங்கம், விளக்கு, கண்ணாடி, பகலவன், புகையிலா நெருப்பு, செஞ்சந்தனம், நீர்நிலை, வயல், முகில்சூழ்மலை, சிவலிங் கம், கற்று, தன்வலக்கை, மனைவி, முழவு இவற்றுள் ஏதேனும் ஒன்று.

8. விழிப்பு - காலைவிழிப்பு அறிவுக்குத் தெளிவு தரும்; பித்த மிகுதி நீக்கும்; முக்குற்றம் மீறச்செய்யும்; செந்நீர்க் குழாய்கள் தூய்மையுறும்.

9. வீட்டுவகைகள்

(அ) மெத்தைவீடு நிலத்தின் வெப்பமும், பூச்சி புழுக் களும் சேரா.

(ஆ) ஓட்டுவீடு குளிர்காற்றும், பனியும் வருத்தும்.

(இ) புல்வீடு மேற்படி இரண்டினும் சிறந்தது.

10. வெயிலின் குணம்

(அ) காலை வெயில் இல்லாத நோய்கள் பிறப்பிக்கும்.

(ஆ) மாலை வெயில் தோன்றிய நோய்கள் தீரும்.

(இ) நடுவெயில் வாதம் சேர்க்கும்; அழகு விலக்கும்; வருத்தம், பசி, பித்தம் உண்டாக்கும்; வியர்வை தோற்றும்; வன்மை தரும்.

௬௫. மரம், செடி, கொடி முதலியவற்றின் பகுதிக் குணம்

1. மரக்கட்டையின் குணம்

(1) அகில் மேற்பூச்சு கிழவர்களின் தளர்ந்த உடலை இறுக்கும்; இதன் மணத்தால் காய்ச்சல் சில நீங்கும்; புகையால் வாந்தி, சுவையின்மை, அயர்ச்சி நீங்கும்.

(2) அழிஞ்சில் மிகுவாதம், மிகுசளி, சீழ்வடியும் பெரு நோய் இவை நீக்கும்; பித்தஞ் செய்யும்.

(3) இருவாட்சி கண்ணொளி, உடல் மணம், அழகு உண்டாக்கும்; உடற்குத்தல், மூர்ச்சை நோய் நீக்கும்.

(4) இலவன் நீரறுகல், எரிசிறுநீர், ஒழுகு மேகநோய் இவை போக்கும்; விந்து, அழகு, ஆண்மை இவை மிகும்.

(5) ஊழலாற்றி பெரும்புண், கொறுக்கைப்புண், சிரங்கு, அரையாப்பு, வெள்ளை, கீல் வாதம், பெருநோய் இவை போக்கும்.

(6) கருநெல்லி ஐநோய், மயக்கம், மலநோய் இவை நீக்கும்; உடல் வலுக்கும்.

(7) சந்தனம் நல்லறிவு, மகிழ்ச்சி, செல்வம், மேனியொளி இவை உண்டாக்கும்; சிழ்வெள்ளை நீக்கும்.

(8) சரக்கோன்றை பெருநோய், பூச்சிநோய், கீல் பிடிப்பு, வாத ஐ கலப்பு, சக்கைநஞ்சு, சுவையின்மை, போக்கும்; சக்கை கழிக்கும்.

(9) பாலை வாதநோய்கள், பித்தநோய், உயிர்ப்பு நோய், முக்குற்றம் இவை போக்கும்.

(10) மருதன் நீரிழிவு, வெள்ளை, நாவறட்சி, மயக்கம், காய்ச்சல் அயர்ச்சி, பெருநோய், பூச்சி நோய், வயிற்றுநோய், வறட்சூலை போக்கும்.

(11) மலைவேம்பு மலட்டுப்பூச்சி, குன்மம், ஓடு வாயு போக்கும்.

(12) மாவிலிங்கம் காய்ச்சல், கடிக்குற்றம், பெருவாதம், பாம்புகடி போக்கும்.

(13) முள்முருக்கு (கலியாண முருக்கு) வாந்தி, வயிற்று வலி, பித்தக் காய்ச்சல், அக்கரம், வாய்வேக்காடு இவை போக்கும்; மிகுவன்மை யுண்டாக்கும்.

(14) மூங்கில் குதகக்கட்டு, காய்ச்சல், வாதம், இரைப்பு போக்கும்.

(15) வன்னி வாத ஐ, முக்குற்றம், நஞ்சு, கபம், சொறி இவை நீக்கும்.

(16) வாகை பசியுண்டாக்கும்; பாம்பு-பூச்சி நஞ்சு, புண், சொறி, நாவறட்சிக் காய்ச்சல், அக்கரம் நீக்கும்.

கருவாகை புண், வெப்பு, மிகுவாதம், பூச்சி, ஈளை இவை போக்கும்.

(17) விளா இருமல், இரைப்பு, சுவையின்மை, நாவறட்சி, பித்தம் இவை நீக்கும்.

(18) வெட்பாலை வாதவலி, முக்குற்றம் இவை போக்கும்.

(19) வேங்கை பொடியிருமல், வெள்ளை, உளைமாந்தை, புண், ஈளை, சீழ்வெள்ளை நீக்கும்; கண்ணொளியும் சக்கைக் கழிச்சலும் உண்டாக்கும்.

(20) வேப்பன் காய்ச்சல், மிகுவாதம், மூலகணமாந்தம், எரிபூச்சி, வயிற்றுநோய், சிதறு சக்கைக் கழிச்சல் நீக்கும்.

2. செடிக்கட்டையின் குணம்

(1) அந்தரத்தாமரை (ஆகாயத்தாமரை) அளிபுண், குட்டம், கரப்பான், மார்புக்குள் பூச்சிக்கூடு இவை போக்கும்.

(2) ஆடு தீண்டாப் பாளை சக்கை - சளி - செந்நீர் இவற்றின் பூச்சிகள், சிலந்தி நஞ்சு, கருங்குட்டம், கரப்பான், வாதநோய், கொப்புளக் குட்டம் இவை நீக்கும்; வன்மை, விந்துவளந் தரும்.

(3) ஆவாரை எல்லா மேகநீர் நோய்கள், நீர் எரிச்சல் இவை நீக்கும்.

(4) ஈச்சுரமூலி சோபை நோய்கள், சந்நிகள், பல நஞ்சுகள் நீக்கும்; உரத்த குரல் உண்டாக்கும்.

(5) உருத்திர சடை செந்நீர் வாந்தி, பித்தக் காய்ச்சல், சுவையின்மை போக்கும்.

(6) ஊமத்தை நாய்கடிப் புண், குழிப்புண், கட்டிகள், நஞ்சு, முக்குற்றம் இவை நீக்கும்.

கருவூமத்தை விந்துகட்டும்; அழகுதரும்; பெருநோய், வியர்வைத்தினவு, பயித்தியக்காய்ச்சல் இவை நீக்கும்.

(7) எழுத்தாணிப் பூண்டு சக்கைக்கட்டு, குடலிற்சளி, சீதக் கழிச்சற் கடுப்பு, கரப்பான், சொறி சிரங்கு இவை போக்கும்.

(8) கஞ்சாங் கோரை மாந்தக்கழிச்சல், பசி மந்தம், காய்ச்சல், கணச்சூடு, மூலத்தினவு, வெள்ளை, இருமல் இவை நீக்கும்.

(9) கண்டங்கத்திரி இருமல், இரைப்பு, பசியின்மை, திக்காய்ச்சல், கயம், ஐநோய், பல குற்றங்கள், வாதநோய் இவை போக்கும்.

(10) கரிசாலை (கையாந்தகரை பார்க்க.)

(11) கரும்பு கரும்பைத் துண்டுகளாக நறுக்கி, அனலில் சிறிது வெந்தபின் நைய இடித்துப் பிழிந்த சாறு வாய்குமட்டல், விக்கல், பித்தம் நீக்கும்.

நாணற் கரும்பு சாறு—வாத பயித்தியம், வாந்தி, சுவையின்மை, உடற்பாரிப்பு, குன்மம், கோழை, பாண்டு மீருமற் காக்கும்.

(12) கல்தாமரை விந்து, உடல்வன்மை பெருக்கும்; குட்டம நீக்கும்.

(13) கல்லுருவி பல கட்டி கரைக்கும்; செந்நீர்த்தடிப்பு, சிரங்கு, வெள்ளை, பாம்பு நஞ்சு இவை நீக்கும்.

(14) கழுதைத் தும்பை அரையாப்பு, வாதநோய், செந்நீர்ச் சீதக் கடுப்பு இவை போக்கும்.

(15) கறிமுள்ளி கோழைக்கட்டு, இருமல், இரைப்புப் பெருமூச்சு, ஐக் காய்ச்சல் நீக்கும்.

(16) கிரந்தி நாயகம் ஐ, பாம்புகடி, கண்ணோய், புண் நீக்கும்.

(17) கீழ்வாய்நெல்லி சீதக்கட்டு, பித்தநஞ்சு, கண்ணோய், செந்நீர்க்கழிச்சல், இனிப்பு நீர், வெள்ளை, காமாலை, சூடு, நாட்பட்ட மேகம், புண் இவை போக்கும்.

(18) குடியோட்டிப் பூண்டு பெரும்புண், கரப்பான், சிறு சிரங்கு, சில நஞ்சுகள், இருமல், மேகவாயு, நீர் மேகம், பாம்பு நஞ்சு, பல்நோய் இவை விலக்கும்.

(19) குதிரைக் குளம்படி குதிரை நடைவாயு, சந்நி, தினவு இவை விலக்கும்.

(20) கோட்டைக் கரந்தை வெள்ளை, ஒழுக்கு மேகம், சொறி, சிரங்கு, கரப்பான் நீக்கும்; மறிபட்ட சக்கை வெளிப்படுத்தும்.

(21) கொள்ளுக்காய் வேளை வாதம், நாவறட்சி, பல்நோய் சொள்ளு, கபம் இவை போக்கும்.

(22) சங்கங் குப்பி கரப்பான், கிரந்தி, கருங்குட்டம், கரு மேகம், கருப்பைப்புண், செவ்வாப்புக்கட்டி, வெள்ளை, சொறி சிரங்கு, கீல் வீக்கக் குத்தல், பெருவாதம், ஐக்குற்றம், வறட்டிருமல், பாம்பு நஞ்சு, செந்நீர்ப் பூச்சி இவை போக்கும்; பித்தஞ் செய்யும்.

(23) சணப்பன் மிகு பித்தம், சில வாதநோய்கள், இளங் கருப்பம் நீக்கும்.

(24) சந்திர காந்தி பித்த எரிவு, நீர்க்கடுப்பு, தொப்புள் வலி நீக்கும்.

(25) சிவகரந்தை வாந்தி, சுவையின்மை நீக்கும்; பசி கொடுக்கும்; விந்துகட்டும்; வாதமந்தம், கரப்பான், கலப்புநோய், இருமல் இவை நீக்கும்; வனப்புண்டாக்கும்.

(26) சிவனார் வேம்பு கொடும்புண், நாட்பட்டபுண், தோற்குட்டம், பிளவை, பாம்புகடி, பெருவாதம், குறைநோய் பசிமந்தம் நீக்கும்; அழகு தரும்.

(27) சுளுக்கு நாயகம் முக்குற்றம், உடற்சுளுக்கு, கைகாற் சுளுக்கு, செந்நீர்க்கறடு, சுளுக்குச் செந்நீர்த் தடிப்பு இவை நீக்கும்.

(28) சூரிய காந்தி சக்கை வாய்ப்பக்கவாதம், நீரேற்றம் இவை நீக்கும்.

(29) செம்முள்ளி சளிப்பெருக்கம், மாந்தகணம், ஐ, குழந்தைக் காய்ச்சல் இவை போக்கும்.

(30) செருப்படை மிகுவாதம், பசிமந்தம், வெள்ளை, இசிவு, சூலைநோய், வாதகுன்மம் இவை போக்கும்.

(31) தகரை படர்தாமரை, கரப்பான், பசிமந்தம், என்புக் காய்ச்சல் இவை போக்கும்.

(32) துளசி ஐ, வயிறளைவு, என்புக் காய்ச்சல், நாவறட்சி, மந்தக் காய்ச்சல், சுவையின்மை இவை போக்கும்.

கல் துளசி திக்காய்ச்சல், பரவுகட்டி, வண்டுநஞ்சு, கோழை இருமல் இவை நீக்கும்.

கருந்துளசி இருமல், தொண்டைக் குறுகுறு, இரைப்பு, பூச்சி, நீரேற்றம், கேவல், மார்புசளி, குத்தல், நஞ்சு, சந்நி இவை நீக்கும்.

செந்துளசி நஞ்சு, சளி, பூச்சிநஞ்சு, முக்குற்ற நோய்கள் போக்கும்.

நாய்த்துளசி கோழை, பொடியிருமல், முக்குற்றம், அழலை, ஐநோய் போக்கும்; உடல் வளர்க்கும்.

நிலத்துளசி முலைப்பால் மந்தம், வாதக்காய்ச்சல், பித்தக் காய்ச்சல், பித்தகணம், கணச்சூடு, மந்தக்காய்ச்சல், குளிர்காய்ச்சல் நீக்கும்.

முள்துளசி எலிநஞ்சு, வெட்டுப்புண், சிறுநஞ்சு போக்கும்.

(33) தேட்கொடுக்கு நமைச்சல், பழம்புண், கடுவன், கணமாந்தம், சிறுநஞ்சு இவை போக்கும்.

(34) நல்வேளை தலைநோய், உடல்நோய், குடைச்சல், ஐ, மார்புவலி, வாதக்குற்றம், மிகுசளி, வீக்கம் இவை போக்கும்; சூடு, பசி, பித்தம், நாக்கு நோய் இவை உண்டாக்கும்.

நாய்வேளை வாதப்பொருமல், உடற்கடுப்பு, குத்தல், காதுநோய், ஐப்பீநசம் இவை போக்கும்.

(35) நிலத்துத்தி மூலநோய், பரவுகட்டி இவை போக்கும்.

(36) நிலவிளா கணக்காய்ச்சல், மிகுநாவறட்சி, மிகு பித்தம், மாருவெள்ளை, புண்காய்ச்சல் இவை நீக்கும்.

(37) நிலவேம்பு வாதக்காய்ச்சல், மேகநீர்க் கோவை, காய்ச்சற் குற்றம், மயக்கம் இவை நீக்கும்; தெளிவுண்டாக்கும்

(38) நின்றூற் சிணுங்கி பாம்புகடி நஞ்சு நீக்கும்.

(39) பல்லிப்பூண்டு பாம்புகடி, காய்ச்சற் குற்றம், வாத பித்தக் கலப்பு, பல்வலி இவைபோக்கும்.

(40) பற்பாடகம் கபவாதக்காய்ச்சல், பித்த நாவறட்சி, பயித்தியம், பித்தக்குற்றம் இவைபோக்கும்; விழிக் குளிர்ச்சி யுண்டாக்கும்.

(41) பில்லாஞ்சி (கறுப்பு) குச்சியினால் பல்துலக்கில் வீரிய வளர்ச்சி உண்டாம்; இலை-மூலச்செந்நீர் தடுக்கும்; பழம்-மயிர் உதிராமற் செய்யும்.

(42) பிளவைக்கொல்லி சிறு சிரங்கு, கரப்பான், ஒழுக்கு வெள்ளை, உளைமாந்தை, பிளவைக்கட்டி இவை போக்கும்.

(43) பேயகத்தி (சீமையகத்தி) சாற்றுறுப்புப் பூச்சிகள், சொறி, தினவு, எச்சற்றழும்பு, படர் தாமரை இவை நீக்கும்; செந்நீர் நரம்பு ஒளிரும்.

(44) பேய்மிரட்டி கணமாந்தம், கழிச்சல், வயிற்றுநோய், கரப்பான், கொடுங்காய்ச்சல் இவைபோக்கும்.

(45) மணித்தக்காளி (கறுப்பு) கொடு வெப்பம், குரற் கம்மல், காய்ச்சல் போக்கும்; பாலர் பண்டுவத்திற்குதவும்.

,, (சிவப்பு) புண், உட்காய்ச்சல், வாதசளி போக்கும்.

(46) மயிர் மாணிக்கம் ஒழுக்கு மேகம், வெள்ளை, கயம் இவை நீக்கும்; முறைப்படி சூதஞ் சேர்த்துண்ணப் புண் ஆறும்.

(47) மருக்கொழுந்து கண்படலம், சளி, உட்சூடு நீக்கும்; மிகுபசி, உடல்வன்மை தரும்.

(48) மலைதாங்கி வாத நோய்கள், காய்ச்சல், வாத சயித்தியம் காதுநோய், உடல் பாரிப்பு இவை நீக்கும்.

(49) வட்டக்கிலுகிலுப்பை சினைப்பு, சிரங்கு, கண்ட மாலை, பற்பல வீக்கம், புண்கள், பசி மந்தம் இவை நீக்கும்.

(50) வெள்ளை கிலுகிலுப்பை மர உயிர் நஞ்சுகள், கொடு சந்நி இவை நீக்கும்.

(51) வெள்ளறுகு குன்மம், வாதநோய், குடல் வளர்ச்சி, இல்பிடிப்பு, நரம்புகளைப்பற்றி வரும் கிரந்தி, தினவு, சிரங்கு இவைபோக்கும்.

3. கொடிக்கட்டையின் குணம்

(1) அம்மான் பச்சரிசி எரிபுண், சக்கைக் கட்டு, வெள்ளைக் கசிவு, உடல் தடிப்பு, நமைச்சல் இவை போக்கும்.

(2) ஆதொண்டை மண்டைக் குடைச்சல், வாத பீநசம், சளி, வாதக் கடுப்பு நீக்கும்.

(3) உப்பிலாங்கொடி குழந்தை மாந்தம், கழிச்சல், நீங்காக் காய்ச்சல் நீக்கும்.

(4) ஊசிமல்லிகை கணமாந்தம், வயிற்றுப் பொருமல், குழந்தைகள் செந்நீர்ப் பிணிகள், காய்ச்சல், வீக்கம் இவை போக்கும்.

(5) கர்ப்பூரவள்ளி பொடியிருமல், அம்மைக் கொப்புளம், ஐ, புறநீர்க் கோவை, காய்ச்சல், மார்புச்சளி, வாதக் கடுப்பு போக்கும்.

(6) குதிரைவாலி மூலக்கடுப்பு, கழிச்சல், காய்ச்சலால் வரும் நாவறட்சி, இடுப்புவலி வாதம், மேகம், வெள்ளை, இருமல், கட்டி, சிலந்தி, கண் மங்கல், கோழை, பசிமந்தம், வாதசளி, தினவு போக்கும்.

(7) கையாந்தகரை (கரசலாங்கண்ணி) குரற்கம்மல், காமாலை, குட்டம், வீக்கம், பாண்டு, பல்நோய் போக்கும்; அழகு, வன்மை தரும்.

(8) கொத்தான் ஒழுக்குவெள்ளை, நீர்ச்சுருக்கு, பித்தம், அயர்ச்சி நீக்கும்.

(9) கோவை

(அ) அப்பைக்கோவை நீரடைப்பு நீக்கும்.

(ஆ) கருங்கோவை மேகப்புண் நீக்கும்.

(இ) கற்கோவை வீக்கம் நீக்கும்.

(ஈ) கொல்லன் கோவை சூலைவலி, உடல்வெளிறல், கீல் வாயு, முக்குற்றம்,அக்கி, உட்சூடு. கண்ட

மாலை, குடல் நோய், குட்டம், பெருநஞ்சு, கரப்பான், நமைச்சல் இவை போக்கும்.

(உ) செங்கோவை இனிப்புச் சிறுநீர் நீக்கும்.

(ஊ) வரிக்கோவை நஞ்சு நீக்கும்.

(10) சிறுகுறிஞ்சா வாத சீதம், சூதகச் சிக்கல், என்புக் காய்ச்சல், காணுக்கடி, நாவறட்சி, வாதக் காய்ச்சல், சந்நிக்காய்ச்சல், கபக்காய்ச்சல் இவை நீக்கும்.

(11) தொட்டாற்சுருங்கி மேகச் சிறுநீர் நீக்கும்; ஓடுவாதத் தடிப்பைக் கரைக்கும்.

(12) நஞ்சறுப்பான் பாம்பு நஞ்சு, தானே உட்கொள்ளு நஞ்சு, இடுமருந்து, மரநஞ்சு, பிறநஞ்சுக் குற்றம் போக்கும்.

(13) நத்தைச் சூரி பலபிணி நீக்கும்; விந்துசூட்டுக் கழிச்சல், சீதபேதி இவை நீக்கும்.

(14) நாய்ப்பாகல் மூக்குநோய் நீக்கும்.

(15) நீர்மேல் நெருப்பு பெருவாதம், திமிர்வாதம் இவை நீக்கும்.

(16) நெருஞ்சில் சொட்டுச் சிறுநீர், காய்ச்சல் வெப்பு, நீரடைப்பு, முடக்குவாதம், வெள்ளை, நீர்ச்சுருக்கு, முக்குற்றநோய், புண், காய்ச்சல், நாவறட்சி, சூடு இவை நீக்கும்.

செப்பு நெருஞ்சில் முக்குற்றம், காய்ச்சல், விந்துமேகம், நீடித்த சூடு நீக்கும்.

யானை நெருஞ்சில் வெள்ளை, வெண்குட்டம், நீரடைப்பு, என்புருக்கி, உடல் எரிவு, உழலை, நாவறட்சி, மயக்கம் இவை போக்கும்.

(17) பிரண்டை சக்கைவாய்த் தினவு, செந்நீர் மூலம் நீக்கும்; மருந்தாகச் செய்யின் பசிமந்தம், குன்மம், வாத அதிசாரக் கழிச்சல், முளைமூலம்,

சளி, செந்நீர்ப்பேதி, காலசதி நீக்கும்; பசி மிகும்

(18) பேய்ப்புடல் பித்த கபக்காய்ச்சல், காமாலை, அம்மைக்கொப்புளம், நாவறட்சி, பெருமயக்கம் இவை போக்கும்.

(19) பொடுதலை சீதக்கழிச்சல், இருமல், கழிச்சல், சூலை, வெள்ளை, வாதநோய், இவை போக்கும்; உடல் வலுக்கும்; மயிர் உதிர்தல் நீக்கும்.

(20) பொன்னுங்காணி விழிநோய், கண் புகைச்சல், கருவிழி நோய், வாதக் குற்றம், சூடு, பீலிகம், மூலம் போக்கும்; உடல் ஒளிரும்.

(21) மிளகரணை சளி மிகுதல், செரியாமை, பித்தசூலை, ஈளை, இருமல், இரைப்பு, வயிற்றுப்பொருமல் இவை போக்கும்.

(22) முசுட்டை மிகுவாதம், கவம், வெள்ளை, தினவு, கரப்பான், சிறு சிரங்கு இவை நீக்கும்; சக்கை இறக்கும்.

பொன் முசுட்டை வாதவலி, மயக்கம், வெண்சீதம், நமைச்சல், உட்சூடு நீக்கும்; உணவு மணமுண்டாக்கும்.

(23) முடக்கற்றான் கல்பிடிப்பு, சிணைப்பு, சிரங்கு, கரப்பான், கால்வாதம், சக்கைச் சிக்கல் இவை போக்கும்.

(24) மூக்குறட்டை செரியாமை, நமைச்சல், வாதநோய், இவை நீக்கும்; பித்தம், கழிச்சல் உண்டாக்கும்: அழகு தரும்.

(25) வல்லாரை அக்கர நோய், கழிச்சல், செந்நீர்க் கழிச்சல் கடுப்பு இவை நீக்கும்.

4. புல்கட்டையின் குணம்

(1) அறுகம்புல் முக்குற்றம், கோழை, கண்ணோய், தலைநோய், கண் புகைச்சல், செந்நீர்ப் பித்தம், மருந்துச்சூடு போக்கும்; அறிவு தரும்.

(2) கற்றாழை மேகம், கபம், புழுச்சூலை, பெருநோய், மூலம், உன்மத்தம், மூல ஓடு, வயிற்றுநோய், தினவு, நீர்ச்சுருக்கு இவை போக்கும்.

செங்கற்றாழை உட்சூடு போக்கும்.

பேய்க்கற்றாழை நீரிழிவு, உடலெரிப்பு, சூடு போக்கும்.

(3) காளான் (பருமை) கயம், புண், நாவறட்சி நீக்கும்; குடல் வளர்ச்சி, விக்கல், மிகுபித்தம், பெருவாதம், கழிச்சல், கண் புகைச்சல் இவை உண்டாக்கும்.

(4) சதுரக்கள்ளி கரப்பான், நமைச்சல், காணாக்கடி, சளி, வாதகுன்மம், கபநோய் இவை நீக்கும்; சக்கை கழிக்கும்.

(5) தருப்பை பல குற்றம், சிறுநஞ்சு, சளி, காய்ச்சல், நாவறட்சி, நமைச்சல் இவை போக்கும்.

(6) நாகதாளி உயிர் நஞ்சு, மரநஞ்சு, பெருவாதம் இவை போக்கும்.

5. மரம் முதலியவற்றின் பல பகுதிகள் - மரம் :

(1) அசோகுப்பட்டை பாலோடு சேர்த்துக் குடிநீர் செய்து அருந்தப் பெரும்பாடு, சீதபேதி இவை குணப்படுத்தும்.

(2) அரசன் வேர்ப்பட்டை - தோற்புண் போக்கும்; விதை - விந்துக்கேடு போக்கும்; கொழுந்து - பெருநாவறட்சி போக்கும்; மகரந்தம் - உடற்சூடு, முக்குற்றம் இவை போக்கும்.

(3) ஆல் பால், விழுது, பழம், பூ, வித்து, பட்டை, இலை - இவைகள் வெள்ளை, வயிற்றுக் கடுப்பு, மேகநீர் இவை நீக்கும். விழுது - பற்களை இறுகச்செய்யும்; வெள்ளை நீக்கும்; கொழுந்து-செந்நீர்க் கழிச்சலை நீக்கும்; புல்லுருவி - உணவு நஞ்சு நோய்கள் போக்கும்.

(4) இலந்தை வேர் - அயர்ச்சி நீக்கும்; உடற்சூடு உண்டாக்கும்; இலை-சீழ்மூலம், செந்நீர்க் கழிச்சல், உடலெரிச்சல், வயிற்றுக் கடுப்பு, வெள்ளை இவை போக்கும்.

(5) நறுவிலி இலை - மூலச்செந்நீர் போக்கும்; வேர் - என்புருக்கிநோய் போக்கும்; பழம்-செந்நீர்ப் பித்தம், வெள்ளை இவை நீக்கும்.

(6) நுணா பட்டை - கரப்பான், சளிக்காய்ச்சல், புண், சிரங்கு, இவை நீக்கும்; இலை - மந்தம், மேகம் விலக்கும்; ஒளி தரும்.

(7) பசுமுன்னை வேர் - வாதம், முதிரேப்பம் போக்கும்; இலை-வாதங்கள் நீக்கும்; உணவைச் செலுத்தும்.

(8) பூவரசு பழுப்பிலை, விதை, பூ, பட்டை, காய் - இவைகள் புழுப்புண், கழிச்சல், பெருநோய், காணாக் கடி, குத்தல், நஞ்சு, பெருவயிறு, வீக்கம், கரப்பான், சிரங்கு, நீர் மேகம் முதலியவற்றைப் போக்கும்; நூறாண்டுப் பூவரசன் வேர் - நாட்பட்ட பெருநோயை ஒழிக்கும்.

(9) மாதுளை வேர், பிஞ்சு - இவை வாந்தி, கழிச்சல் நீக்கும்; பழம் - வீரிய வளர்ச்சி யுண்டாக்கும்; நாவறட்சி போக்கும்; இலை, காய், மலர்-இவை முற்கூறிய நோய்கள் நீக்கும்.

(10) முருங்கை பிஞ்சு - முக்குற்றம் நீக்கும்; பூ - கண் குளிர்ச்சியும், விந்து வன்மையும் உண்டாக்கும்;

இலை - காய்ச்சல் போக்கும்; பட்டை - நஞ்சு நீக்கும்; வேர் - வாதம் போக்கும்.

(11) வாழை தண்டு - குடலிற் சிக்கியமயிர், தோல் நஞ்சு நீக்கும்; பூ - வெள்ளை நீக்கும்; பிஞ்சு - மூலக் கடுப்பு நீக்கும்; காய் - உடல் முழுதும் வாயு வாக்கும்.

(12) வில்வம் தளிர் - நீர் மேகம் நீக்கும்; பூ-மந்தம் போக்கும்; பிஞ்சு - குன்மம் போக்கும்; பழம் - கண்ணிருளைப் போக்கும்; பிசின் - விந்துக் குறை நீக்கும்.

6. செடி:

(1) ஆவாரை வேர், பட்டை, இலை, பூ, காய் - மேகச் சிறுநீர், வெள்ளை, உட்சூடு, புண், கழிச்சல், என்புருக்கி நோய், நாவறட்சி இவை போக்கும்.

(2) கண்டங்கத்திரி வேர், இலை - பூ, காய், பழம், விதை, பட்டை - இவை நீரேற்றம், மூக்கொழுக்கு, ஈளை, பெருமூச்சு இவை போக்கும்.

(3) சங்கன் வேர், இலை - இவை சோபை, கரப்பான், மிகுதாகம், புண், குன்மம், கீல் வீக்கம், மிகு வாதம், பித்தம், பலநஞ்சு போக்கும்; கண் துலக்கம், மிகுபசி, செந்நீர் வளர்ச்சி யுண்டாக்கும்.

(4) நாயுருவி வேர், இலை - செந்நீர் மூலம், கழிச்சல், சளிநோய், வியர்வை, தந்திவெள்ளை இவை விலக்கும்; விதை-பசிநீக்கும்; சமூலச் சாம்பல்-கருவுயிர்த்த உதிரச் சிக்கலை நீக்கும்.

7. கொடி:

(1) சுரை இலை - வீக்கம், நீர்ச்சிக்கல் இவை விலக்கும்; கொடி - பயித்திய நோய்களைப் போக்கும்.

(2) தூதுளை இலை - உண்டிக்குச் சுவைதரும்; பூ - விந்து வளர்க்கும்; காய் - முக்குற்றம் நீக்கும்; வேர், கொடி - இவை பெருமூச்சு முதலிய ஐநோய்களைப் போக்கும்.

(3) நரளை இலை - மாதர்செந்நீர்க் குன்மக்கட்டி போக்கும்; கிழங்கு - வெள்ளை, கரப்பான், அளிபுண், மூலம் இவை போக்கும்.

(4) வெண்குன்றி விதை - விந்து வளர்க்கும், வேர் — நாவறட்சி போக்கும் ; இலை - சுளுக்கு போக்கும்; காய், கொடி - பேய் அகற்றும்.

8. மரம் முதலியவற்றின் கிழங்குகள்.

கிழங்கு—(மரம்)

(1) பனை என்புச்சூடு, மேகம் போக்கும்; குளிர்ச்சி, வனப்பு தரும்.

(2) நிலப்பனை மேகச்சிறுநீர் வெப்பம், வெண் குட்டம் போக்கும்; விலாக்குத்தல், ஒழுக்குவெள்ளை, கரும்புள்ளிநோய் போக்கும்.

9. கிழங்கு—(செடி)

(1) அமுக்கிரா சுளை, வாதச்சூலை, வாதக்கரப்பான், பாண்டு, காய்ச்சல், வீக்கம், நீரேற்றம் இவை போக்கும் ; பசியுண்டாக்கும்.

(2) இஞ்சி சுளை, சளி, வெள்ளோக்காளம், ஐ காய்ச்சல் வாதக் கழிச்சல், வாத சூலை, மிகுவாதம் போக்கும்; பசியுண்டாக்கும்.

(3) உருளைக்கிழங்கு உடல் வளம் தரும்; தும்மல் அடக்கும்; வெந்நீரழலை ஆற்றும்; வாயு கண்டிக்கும்; சிறிது மந்தந் தரும்.

(4) கருடன் அரையாப்பு, வெள்ளை, கொறுக்கு, சிறு புண் இவை நீக்கும் ; நாகங்கள் நடுங்கும்.

(5) கருனை - காட்டுக்கருனை வாதவெள்ளை, முளை மூலம், காய்ச்சற் குற்றம் போக்கும்; மிகு பசியும், கரப்பானும் உண்டாக்கும்.

காருக்கருனை ஐநோய், வாதநோய் மூல முளை, பசிமந்தம் இவை நீக்கும்.

காறு கருனை கரப்பான், பொடிச் சிரங்கு, சொறி, உட்புண், பசிமந்தம், சளிக்கோழை, நமைச்சல் இவை யுண்டாக்கும்; மூலநோய் நீக்கும்.

(6) கலப்பைக் கிழங்கு பாம்பு நஞ்சு இறக்கும்; தலைவலி, கழுத்துவலி, வயிற்றுவலி, சந்நி, கரப்பான் முதலிய நீக்கும்.

(7) கொட்டி தேமல், வெள்ளை, உடற்கடுப்பு, உட்சூடு இவை நீக்கும்.

(8) கோவை முக்குற்றம், சந்நிக்குத்தல், மிகு பித்தம், தோல் குட்டம், முகவாய் நோய், இரைப்பு, கோழை, இனிப்பு நீர் இவை நீக்கும்.

(9) செங்கழுநீர் இருமல், பித்தநோய், மேகம், இவை நீக்கும்; கண்ணுக்குக் குளிர்ச்சி தரும்.

(10) செவ்வல்லி பித்த வெள்ளை விலக்கும்.

(11) சேம்பு கோழைகட்டும்; மருந்தின் நலம் கெடும்.

(12) தண்ணீர்விட்டான் பெருஞ் சிறுநீர், பழஞ்சுரம், மேசாம நோய், வெள்ளை, உட்சூடு இவை நீக்கும்.

(13) தாமரை கண்ணொளி, குளிர்ச்சி தரும்; ஈளை, சொறி, வயிற்றுக் கடுப்பு இவை நீக்கும்.

(14) நரிவெங்காயம் (காட்டீருள்ளி) நாகநஞ்சு, கோழை, இரைப்பு, மூலம், பவுத்திரம் இவை போக்கும்.

(15) நிலப்பூசினி இளைத்த உள்ளுறுப்புக்களுக்கு வலிவுண்டாக்கும்; மேனியொளி, அறிவு உண்டாக்கும்; சக்கைக்கட்டு நீக்கும்.

(16) பிரப்பன் பல்நோய், மிகுவாதம், கில்பிடிப்பு, ஐ இவை நீக்கும்.

(17) புளிநரளை முளைமூலம் போக்கும்; உணவிற் சுவை தரும்.

(18) பூச்சக்கரை வெள்ளை, காய்ச்சல் போக்கும்; உடல் பூரிக்கும்.

(19) மஞ்சள் பசியுண்டாக்கும், வாந்தி, மிகுபித்தசளி, தலைவலி, நீரேற்றம், வெள்ளை, மூக்குநோய் வலி, வீக்கம், வண்டு கடி நஞ்சு, பெரும்புண் இவை போக்கும்.

கஸ்தூரிமஞ்சள் (மணமஞ்சள்) பெரும்புண், கரப்பான், பூச்சிநோய், பசிமந்தம் போக்கும்; வீரியமும், அறிவும் வளரும்.

மரமஞ்சள் மூக்குகணம், மூலநோய், சுவையின்மை கணக்காய்ச்சல், உட்காய்ச்சல் இவை விலக்கும்.

(20) மாவலி (ஆள்வள்ளி—பெருநன்னாரி) உட்சூடு, மிகு பித்தம், ஐ நோய், மிகுவாதம் இவை நீக்கும். உடற்சூடு வளர்க்கும்.

(21) வள்ளி—பெருவள்ளி (ஆள்வள்ளி) முக்குற்றக் கலப்பு, வாதமூலம், வாத குன்மம், பசிமந்தம் இவை ஆக்கும்.

சிறுவள்ளி மந்தம், கரப்பான், ஐ வளர்ச்சி, முளை மூலம் உண்டாக்கும்; பசி கெடும்.

காய்வள்ளி (வெற்றிலை வள்ளி) வாதநோய், தோற் புண் உண்டாக்கும்.

10. கிழங்கு - (புல்)

(1) அறுகன் தணியா வெப்பம், முக்குற்ற நோய் நீக்கும்; அழகு தரும்.

(2) கீட்டி வெள்ளை, ஐ நோய். போக்கும்; பசி, பித்தம் தணிக்கும்.

(3) கோரை நளிர்காய்ச்சல், செந்நீர்ப் பித்தம், வாதக் காய்ச்சல், கழிச்சல், பயித்தியம், நாவறட்சி, சளி, குதிகால்வாயு, மூர்ச்சை, வாந்தி, இன்னும் பலவகைத் துன்ப நோய்களும் போக்கும்.

(4) வெங்காயம் உடல்சூடு, மூலம், சிரங்கு, செந்நீர் பித்தம், முகவாய் நோய், நாவறட்சி, வெப்பக் கழிச்சல் நீக்கும்; பசிமந்தம், ஐ, இருமல், உண்டாக்கும்.

(5) கிழங்கு (பொது) மூலவாயு வளரும்; கருணைக் கிழங்குகளால் மூலநோய் நீங்கும்.

11. வேர் - (மரம்)

(1) அகத்தி வெள்ளை, நாவறட்சி, உடல் - உள்ளங்கை- ஆண்குறி - நாளம் - ஐம்பொறி இவற்றின் எரிச்சல் நீக்கும்.

(2) அருநெல்லி காய்ச்சல், சுவையின்மை, முக்குற்றம், வாந்தி, ஐவாதம் இவை போக்கும்.

(3) இலுப்பை புண், புரைப்புண், வயிற்றுக்கடுப்பு, பெருமூத்திரம், செந்நீர்க் கழிச்சல், பசி மந்தம், சுவையின்மை, வாதசூலை, காய்ச்சல், விந்துக்குறை, நாவறட்சி, அயர்ச்சி இவைநீக்கும் : வெப்புத்தரும்; தலைமயிருக்காகாது.

(4) எட்டி பெரும்பாம்புநஞ்சு, பயித்தியம், குன்மம் நீக்கும்.

(5) கருங்காலி சக்கைப்பூச்சி, இனிப்புநீர், குட்டம், செந்நீர்ப்பேதி இவை நீக்கும்.

(6) கருவேல் செந்நீர்க்கடுப்பு, பசிமந்தம், பெருவாதம், கரப்பான், வாதக் கழிச்சல் இவைபோக்கும்.

(7) சண்பகம் சூடு, காய்ச்சல், கண் குற்றம் இவை நீக்கும்; பசி தரும்.

(8) நாவல் வாதம், கரப்பான், புண், பெருஞ்சிறுநீர், செந்நீர்ச் சீதபேதி, வாதக் காய்ச்சல், மேக வளர்ச்சி போக்கும்.

(9) நெல்லி வாந்தி, சுவையின்மை, முக்குற்றம், அபத்தியக்குற்றம், மிகு ஐ இவை நீக்கும்; முக்குற்ற சமனம், சக்கைப்போக்கு தரும்.

(10) பாதிரி இனிப்புநீர், கரப்பான், நாவறட்சி, கண் - காது - கை - கால் எரிச்சல், மேகபிளவை, பெரும்புண், மூலம், சொறி, ஐவாதம், பசிமந்தம் இவைபோக்கும்.

(11) புங்கன் வாதக்குடைச்சல், முக்குற்ற மூர்ச்சை, பெருங்காய்ச்சல், வாயு, குன்மம், செந்நீர் உறுப்பு நோய்கள், புண், புரையோடல், பாம்புநஞ்சு இவை போக்கும்.

(12) மா சீதச்செந்நீர்க் கழிச்சல், வயிற்றுக் கடுப்பு, வாந்தி இவை போக்கும்.

(13) வில்வம் வாதகுன்மம், சளி, சோபை, நாவறட்சி, நீர்க்கோவை, ஐவாதம், உடற்கடுப்பு, பசிமந்தம், சுவையின்மை, வெப்புக் கழிச்சல், விக்கல், பித்தக் காய்ச்சல், வாந்தி, உடல் வறட்சி இவை நீக்கும், அழகு, உடல் வளர்ச்சியுண்டாக்கும்.

12. வேர் - (செடி)

(1) அவுரி பலநஞ்சு, காய்ச்சல், மூர்ச்சை, வெள்ளை, வயிற்றுநோய் இவை போக்கும்.

(2) ஆடாதோடை இருமல், பசிமந்தம், மிகு பித்தம், கொடு மூச்சு, கழுத்து வலி இவை போக்கும்.

(3) களா நஞ்சுநோய், பயித்தியம், சளி, சளி வியர்வை, மிகு நாவறட்சி, கருவுயிர்ப்பழுக்கு, பசிமந்தம் இவை நீக்கும்.

(4) சங்கம் கோழை, சளிக்காய்ச்சல், வாதக்கடுப்பு, ஐ சோபை, சிரங்கு, உட்காய்ச்சல், வாதம், பூச்சி நோய் நீக்கும்.

(5) சிற்றுமுட்டி என்புக் காய்ச்சல், பித்தநோய் நீக்கும், கண்ணொளி தரும், தயிலத்துக் குதவும்.

பேராமுட்டி வாதக்காய்ச்சல், நாவறட்சி, மாந்த கணம், நளிர்காய்ச்சல், பித்தம் போக்கும்.

(6) வெட்டி நாவறட்சி. சோம நோய், காமாலை, செந் நீர்ப்பித்தம், காய்ச்சல், பரவுகுட்டம், தலை நோய், கழுத்துநோய், விந்துகுறை, அறிவு மயக்கம், தீப்புண், முலைச்சிலந்தி, முக்குற்ற மூர்ச்சை, கண்ணோய், வித்துருநிக்கட்டி நீக்கும்.

13. வேர் - (கொடி)

(1) காஞ்சொறி - கருங்காஞ் சொறி பொடியிருமல், நீரேற்றம், ஐக்காய்ச்சல், சுவையின்மை இவைநீக்கும்.

சிறுகாஞ் சொறி ஐ உயிர்ப்பு, காய்ச்சல், கரப்பான், புண், வாதநோய், நாவறட்சி இவை நீக்கும்.

பெருங்காஞ் சொறி இருமல், இரைப்பு, ஐக் காய்ச்சல் இவை போக்கும்.

(2) காக்கட்டான்

கருங்காக்கட்டான் மாந்தம், சக்கைப்பூச்சி, வாதம், ஐ, சக்கைக்கட்டு இவை நீக்கும்.

வெண்காக்கட்டான் (மாமூலி) வெள்ளை, தலைநோய் கண்ணோய், கருநோய், நீக்கும் சக்கை கழிக் கும்.

(3) காட்டுமல்லி காய்ச்சல், நாவறட்சி, பசிமந்தம், கழிச் சல் நீக்கும்.

(4) கொடிவேலி (சித்திரமூலம்) கட்டி, புண், சொறி சிரங்கு, வாதம், அரையாப்பு, குத்தல், சோபை, மூலம், செந்நீர்க்கட்டு, நீரேற்றம், பெருவயிறு இவை போக்கும்.

(5) சிறுகுறிஞ்சா சிறுநஞ்சு, வாதக்காய்ச்சல், ஈளை, இரைப்பு நீக்கும்.

(6) நன்னாரி வேரை அரைத்துத் தேன் கலந்துண்ணில் மிகுபித்தம் போக்கும்; கற்றாழைச்சோற்றோ டுண்ண வண்டுகடி போக்கும்; இன்னும் நீரேற்றம், பித்தம், நாவறட்சி, வாய்ச்சுரப்பு, சூடு, இனிப்பு நீர், சிரங்கு, காய்ச்சல் வேகம் இவை போக்கும்.

(7) பாதிரிவேர் இனிப்புச் சிறுநீர், கரப்பான், உழலை, கண் காது கை கால் எரிச்சல், மேகக்கட்டி, பெரும்புண், மூலம், புடை, ஐவாதம், பசிமந்தம் இவை போக்கும்.

(8) பேய்ச்சுரை நாக நஞ்சு வேகம், பெருநஞ்சு, கோழை, ஈளை நீக்கும்; வாந்தியுண்டாக்கும்.

(9) முக்காவேளைவேர் நாவறட்சி, பசிமந்தம், கழிச்சல், வெள்ளை, வெப்பம், சோற்று வெறுப்பு இவை நீக்கும்.

(10) முசுமுசுக்கை இறுகிய கோழை, சிறுநஞ்சு, பெருநஞ்சு, வாந்தி, மார்புநோய், குன்மம், பித்தம் இவை போக்கும்.

14. வேர்—(புல்)

(1) ஐந்து (பஞ்ச) மூலம் திப்பிலி மூலம், பேரரத்தை, கொடிவேலிவேர், சுக்கு, கண்டுபரங்கி இவ்வைந்தும் கொடுநோய்களை நீக்கும்.

சிறுபஞ்சமூலம் சிறுவழுதுணம், சிறு நெருஞ்சில், சிறுமல்லிகை, கண்டங்கத்திரி, பெருமல்லிகை

இவைகளின் வேர் ஐந்தும் பற்பல நோய்களைப் போக்கும்.

பெரும்பஞ்சமூலம் பாதிரி, வாகை, பெருங்குமிழம், வில்வம், தழுதாழை இவ்வேர்கள் ஐந்தும் சிற்சில நோய்கள் போக்கும்.

(2) விலாமிச்சை (பச்சை) வெட்டிவேர் முக்குற்றம், நாவறட்சி, பெருநோய், உயிர்ப்பு நோய், உடற்கடுப்பு, பசிமந்தம், சூட்டுக் காய்ச்சல், கொழுப்பு உறுப்புப் பூச்சி இவைநீக்கும்; அழகுண்டாம்.

15. வேர்ப் பட்டை - (மரம்)

(1) அத்திக் கள்ளு இதனில் சீனிச்சர்க்கரையாவது பேயன் வாழைக் கள்ளாவது கலந்து நாள்தோறும் காலையில் உண்டுவர, என்பு மேகம், உட்சூடு, மூர்ச்சை, நாவறட்சி இவை நீக்கும்.

அத்தி சந்திக் கடுப்பு, செந்நீர்ப்போக்கு, செந்நீர்க்கழிச்சல், புண், தந்தி வெள்ளை இவை போக்கும்.

(2) எருக்கு சந்நி, வாதம், பலநஞ்சு போக்கும்.

(3) கருங்காலி வெள்ளைச்சிறுநீர், பல்நோய், இருமல், பெருமூச்சு நீக்கும்.

(4) கருவேல் இரசவேக்காடு, காய்ச்சல், பித்தம் போக்கும்; பல்லிறுக்கும்.

(5) கள்ளி நரம்புச் சிலந்தி, முக்குற்றக் கலப்பு, மிகு வாதம் போக்கும்.

(6) கொஞ்சி பாலர் மந்தம், வயிற்றுப் பொருமல், கணச்சூடு, வாதநோய் இவை போக்கும்.

(7) நாவல் வாய்நோய், இருமல், பெரும்பாடு, ஈளை, மச்சம் போக்கும்.

(8) நொச்சில் ஐவாதங்களைப் போக்கும்.

(9) புளியமரம் உளமாந்தை, குன்மம், விடாக்கழிச்சல், காய்ச்சல், செரியாமை நீக்கும்; பித்தம், பசி வளர்க்கும்.

(10) மாவிலிங்கு வாதம், சந்நி, நீரடைப்பு போக்கும்.

(11) முருங்கை வேர்ப் பட்டை - சளி, ஐவாதக் காய்ச்சல் போக்கும்; மரப்பட்டை - மிகுவாதம், சிலநஞ்சு நீக்கும்.

16. பிசின்கள்—(மரம்)

(1) ஆவாரை மிகுமூத்திரம், வெள்ளை, வாதநீர்ச்சுருக்கு இவை போக்கும்.

(2) இலவம் வெள்ளை, சிறுநீர்க்கடுப்பு, உட்காய்ச்சல், நீர்ச்சுருக்குவேகம் இவை நீக்கும்.

(3) கருங்காலி கருங்கரப்பான், மேகச்சிறுநீர், பெரும்பாடு இவை நீக்கும்; விந்து வளர்க்கும்.

(4) கருவேல் நீர்த்த விந்து, எரிச்சற் சீழ்வெள்ளை இவை போக்கும்; அழகு, வன்மை. யுண்டாக்கும்.

(5) புற்பிசின் மார்புக்கு வலிவுதரும்; நீர்த்தவிந்து போக்கும்; உடல் வன்மை தரும்.

(6) மலைவேம்பு கருங்கரப்பான், மேகக்கட்டி, நீர்மந்தக் கழிச்சல் நீக்கும்; விந்து வளர்க்கும்.

(7) மா பெரும்பாடு, செந்நீர்கழிச்சல், வாதவெள்ளை இவைநீக்கும்.

(8) முருங்கை மிகு சிறுநீர், நீர்த்தவிந்து, கலப்புவாதம் இவை நீக்கும்; அழகு உண்டாக்கும்.

(9) வாகை வெள்ளை, சிரங்கு, மேகக்கட்டி இவை நீக்கும்; வன்மை, அழகு உண்டாக்கும்.

(10) விளா நீண்ட கழிச்சல், வெள்ளை, பெரும்பாடு, மிகு சிறு நீர் இவை போக்கும.

17. இலைகள்—(மரம்)

(1) அகத்தி இடுமருந்து, பயித்தியம் நீக்கும்; கடுவன், வாயு உண்டாக்கும்; சோறு செரிக்கும்.

(2) ஈச்சு—சிற்றீச்சு குருத்து - செந்நீர் வாதகுன்மம் போக்கும்.

பேரீச்சு குருத்து - ஐக்குன்மம் போக்கும்.

(3) கருவேப்பிலை சுவையின்மை, சீதபேதி வயிற்றளைவு பழங்காய்ச்சல், பயித்தியம் இவை போக்கும்.

(4) கருவேல் கொழுந்து - தயிரில் அரைத்துக் குடிக்கில் நச்சு வேகம் நீங்கும்; முலைப்பாலில் அரைத்து அடைதட்டி வெதுப்பி ஒற்றடமிடில் கண் சிவப்பு மாறும்.

(5) தெங்கு குருத்தால் சளித்துன்பம், செந்நீர் மூலம் நீங்கும்.

(6) பனை குருத்தால் செந்நீர் மூலம், கழிச்சல் உண்டாகும்.

(7) பிராயன் இலை சீதபேதி, விடாக்கழிச்சல், செந்நீர்ப் போக்கு இவை நீக்கும்.

(8) புளி அளிந்தபுண், சோபை, பாண்டு, கண்சிவப்பு இவை போக்கும்.

(9) மரியங்கொழுந்து சுவையின்மை, வாயூறல், வாந்தி, செந்நீர்க் கழிச்சல், சீதபேதி இவை போக்கும்.

(10) முருங்கை ஈர்க்கு சேங்கொட்டை வீறு நீக்கும்; உடற் கெட்டநீரை வடித்து விடும்.

(11) மூங்கில் குடற்சூலை, வயிற்று நோய், செந்நீர்த் தடிப்பு கருவுயிர்ப்பழுக்கு இவை நீக்கும்.

(12) வாதநாராயண இலை வாதவலி, குடைச்சல், கீல்வாதம் முதலிய நீக்கும்.

(13) வேம்பு புழுக்கள், பெருநோய், மாந்தம், பெருநஞ்சு, காய்ச்சல், அம்மைக்கொப்புளம் இவை போக்கும்.

14. இலைகள்—செடி:

(1) அவுரி பல நஞ்சுகள், வாதக்காய்ச்சல், காமாலை, மாந்தம், ஐ, ஐ வாதம், கீல்வாதம், பாம்பு நஞ்சு இவை நீக்கும்; உடற்குப் பொன்னிறந் தரும்.

(2) ஆடாதோடை சளி, வாதக் குற்றம், பல காய்ச்சல், ஐ வாதம், வயிற்றுநோய் இவை நீக்கும்.

(3) ஆமணக்கு—செவ்வாமணக்கு வயிற்று நோய், செரியா மந்தம், பெருவாதம், உடற்கடுப்பு இவை போக்கும்.

வெள்ளாமணக்கு பசிமந்தம், வாதவலி, மார்புநோய், சக்கைக்கட்டு இவை போக்கும்.

(4) எருக்கு எலிநஞ்சு, பெருநோய், ஐ, பூச்சிநோய், ஐவகைவலி, கீல்வீக்கம், மிகுவாதம், பாம்பு நஞ்சு, பசிமந்தம், சக்கைக்கட்டு இவை போக்கும்.

(5) கருஞ்செம்பை கட்டி, கரப்பான், வெள்ளை, ஐப் பித்தம் இவை போக்கும்.

(6) காட்டாமணக்கு மேகக்கட்டி, புண், கரப்பான், பீலிகம், குன்மக்கட்டி, ஐவாதக் குத்தல், தலைவலி, பெரும்புண், உள்மூலம், உள்ளுருக்கி வெள்ளை இவை போக்கும். விந்து வளர்க்கும்.

(7) காரை புளியிட்டுக் கடைந்த காரையிலை, செந்நீர்க் கடுப்பு போக்கும்.

(8) குப்பைமேனி பல்நோய், தீப்புண், பலநஞ்சு, வயிற்று வலி, வாதம், செந்நீர் மூலம், நமைச்சல், குத்தல், இரைப்பு, பீநசம், சளி இவை நீக்கும்.

(10) சின்னி—சிறுசின்னி வண்டுகடி, காணுக்கடி, இடு மருந்து, வெள்ளை, கணக்காய்ச்சல், பசிமந்தம் இவை போக்கும்.

பெருஞ்சின்னி காணுக்கடி, பல்லுயிர் நஞ்சு இவை நீக்கும்.

(11) செம்பை வாதக்கட்டி, சோபை, நீரேற்றம் (உடல்) ஐவாதம், இவை போக்கும்,

(12) சேம்பு புளியிட்டுக் கடைந்த சேம்பிலை உள்மூலம் நீக்கும்.

(13) தவசுமுருங்கை பீநசம், முகவாய்நோய், சளி, ஈளை, பொடி யிருமல் இவை நீக்கும்.

(14) தழுதாழை தொடை நரம்பு நோய், மூக்கொழுக்கு, சொறி, சிரங்கு, வாதம், சளிக்காய்ச்சல், உடற் குடைச்சல் நீக்கும்; பித்த முண்டாக்கும்.

(15) துத்தி ஆமணக்கு நெய்யில் வதக்கிக்கட்ட மூல நோய், கட்டி-புண்முளை, பூச்சிப்புண், போக்கும்; எவ்விதமாவது சமைத்து உண்ணில் பல நோய்களும் தணியும்.

(16) தும்பை நாகநஞ்சு, வாதம், தலைவலி, சளி, பசிமந்தம், சந்நிபோக்கும்; புளியிட்டுக் கடைந்து உணவோடுண்ணில் வெள்ளை, கண்புகை, கைகால்அசதி, நாவறட்சி, சோம்பல் இவை யுண்டாம்.

(17) நொச்சில் - கருநொச்சில் வாதவலி, மூக்குநோய், சளி, மண்டைக் குடைச்சல், தலைவலி இவை நீக்கும்.
வெண்ணொச்சில் பெருவாதம், பீநசம், காய்ச்சல், இரைப்பு, பல்வலி, முக்குற்றம், இருமல், நீரேற்றம், சளித் தலைநோய் இவை போக்கும்.

(18) பருத்தி இலையையாவது மொக்கையாவது கால் பலம் அரைத்து அரையாழாக்குப் பசுவின் பாலில் கரைத்துண்ணில் சீழ்மேகம், செந்நீர்ப் பித்தம் ,புண், சோபை—இவை நீக்கும்.

(19) பாவட்டை ஐவாதம், வாதசளி, இளைப்பு, முக்குற்றம், இவை போக்கும்; பசியுண்டாக்கும்.

(20) புகையிலை வாய்வறட்சி, உடன்மென்மை, பித்தம், விந்துக் குறை-இவை விளைக்கும்; நல்லமருந்தை முறிக்கும்.

(21) பெரியா நங்கை பித்தநோய், சக்கை மந்தம், நீக்கும்.
சிறியாநங்கை உடல் வனப்பு உண்டாக்கும்.

(22) மிளகுத்தக்காளி பசிமந்தம், வீக்கம், வாந்தி, கால் வாதம், காய்ச்சல், சோமநோய், பாண்டு, விக்கல், முக்குற்றம், மேகச்சொறி, வெள்ளை, உட்சூடு நீக்கும்.

(23) முசற்காதிலை குடலண்ட வீக்கம், கைகால் இல்வீக்கம் நீக்கும்;

(24) முள்ளங்கி வாதம், பித்தம், பூச்சிநோய், மார்பெரிச்சல் இவை யுண்டாக்கும்; வயிற்றுநோய் அடக்கும்.
சுவற்று முள்ளங்கி நீர்க்கட்டு, மார்புநோய், மிகு வாதம் இவை போக்கும்.

(25) விராலி கனத்த கட்டி, வீக்கம் போக்கும்,

(26) விழுதி கரப்பான், வெள்ளை, கட்டி, குத்தல், பசிமந்தம், சக்கைவாய்க் கிருமி, கெடுமலம் போக்கும். சக்கை கழிக்கும்.

15. இலை—கொடி:

(1) அவரை தலைநோய், கழிச்சல், வாந்திபேதி, சிரங்கும் பசியுண்டாக்கும்.

(2) ஊசிப்பாலை வெள்ளை, ஆண்குறி வெப்பு நீக்கும்; கண்குளிர்ச்சி, உடல் வளப்பம் உண்டாக்கும்.
கறிப்பாலை வெள்ளை வெப்பு, சீழ்மேகக் காய்ச்சல், மிகு பித்தம் இவை நீக்கும்; விந்து வளரும்; மருந்து கெடுக்கும்.

(3) எலிக்காதிலை காய்ச்சல் நாவறட்சி, நீர்க்கடுப்பு, நீரிழிவு இவை தணிக்கும்.

(4) கழற்சி அண்டவாதம், சூலைக்கட்டு, வெள்ளைக்காய்ச்சல்,பல குன்மம், உள்ளழலை-இவை போக்கும்.

(5) காராமணி சமைத்துண்டால் வாத நோய், வாதமூலம், நீங்காக் கழிச்சல் உண்டாக்கும்.

(6) கோழியவரை வயிற்றுக்கட்டி, வயிற்றுநோய், குடல் வாதம் இவை போக்கும்.

(7) கோவை இருமல், வாதம், பெரும்புண், சிரங்கு உடற்சூடு, நீரடைப்பு இவை போக்கும்; கண் குளிர்ச்சி யுண்டாக்கும்.

(8) சுரை சோபை, உடல் பாரிப்பு, முக்குற்றம் போக்கும்; சக்கை இளகி இறங்கும்.

(9) தூதுளை காது மந்தம், ஐக்காதுவலி, இருமல், நமைச்சல், பெருவயிறு, பசிமந்தம், முக்குற்றம், குத்தல், விந்துக்குறை, மேலுளைப்பு— இவை நீக்கும்.

(10) பறங்கி மிகுபித்தம், வாதம், நாவறட்சி, இரைகின்ற கழிச்சல், உடல் படபடப்பு, பூச்சி இவை உண்டாக்கும்.

(11) பாகல் பூச்சிநோய், முக்குற்றம், நீக்கும்; கழிச்சல் உண்டாக்கும்.

(12) பூனைக்காலி சிறுபூனைக்காலி வண்டுக்கடி, மந்தம், ஐ, கோழைக்கட்டு, ஈளை, இவை போக்கும்.

(13) முசுமுசுக்கை ஈளை, கோழை, பெருமூச்சு, புகை கம்மல், நீரேற்றம், இவை நீக்கும்.

(14) வரிக்கும்மட்டி செந்நீர்ப் பூச்சி, மந்தம், செந்நீர்ப் பித்தம், பாம்பு நஞ்சு இவை கெடுக்கும்.

கம்மாறு வெற்றிலை நீரேற்றம், தலைப்பளு, சந்நி, பசிமந்தம், தொண்டைக்கம்மல், வயிற்றுவலி, வயிற்றுப்புசம்—இவை போக்கும்.

(15) வெற்றிலை சளி, ஐயம், காணுக்கடி, முக்குற்றம், இவை நீக்கும்.

(16) வேலிப்பருத்தி (உத்தாமணி) வாதம், நச்சு, சந்நி, முக்குற்றம், வாதகுன்மம், உடல் குடைச்சல், குத்தல், நடுக்கல், பெருமூச்சு, தடிப்புகள் பசிமந்தம் இவை நீக்கும்; பசி யுண்டாக்கும்.

3871

கழக வெளியீடு : ௪௬௯

பல்பொருட் குணநூல்

Published by :

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.
6, CORAL MERCHANT STREET, MADRAS, 1.

Head Office :

24, EAST CAR STREET, THIRUNELVELI.

விலை ரூ 1/4